வெளியீடு 30-3-2007 Issued 30-3-2007

775
04/07/07
04/07/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, டிசம்பர் 7, 2006—தொகுதி 18—எண் 4

Thursday the 7th December, 2006 —Volume 18—No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...e Assembly Secretariat, Chennai - 600 009

V2:1,3:p06
P06.18 4
227441

[Price Rs. 3.00

33-...

**7-12-2006**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 257-299 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (முதலாவது பட்டியல்) | 299-361 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) திருவரங்கத்தில் திறக்கப்படவிருந்த பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டதாக வந்த செய்தி | 362-365 |
| (ஆ) தமிழகத்தில் வேளாண் விதைகளில் மரபணு சோதனை | 365-383 |
| **3. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடத்திய முதலமைச்சருக்குப் பாராட்டுத் தீர்மானம்** | |
| திரு. கு. செல்வம் | 384-386 |
| **4. அரசினர் தனித் தீர்மானம்—** | |
| இலங்கைத் தமிழர்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க மத்திய அரசைக் கோருதல் | 387-399 |
| திரு. ஜி.கே. மணி | 387-390, 393-394 |
| திரு. டி. சுதர்சனம் | 391-392 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 392-393 |
| திரு. கு. ஹசன் அலி | 394-396 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 396-399 |

பக்கங்கள்

5. கவன ஈர்ப்பு—

வேட்டைக்காரன்புதூர் மற்றும் சேத்துமடை அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமனம் — 400-404

6. அறிக்கைகள் அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு — 404

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 — 405

(ஆ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 — 405-406

(இ) திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006 — 406-407

(ஈ) கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006 — 407

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2006 — 408-414

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 408,412-413, 414

திரு. சி. ஞானசேகரன் — 408,409-412

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2006 — 415-416

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 415,416

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 — 417-419

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் — 418,419





பக்கங்கள்

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

(ஈ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 — 419-431

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 419,425-429, 430

திரு. டி. சுதர்சனம் — 420-422

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் — 422-424

திரு. என். நன்மாறன் — 424-425

திரு. ஜி.கே. மணி — 429

(உ) திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006 — 431-433

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 432,433

(ஊ) கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006 — 434-435

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 434,435

9. அரசினர் தீர்மானம்—

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் — 416-417

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் — 437

10. அறிவிப்புகள்—

(அ) திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) — 431

(ஆ) கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) — 433

பக்கங்கள்

11. மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க இயலாதிருந்த ஊராட்சிகளுக்குத் தேர்தலை நடத்தி, தலைவர்களைத் தேர்வு செய்தும், உயர்நீதிமன்றத்தில் தமிழில் வழக்காடுவதற்கு வழிவகையும் செய்த முதலமைச்சருக்குப் பேரவைத் தலைவரின் பாராட்டும், நன்றியும் — 436

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 437-445

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### கார்த்திகை 21, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

### 2006 டிசம்பர் 7, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

> "நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
> இல்லாண்மை ஆக்கிக் கொளல்"

நல்ல முறையில் ஆளும் திறமை பெற்றவர், தான் பிறந்த குடிக்கே பெருமை சேர்ப்பவராவார்.

### 1. வினாக்கள்–விடைகள்

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**21—**

#### இரப்பர் தொழிற்சாலை

***716—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் சிறந்த வகை இரப்பரைக் கொண்டு, கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2006 டிசம்பர் 7

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அருகில் செண்பகராமன்புதூர் என்ற இடத்தில் இரப்பர் தொழிற் பூங்கா என்ற திட்டத்தைக் கூட்டுத் துறையில் அமைத்திட டிட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தை இந்த ஆண்டின் இறுதிக்குள் செயல்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ஜா. ஜாண் ஜேகப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள இரப்பர் தொழில்கள் பூங்கா என்ற திட்டத்தைக் குமரி மாவட்ட மக்கள் சார்பாக வரவேற்கின்றேன்; நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். அதேநேரத்தில், கன்னியாகுமரி மாவட்டம், படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள மாவட்டம். ஆனால், வேலைவாய்ப்பு மிகமிகக் குறைவு. வேலை நியமனங்களில் மாநில seniority முறை கைவிடப்பட்டதால், பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம். நாகர்கோவில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில், 1989 ஆம் ஆண்டு நிலையில்தான் seniority இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பின்னணியில், 'கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு இரப்பர் தொழிற்சாலை அமைக்கப்படும்; மத்திய அரசின் உதவியோடு 300 கோடி ரூபாய் திட்டத்தில் அமைக்கப்படும்' என்று 1989 ஆம் ஆண்டு தாங்களே அறிவித்துள்ளீர்கள். அந்த அறிவிப்பு, தற்போது நடைமுறைப்படுத்தப்படும் என்று அந்த மாவட்ட மக்கள், குறிப்பாக படித்த இளைஞர்கள் பெரும் எதிர்பார்ப்போடு இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்ற முறையிலும், பின்தங்கிய மாவட்டங்களுக்குச் சிறப்பு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்ற பொது நியதியின் அடிப்படையிலும், மத்திய அரசின் உதவியோடு, கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைவுபடுத்தியதைப்போல, கடந்த காலத்தில் தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்பொழுதும் ஆட்சி புரிந்த நேரத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்தகைய ஒரு இரப்பர் தொழிற் பூங்கா தொடங்குவதற்கான முயற்சிகள் [illegible] அதற்கென இதுவரை 150 ஏக்கர் நிலமும் [illegible]து. மேலும் 100 ஏக்கர் நிலமும் வாங்குகின்ற



2006 டிசம்பர் 7]

பணியிலே ஈடுபட்டு, 250 ஏக்கர் நிலத்தில், அந்த இரப்பர் தொழிற் பூங்காவை அமைப்பது என்கின்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அந்த வட்டாரத்தில் இந்தத் தொழிற்சாலை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நான் நன்றாக அறிவேன். படித்தவர்கள் நிறைந்த மாவட்டம் என்று சொன்னார். படித்தவர்கள் நிரம்ப இருந்தால் இரப்பரும் தேவைப்படும். (சிரிப்பு) ஆகவே, நிச்சயமாக அந்தத் தொழிற் பூங்கா விரைவிலே அமைய அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலை அமைப்பதற்கான பணிகளை ஆரம்பிப்பேன் என்று சொன்ன நம்முடைய முத்தமிழ் அறிஞர், தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மாவட்டத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளும் அதேநேரத்தில் இரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் எப்போது தொடங்கப்பட்டது? அதற்கு எத்தனை ரூபாய் மதிப்பீடு என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியிருக்கிறேன். கடந்த காலத்தில் தி.மு.கழக ஆட்சியிலேதான் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தத் திட்டத்திற்கு முதல் முதலீட்டு மதிப்பு என்று ஏற்கெனவே ஓர் உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப்போல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அல்ல, முதலீட்டு மதிப்பு 14.5 கோடி ரூபாய்தான் ஆரம்ப காலத்து முதலீட்டு மதிப்பாகக் கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு என்னென்ன தொழிற்சாலைகள் தொடங்குவதற்கான MoU-கள் கையெழுத்து ஆகியுள்ளன. கடந்த கால ஆட்சியில் எத்தனை ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

227441
சென்னை-600 009
D
V2'1,5'1906.
P06.18.4

[2006 டிசம்பர் 7

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு மே திங்களில் இந்த ஆட்சி அமைந்த பிறகு இதுவரையிலே 7-6-2006 அன்று அமெரிக்க நாட்டைச் சேர்ந்த Motorola நிறுவனத்தோடு 135 கோடி ரூபாய் முதலீட்டில் திருப்பெரும்புதூரில் Cell Phone தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவதற்கான MoU கையெழுத்தாகியிருக்கிறது. இதன்மூலம் நேரடியாக 3,560 பேருக்கும், மறைமுகமாக 10,680 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

அடுத்து 7-8-2006 அன்று Apollo Tyres நிறுவனத்தோடு 520 கோடி ரூபாய் முதலீட்டில் Radial Tyre தயாரிக்கும் தொழிற்சாலை ஓரகடத்தில் நிறுவுவதற்கு MoU கையெழுத்தாகியிருக்கிறது. இதன்மூலம் நேரடியாக 2,000 பேருக்கும், மறைமுகமாக 6,000 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

பின்னர் 18-8-2006 அன்று அமெரிக்க நாட்டைச் சேர்ந்த Tessolve நிறுவனத்தோடு 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் திருப்பெரும்புதூரில் மின்னணுக் கருவிகள் தயாரித்தல் மற்றும் பரிசோதிப்பதற்கான தொழிற்சாலை நிறுவ MoU கையெழுத்தாகியிருக்கிறது. இதன்மூலம் நேரடியாக 1,700 பேருக்கும், மறைமுகமாக 5,100 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

14-9-2006 அன்று அமெரிக்க நாட்டைச் சேர்ந்த Dell Computer நிறுவனத்தோடு 280 கோடி ரூபாய் முதலீட்டில் திருப்பெரும்புதூரில் கணினி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ MoU கையெழுத்தானது. இத்தொழிற்சாலைமூலம் நேரடியாக 1,100 பேருக்கும், மறைமுகமாக 4,000 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

19-9-2006 அன்று தைவான் நாட்டைச் சேர்ந்த Growth-Link நிறுவனத்தோடு ரூபாய் 300 கோடி முதலீட்டில் செய்யாறு பகுதியில் காலணி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவ MoU கையெழுத்தாகியுள்ளது. இந்தத் தொழிற்சாலைமூலம் நேரடியாக 15,000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.

10-11-2006 அன்று கொரியா நாட்டைச் சேர்ந்த Samsung நிறுவனத்தோடு ரூபாய் 450 கோடி முதலீட்டில் திருப்பெரும்புதூரில் தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்பதனப் பெட்டிகள் போன்ற வீட்டு உபயோகக் கருவிகள் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றும் கணினி Monitor-கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் நிறுவிட MoU கையெழுத்தாகியுள்ளது. இதன்மூலம் நேரடியாக 2,500 பேருக்கும், மறைமுகமாக 1,500 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.



2006 டிசம்பர் 7]

எனவே, இந்த 6 மாத காலத்தில் இந்த ஆட்சி அமைந்த பிறகு 6 பெரிய நிறுவனங்களோடு 2,685 கோடி ரூபாய்க்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றின்மூலம் நேரடியாக 25,860 பேருக்கும், மறைமுகமாக 27,280 பேருக்கும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்க இருக்கிற இரப்பர் தொழில் நிறுவனத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இந்தத் தொழிற்சாலை தொடங்குவதாக அறிவிக்கப்பட்டு, நீண்ட ஆண்டுகள் ஆகின்றன. மத்திய அரசு உதவியோடு தொடங்கப்படக்கூடிய தொழிற் பூங்கா என்று சொல்லப்பட்டு, கடந்த காலங்களிலே, அது நிலுவையிலே போடப்பட்டுவிட்டது. எங்களைப் போன்றவர்கள், நாங்களெல்லாம்கூட. நாகர்கோவில் சென்ற நேரத்தில், அதைத் தொடர்ந்து வலியுறுத்தினோம். இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கப்படும் என்ற நல்ல செய்தியைச் சொல்லியதற்கு, உள்ளபடியே நாங்கள் வரவேற்று, பாராட்டுகிறோம். இந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதனாலே நிறைய பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று சொல்லப்பட்டாலும்கூட, அதனுடைய மதிப்பீடு மிகக் குறைவாக இருக்கிறது. ஏனென்று சொன்னால், இந்தக் குறைந்த மதிப்பீட்டில் தொடங்கக்கூடிய தொழிற்சாலையில், வேலைவாய்ப்பு எண்ணிக்கை குறைவாகக் கிடைக்கும்.

அதுமட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்திலே கிடைக்கக்கூடிய இரப்பர் தரமான இரப்பர். அது ஏற்றுமதிக்கு உகந்ததாக இருக்கும். அன்னிய செலாவணியை ஈட்டக்கூடியதாக இருக்கும். ஆகவே, இன்னும் பெரிய அளவில், மத்திய அரசு உதவியோடு தொடங்கக்கூடிய நிலை உருவாகுமா; அதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில், கழக ஆட்சி உருவாகின்றபொழுது, முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே நல்ல தொழிற்சாலைகள் உருவாகும் என்பதற்குப் பல்வேறு சான்றுகளை என்னாலே சொல்ல முடியும். நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்கா அறிவிக்கப்பட்டு — அது, தங்கள் காலத்திலே

அறிவிக்கப்பட்டது -- அதற்குப் பிறகு அதை கைவிட்டுவிட்டார்கள். தென்மாவட்ட மக்கள் எதிர்பார்த்து, ஏமாந்து நிற்கிற வேளையில், அது தொடரும் என்ற நல்ல அறிவிப்பையும் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது ஆட்சி ஏற்பட்ட குறைந்த காலத்தில், பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டிலே முதலீடு செய்வதற்கான ஒப்பந்தங்களை நிறைவேற்றியிருக்கிறீர்கள், வரவேற்கிறோம். ஆனால், நாங்கள் தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், மிகப்பெரிய தொழில் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு வருகின்றன. தங்களாலே வருகின்றன, வரவேற்கிறோம். ஆனாலும்கூட, மிகப்பெரிய முதலீட்டில் நிறுவக்கூடிய அந்தத் தொழில் நிறுவனங்களில், வேலைவாய்ப்பு என்பது குறைவாகவே இருக்கிறது. உற்பத்தி பெருகுகிறது, ஏற்றுமதி பெருகுகிறது. ஆனால், மனித உழைப்பு, மனித ஆற்றல் அதிகமாக இருப்பது, நம்முடைய நாடு. இது மின்மயமாக்கப்பட்ட, இயந்திரங்களைக் கொண்டு செய்யக்கூடிய தொழில். கணினியைக் கொண்டு செய்யக்கூடிய தொழில் என்ற காரணத்தால், வேலைவாய்ப்பு என்பது குறைவாக இருக்கிறது. ஆகவே, மனித ஆற்றல் அதிகமாக இருக்கிற, மக்கட்தொகை மிகுதியாக இருக்கிற நம்முடைய நாட்டில், நம்முடைய மாநிலத்தில், வேலைவாய்ப்பை அதிகம் உருவாக்குகிற, மனித ஆற்றலைக் கொண்டு உருவாக்குகிற தொழில் நிறுவனங்களை மேலும் உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டு, வேலைவாய்ப்பைத் தேடுகிற தொழிலை நீங்கள் கொண்டு வாருங்கள் என்று வற்புறுத்தி, அதையும் அரசு நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயந்திர ஆற்றல், மனித ஆற்றல் என்று இரண்டு வகைகளாகப் பிரித்து, மனித ஆற்றலை மிகைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னார்கள். இரண்டு ஆற்றல்களும் இந்த உலகத்திலே தேவையான ஆற்றல்களாக இருக்கின்றன. இயந்திர ஆற்றல்கூட, மனித ஆற்றலுடைய விளைவுதான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே, மனித ஆற்றல், இயந்திர ஆற்றல் ஆகிய இரண்டிற்கும் உள்ள போட்டியில், மனித ஆற்றலுக்குக் கிடைக்க வேண்டிய மதிப்பு குறையாமல், இந்த அரசு பார்த்துக்கொள்ளும்; புதிய பொருளாதாரத் தத்துவத்தையும் அப்படித்தான் நடைமுறைப்படுத்த வேண்டும் என்கின்ற எண்ண ஓட்டத்தையும் எடுத்துச் சொல்லும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி.



**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஆறு பெரிய ஒப்பந்தங்களைச் செய்து, ஏறத்தாழ 2,685 கோடி ரூபாய் செலவிலே, பல தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததையெல்லாம் நமக்கு விரிவாக, பதிலிலே சொன்னார்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அதிமுக. ஆட்சியில் எத்தனை MoU.-கள் கையெழுத்தாயின? எத்தனை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நோத்தில் நான் குறைகளைச் சொல்ல விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

முற்பகல் 9-45

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்களுடைய சீரிய முயற்சியால் இன்று தமிழ்நாடு Destination Capital, முதலீடுகளுடைய சொர்க்க பூமியாக மாறிக்கொண்டிருப்பதாக வட இந்திய பத்திரிகைகள்கூட எழுதி வருவதைப் பார்த்து எங்களைப் போன்றவர்களுக்கு உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கிறது. மத்தியிலே இருக்கின்ற அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள் என்கிற கேள்வியை, தினசரி பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் சில எதிர்க்கட்சி நண்பர்கள் கிளப்பிவருகின்ற வேளையிலே, நம்முடைய மத்திய அமைச்சராக இருக்கின்ற திரு. தயாநிதி மாறன் அவர்கள், உலகப் புகழ்பெற்ற நிறுவனங்களையெல்லாம், உலகப் புகழ்பெற்ற தொழிலதிபர்களையெல்லாம் தமிழகத்திற்கு அழைத்துவந்து நாளுக்கு ஒரு தொழிற்சாலை. அதிலும் குறிப்பாக உலகத்திலே புகழ்பெற்ற Samsung, DELL, Motorola, Nokia போன்ற மிகப் பெரிய நிறுவனங்களுடைய தொழிலதிபர்களெல்லாம், ஏன் பில்கேட்ஸ் முதற்கொண்டு இங்கே வந்து, 3, 4 நாட்களுக்கு முன்னால் நம்முடைய திருபாய் அம்பானி நிறுவனத்தினுடைய நிர்வாக இயக்குநர் அனில் அம்பானிகூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, விவசாயிகளுக்கு முதலீட்டை உருவாக்கக்கூடிய, ஏறக்குறைய 2,500 கோடி ரூபாய் அளவிலான முதலீட்டை தமிழகத்திற்கு உறுதி

செய்துவிட்டுப் போயிருக்கிற நல்ல நேரத்திலே, எங்களுக்கு, தென் மாவட்டங்களைச் சார்ந்தவர்களுக்கு, சற்றுக் கவலையாக இருக்கிறது.

முதலீடுகள் தமிழகத்தினுடைய வடபுறம் குவிகின்றபொழுது, தென் மாவட்டங்களுக்கும் அதில் சற்று பங்கு வேண்டுமென்றுகூட, ஒரு பிரபல தினசரி பத்திரிகையில் தென் மாவட்டங்கள் புறக்கணிக்கப்படுவதாக, முதலீடுகளிலே புறக்கணிக்கப்படுவதாகச் செய்தியைத் தந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த முறை முதலமைச்சராக இருந்தபொழுது, நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை நியமித்து தென் மாவட்டங்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு என்ன செய்யமுடியும் என்பதை ஆய்ந்து அறிந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்கக் கேட்டார்கள். நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்களும், அத்தகைய அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இப்பொழுது உங்களை நாங்கள் வேண்டிக் கேட்டுக்கொள்வது, நாங்கள் தென் கோடியிலே இருக்கிறோம். கன்னியாகுமரி, தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை, மதுரைக்குத் தெற்கேயுள்ள அத்தனை மாவட்டங்களும், நாங்கள் மனித வளம் நிறைய பெற்றிருக்கிறோம். ஆகவே, இந்த வளர்ச்சியிலும், இந்த முதலீட்டிலும் தென் தமிழகத்திற்குரிய முறையான பங்கும் கிடைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெற்கு தேய்கிறது என்ற குரல் அந்த வட்டாரத்திலிருந்தே வருகிறது எனும்போது, கொஞ்சம் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. தெற்கு தேயாமல் பார்த்துக்கொள்கின்ற பொறுப்பை எடுத்துக்கொண்டுதான், ஏற்கெனவே தொழில் அமைச்சராக இருந்த தம்பி முரசொலி மாறன், தெற்குப் பகுதியில், குறிப்பாக நாங்குநேரியில் ஒரு பெரிய பொருளாதார தொழில் மண்டலத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு, அது நிறைவேறுகிற நேரத்தில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டதை அனைவரும் அறிவீர்கள்.

இப்பொழுதும், தெற்குப் பகுதியை மேம்படுத்த, செழிப்பாக்க என்னென்ன திட்டங்களை நிறைவேற்றலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் சொன்னதைப்போல, நீதியரசர்



இரத்தினவேல் பாண்டியன் அவர்களைக்கொண்டு ஓர் ஆய்வு நடத்தி, அந்த ஆய்வு அறிக்கை இந்த அரசிடம் இருக்கிறது. அதையும் பயன்படுத்தி, ஏற்கெனவே நாங்குநேரியிலே தொழிற் பூங்காவை அமைத்து, அதற்கடுத்து கூடன்குளத்திலே உருவாகிக்கொண்டிருக்கின்ற மின்சாரத்தையும் பயன்படுத்துகின்ற, அந்த நிலையையும் எடுத்து, தெற்குச் சீமையை, சீமையாகவே ஆக்குவதற்கு இந்த அரசு பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய பல்வேறு தொழில்கள், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலே நிறைவேற்றப்பட்டு இருப்பதை மனதார வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதேநேரத்தில், தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களில் தொழில் வளம் பெருகவேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தென் மாவட்டங்களுக்குரிய கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, தென் மாவட்டங்கள் என்று சொல்கின்றபோது, எங்களது பகுதியாக இருக்கிற கிழக்குப் பகுதி மாவட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நமது மாவட்டத்திற்கு எந்தவொரு தொழிலும் வாராமல் இருக்கிறதே, அதைப்பற்றி ஏதாவது முன் முயற்சிகளை மேற்கொண்டு, புதிய தொழில்களைத் தொடங்குவதற்காக தாங்கள் முயற்சிகளை மேற்கொள்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் எனக்கும் சேர்த்து கவலைபட்டதற்காக நன்றி கூறிக்கொள்கின்றேன். நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22. திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

22—

## தொழிற்சாலைகள்

***728–திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி வழியாகச் செல்லும் நான்கு வழிப் பாதைகளில் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள், மின்னணுப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், மருந்துப் பொருட்கள் தயாரிப்பு ஆகிய துறைகளில் தொழில் முதலீடுகளை ஈர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம் என்பது கர்நாடக மாநிலத்தையும், ஆந்திர மாநிலத்தையும் ஒட்டியிருக்கிற ஒரு மாவட்டமாகும். அந்த மாவட்டத்தில் கிருஷ்ணகிரி வழியாக பெங்களூர்-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையும், பெங்களூர்-பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலையும், பெங்களூர்-சென்னை தேசிய நெடுஞ்சாலையும், இப்படி பல்வேறுபட்ட தேசிய நெடுஞ்சாலைகள் சென்று கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை. அதேபோல, பக்கத்திலே கர்நாடக மாநிலம், பெங்களூரிலே விமான நிலையம், சோலையார்பேட்டையிலே இரயில் நிலையம், ஓசூரிலே இரயில் நிலையம். ஆக, இப்படி தொழில் தொடங்குவதற்குண்டான கட்டமைப்பு வசதிகள் அதிகமாக இருக்கிற அந்த மாவட்டத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் முதலாவது சிப்காட்டும், இரண்டாவது சிப்காட்டும் உருவாக்கப்பட்டு இன்றைக்கு ஓசூர் என்ற ஒரு நகரம், ஒரு காலத்திலே எங்கிருக்கின்றது என்று தெரியாதிருந்த நிலை மாறி, இன்றைக்கு உலகம் பூராவும் ஓசூரை தெரிகின்ற அளவிற்கு அந்த நகரத்தை நீங்கள் உருவாக்கித் தந்தீர்கள். ஆகவே, ஓசூரை ஒட்டியிருக்கின்ற கிருஷ்ணகிரி பகுதியிலே பெரும்பாலான படித்த இளைஞர்களும், பொதுமக்களும் இன்றைக்கு விவசாயத்தை நம்பியிருக்கிற சூழ்நிலை. ஆகவே, கிருஷ்ணகிரி பகுதியிலே அந்தத் தொழிற்சாலைகளை நீங்கள் உருவாக்கித் தருவதன்மூலமாக, கிருஷ்ணகிரி பகுதி, ஒரு வளமான பகுதியாக மாறுவதற்கு வழி ஏற்படும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சாலைகளை, கிருஷ்ணகிரி பகுதிக்குக் கொண்டுவந்து நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொடக்க விடையிலேயே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், இந்தப் பொருளாதார மண்டலத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள், மின்னணுப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், மருந்துப் பொருட்கள் தயாரிப்பு ஆகிய துறைகளில் தொழில் முதலீடுகளை ஈர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கின்றேன். ஆகவே, இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்து இன்னும் பல தொழில்கள் அங்கே வளர்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்பொழுது தொழில்வளம் பெருகுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்ற நம்முடைய தலைவர் கலைஞர் முதலமைச்சர் அவர்களுடைய முயற்சி இன்றைக்கு பாராட்டுக்குரியதாக அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உள்ளன என்பதைத் தங்கள்வாயிலாக நான் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் இப்பொழுது நான்கு மண்டலங்கள்தான் செயல்பாட்டில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பது குறித்து இரண்டுவிதமான கருத்துகள் சொல்லப்படுகின்றனவே, அவைபற்றிய விளக்கத்தைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைவதால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும், நஞ்சை நிலங்கள் அல்லது பயிரிடக்கூடிய நிலங்கள் இவை எல்லாம் பாழாகும் என்ற ஒரு கருத்து ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில் பொருளாதார மண்டலங்கள், அவை சிறப்புப் பொருளாதார மண்டலங்களாக இருந்தாலும், வேறு எந்தவகை மண்டலங்களாக இருந்தாலும் அதனால், விவசாயிகள் பாதிக்கப்படாமல், நஞ்சை நிலங்கள் அல்லது புஞ்சை நிலங்கள் இவற்றுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாமல், இவை அமைக்கப்படும் என்ற உறுதி வழங்கப்பட்டிருக்கிறது. நாங்குநேரியிலேகூட பொருளாதார மண்டலம் அமைத்த இடத்தைப் போய் நீங்கள் நேரிலே பார்த்தால், எப்படிப்பட்ட இடத்தைத் தேர்வு செய்தோம் என்பதை நேரடியாகவே புரிந்துகொள்ள முடியும்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கெல்லாம் ஒரு பெரிய மகிழ்ச்சி. முதலமைச்சர் கேள்வி நேரத்திலே பதில்களை கிட்டத்தட்ட 25 நிமிடங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஏனென்று சொன்னால், கடந்த 5 ஆண்டுகளில் முதலமைச்சர் கேள்வி நேரத்திலே பதில் சொன்ன வரலாறே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) 25 நிமிடங்களாக முதல் கேள்வி மற்றும் 2-வது கேள்வியிலேயே—அப்பொழுது 25 நிமிடங்களாக கேள்வி கேட்பவர்களே இல்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நீங்கள் சொன்ன காலகட்டத்திலெல்லாம் கேள்வி கேட்பவர்களே இல்லை. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** கேள்விகளை நிறைய நாங்கள் கேட்டிருக்கிறோம். அப்போது எடுக்கப்படாத ஒரு சூழ்நிலை. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25 நிமிடங்களாக, 26 நிமிடங்களாக பதில் சொல்லிக்கொண்டிருப்பது உண்மையிலேயே எங்களுக்கெல்லாம்



மகிழ்ச்சி அளித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே பதில் அளிக்கிறபோது, தெற்கைப் பற்றி நிறைய சொன்னார்கள். எனது இனிய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தெற்கு தேய்கிறது என்று சொன்னார்கள். வடக்கிலே இருக்கிற நாங்கள், எங்களுடைய வேலூர் மாவட்டம் தேய்ந்தேவிட்டது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இங்கே கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நல்ல அறிவிப்பைத் தந்திருக்கிறீர்கள். சென்னைக்கும் கிருஷ்ணகிரிக்கும் நடுவிலே சிக்கி இருக்கிற எங்களுக்கு அதேபோல விழுப்புரம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், இந்த மாவட்டங்களெல்லாம் வடக்கிலேதான் இருக்கின்றன. அதேபோல கடலூர் மாவட்டம் எல்லாம் வடக்கிலே இருந்தாலும்கூட இவற்றிற்கு வாழ்வு இல்லை. சென்னையைத் தவிர, வடக்கு வேறு எங்கும் வளரவில்லை. கிருஷ்ணகிரிக்கும் சென்னைக்கும் நடுவில் இருக்கிற எங்கள் மாவட்டம் என்ன பாவம் செய்தது? ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், எங்களுக்கும் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை தயவுசெய்து வேலூருக்குக் கொடுத்து, விமான நிலையத்தைக்கூட நீங்கள் எங்களுடைய வேலூருக்கு அமைத்துவிட்டீர்கள் என்று சொன்னால் சாலப் பொருத்தமான ஒன்றாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கு, தேய்ந்துவிட்ட மாவட்டத்திற்கு, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைத்துத் தர ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்சாலையில் மேலும் புதிதாக இப்பொழுது தொழிற்சாலை வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சிப்காட் இப்பொழுது அங்குதான் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பனமரத்துப்பட்டி திரு. இராஜேந்திரன்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே தொடங்கப்பட இருக்கிற சிறப்பு மையத்தினுடைய மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இந்த மையம் தொடங்கப்படுவதன்மூலம் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும் என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்மூலம் எனக்குத் தந்துள்ள குறிப்பின்படி சுமார் 70 ஆயிரம் பேருக்கு 10 ஆண்டு காலகட்டத்தில் வேலைவாய்ப்பு உருவாகும் என

எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு அதை நம்பலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் எங்கள் பகுதிக்கு வேண்டும், எங்கள் பகுதிக்கு வேண்டும் என்று உறுப்பினர்கள் இன்றைக்குக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலே இருக்கின்ற தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களைச் செயல்படுத்த, முடியாது என்றும், நாட்டில் இருக்கின்ற பல்வேறு சட்டங்களை, குறிப்பாக, சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் – Environment Impact Assessment Report போன்றவை அங்கே தேவையில்லை என்றும் விதிகள் குறிப்பிடுகின்றன. இவற்றால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்கின்ற ஒரு அச்சத்தை, குறிப்பாக, நம்முடைய இடதுசாரி தோழர்கள் எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். நமது மாநிலத்திலே அமைகின்ற சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலே தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுமா? அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு அங்கே வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிக்கப்படுமா? அந்த வேலைவாய்ப்புகளிலே சமூகநீதி பாதுகாக்கப்படுமா என்கின்ற கேள்விகளை உங்கள்வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையிலே வைத்து பதில் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சமூகநீதி பாதுகாக்கப்படுவது என்பது ஒரு தொழிற்கூடத்தைப் பொறுத்தது அல்ல. பரவலாக இந்தியா முழுமையும், நாடு முழுமையும் சமூகநீதி பாதுகாக்கப்பட என்ன அளவுகோல் பயன்படுத்தப்படுகிறதோ, அந்த அளவுகோல் எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதிலே இந்த அரசு முக்கியத்துவம் கொடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். தொழிலாளர்களுக்கு எந்த பாதகமும் ஏற்படாமல் இந்த மண்டலங்களிலே பார்த்துக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். உள்ளூர்வாசிகளுக்கு, வேலை தருவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் வினாவாகச் சொன்னார். இப்போது எந்தவொரு ஒப்பந்தத்திலே கையெழுத்திடுகிற நேரத்திலும் அவர்களிடத்திலே நான் கேட்கின்ற முதல் கேள்வி, உள்ளூர்வாசிகளுக்கு நீங்கள் எத்தனை சதவிகிதம் வேலைவாய்ப்பு உ ளிப்பீர்கள் என்பதுதான், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தே தீரவேண்டுமென்று அவர்களை



வலியுறுத்தி, அந்த ஒப்புதலைப் பெற்றுத்தான் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிக்கொண்டிருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் 'தெற்கு தேய்கிறது, வடக்கு தேய்ந்தே விட்டது' என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால், சென்னையிலிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மதுராந்தகம் தொகுதி ஒன்றுமே இல்லாமல் இருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள இங்கே கடமைப்பட்டுள்ளேன். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், நீங்கள் சொன்ன 6 கம்பெனிகளில், 5 கம்பெனிகள் ஸ்ரீபெரும்புதூருக்குத்தான் வந்திருக்கின்றன. ஆகையால், கருணை உள்ளம் படைத்த முதல்வர் அவர்கள் அடுத்த தடவை நீங்கள் ஒப்பந்தமிடும் சமயத்தில் மதுராந்தகம் தொகுதியையும் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே இயங்கிவந்த படாளம் சர்க்கரை ஆலைக்கு கடந்த ஆட்சியினர் மூடுவிழா செய்துவிட்டார்கள். ஆகையால், இந்தப் படாளம் சர்க்கரை ஆலை மீண்டும் திறக்கப்பட வேண்டும், திறக்கப்படுமா, எப்போது திறக்கப்படும் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்த வட்டாரத்திலே, 2,000 கோடி ரூபாயில் ஒரு மின் நிலையம் வருகிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். தெரிந்தும் அவர்கள் இதைக் கேட்பது வேடிக்கையாக இருக்கிறது, எனக்கு வருத்தமாகவும் இருக்கிறது. அதைப்போலவே சர்க்கரை ஆலை திறப்பதைப் பற்றிக் கேட்டார்கள். அதுபற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவில் உரிய முடிவு எடுத்து அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையில் மதுரையில் தொழிற் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது; அது எந்த நிலையில்

[2006 டிசம்பர் 7

ள்ளது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாயிலாக புறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பூங்கா அரும்பு நிலையிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

3—

**மின் உற்பத்தி நிலையம்**

***436—திரு. கே. பொன்னுசாமி:**

*மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் தடுப்பணை அமைத்து மின உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் தடுப்பணை அமைத்து மின் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான திட்ட அறிக்கையை ஏற்று, அதற்கான அரசாணை நிலை எண் 142, எரிசக்தித் துறை, நாள் 4-9-1995-ல் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்டது கொல்லிமலை ஒன்றியம். அங்கே சுமார் 50,000 மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அந்த மலைவாழ் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை, அடிக்கடி மின்சாரம் தடைபட்டு விடுகிறது. அங்கு வாழும் மலைவாழ் மக்களும், அரசு அலுவலர்களும் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். மின் தடை ஏற்படும் நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மின் தடை ஏற்படுகிறபோதெல்லாம், சுமார் ஒரு வார காலம் பழுதுபார்க்கவே நேரம் சரியாகி விடுகிறது. இந்த நிலையைப் போக்கிட கொல்லிமலையில் தடுப்பணை அமைத்து, 19 மெகா வாட் மின் உற்பத்தி நிலையம் அமைத்து, மலைவாழ் மக்களுடைய கோரிக்கையையும், அரசு அலுவலர்களுடைய கோரிக்கையையும் அரசு நிறைவேற்றிக் கொடுக்குமா என்று மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2006 டிசம்பர் 7]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரால் எழுப்பப்பட்டிருக்கின்ற கேள்வி, ஒரு தடுப்பணை ஏற்படுத்தி, மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படுமா என்பதாகும். அங்கே மின் தடங்கல் ஏற்படுவதாகச் சொன்னார். கொல்லிமலையிலே மின் தடங்கலே ஏற்படாத அளவிற்கு, சூரிய ஒளியின் மூலம் உற்பத்தியாகின்ற மின்சாரத்தைப் பயன்படுத்தி, அங்கே தெரு விளக்குகள், வீட்டுக்கான விளக்குகள் எல்லாம் பொருத்துவதற்கு இந்த அரசாங்கம் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, கொல்லிமலையில் தடுப்பணை அமைக்கும் திட்டத்திற்குத் தமிழக அரசின் ஒப்புதல் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தினுடைய ஒப்புதல் ஏற்கெனவே பெறப்பட்டுவிட்டது.. இரண்டாம் நிலை ஒப்புதல் இப்போது பெறப்படவேண்டும். இதற்கிடையிலே, இதனாலே எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்று வாரியம் ஆராய்ந்தபோது, ஆண்டொன்றுக்கு சராசரியாக 64.61 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக 63 கோடியே 61 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினுடைய சுரங்கம் மற்றும் இதர பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு வாரியத்தின் பரிசீலனையில் இருக்கிறது. திட்டம் 2007 ஆம் ஆண்டு தொடங்கப்படும்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் தடுப்பணை அமைத்து, மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை நான் வரவேற்கின்றேன். இந்த மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்திச் செய்யப்படும் மின்சாரம் முழுமையாக தமிழ்நாட்டுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுமா அல்லது National Grid என்று சொல்லப்படுகின்ற தேசிய மின்கம்பிகள் வழியாக பகிர்மானம் செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் எங்கு உற்பத்தி செய்தாலும், தமிழ்நாடு முழுமைக்கும்தான் அது பயன்படுத்தப்படும்.

[2006 டிசம்பர் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மாவட்டம், தருமபுரி மாவட்டம். அதேபோன்று மனிதர்களுக்குக்கூட சாதி வாரியாக அவரவர்களுக்கு இட ஒதுக்கீடு தருகின்ற நம்முடைய தலைவர் ஆட்சியிலே, எங்களுக்கென்று ஒரு பெரிய தொழிற்பேட்டையோ, எந்தவிதமான வளர்ச்சியும் இல்லாத இந்தக் காலகட்டத்திலே, ஒகேனக்கல்லில் நீர் மின் நிலையத்தை அமைக்க இந்த ஆட்சி முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல்லில் இருந்து கிடைக்கின்ற நீரைப் பயன்படுத்தி சுமார் 140 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் நாம் பேச்சுவார்த்தை நடத்தினோம். காவிரிப் பிரச்சினை இன்னும் தீராமல் இருக்கின்ற காரணத்தால், பக்கத்திலே உள்ள கர்நாடக மாநில அரசு, அங்கே தனியாக நீர் மின்நிலையம் அமைப்பதானால் அதிலே உற்பத்தி ஆகின்ற மின்சாரத்தில் 60 சதவிகிதத்தை கர்நாடகத்திற்குத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள், கர்நாடகத்திலே உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள், இங்கே உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை நாங்கள் பயன்படுத்திக்கொள்கின்றோம் என்று சொல்லியிருக்கிறோம். இந்த இரண்டு வாதங்களுக்கும் மத்திய மின் துறை அமைச்சர் ஒரு கூட்டத்தைக் கூட்டி, இந்தத் திட்டங்களுக்கு ஒப்புதல் தருவதற்கு அவர்களும் இசைவு தந்திருக்கிறார்கள். அதற்கான தேதி நிர்ணயிக்கப்பட்டவுடன், இரு மாநில அமைச்சர்களும் கூடிப் பேசி முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாராஷ்டிர மாநிலத்தில் கடல் அலையிலிருந்து மின்சாரம் எடுக்கின்ற புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, கடல் சூழ்ந்த பகுதி தமிழ்நாட்டிலே அதிகமாக இருக்கின்ற நிலையில், கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



2006 டிசம்பர் 7]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலிலே கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற திட்டத்தை ஜப்பான் நாட்டிலேதான் அறிமுகப்படுத்தினார்கள். ஆனால், இன்றையதினம் நாம் 800 கி.மீ. அளவுக்கு கடல் வளம் பெற்றிருந்தாலும்கூட, கடல் அலை மூலம் மின்சாரம் பெறுவதற்கு செய்ய வேண்டிய செலவு அதிகமாக இருக்கிறது. எப்படி நீர் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு, ஒரு யூனிட்டுக்கு 80 காசு ஆகின்றதோ, எப்படி அனல் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஒரு யூனிட்டுக்கு ரூ. 2–20 ஆகின்றதோ, அதைப்போல காற்றாலை மூலமாக உற்பத்தி செய்வதற்கு ரூ.2–70 ஆகின்றதோ, இவை எல்லாவற்றையும்விட கடல் அலைகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான செலவு அதிகமாகின்ற காரணத்தால், உலக அளவில் அது சாத்தியக்கூறு இல்லையென்று முடிவு எடுத்து, அந்தத் திட்டத்தை கைவிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், தமிழ்நாட்டிலே இப்போது சூரிய வெப்பத்தின்மூலமாக மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்கு அதிக கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியிலுள்ள பேரளத்தில் துணை அனல் மின் நிலையம் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருப்பினும்கூட, அந்த ஆதீனத்திடமிருந்து வாங்கக்கூடிய நிலத்தில் இருக்கின்ற பேரத்தின் காரணமாக கிட்டத்தட்ட பல ஆண்டுகளாக மிகப் பெரிய போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவேதான், உரிய காலத்தில், அந்த நிலையத்தை இங்கு கொண்டுவர முடியவில்லை. எனவே, உடனடியாக அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, கொண்டுவரவேண்டுமென மாண்புமிகு தலைவர் அவர்கள்மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரையிலே ஆட்சியிலே இருந்தபோதுதான் அந்தப் பிள்ளைபெருமாள் நல்லூர் பகுதியில் 130 மெகா வாட் மின்சாரம் உற்பத்திச் செய்யக்கூடிய ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் இன்று மின்சாரத்தைத் தமிழக மின்சார வாரியம் பெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு

உறுப்பினர் சொல்வதைப்போல அந்தப் பகுதிகளிலே இயற்கை எரிவாயு அதிகம் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், இதுவரையிலே ஏறக்குறைய 200 மெகா வாட் அளவுக்குத்தான் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான எரிவாயு கிடைத்திருக்கிறது. அதை வீணாக்காமல், ஏற்கெனவே மன்னார்குடியிலே 96 மெகா வாட் மின்சாரத்தையும், அதேபோல குத்தாலத்திலே 96 மெகா வாட் மின்சாரத்தையும் உற்பத்தி செய்வதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு, அமல்படுத்தி, மின்சாரத்தை இப்போது நாம் விநியோகித்துக் கொண்டிருக்கின்றோம். மேலும் அந்தப் பகுதிகளிலே இயற்கை எரிவாயு கிடைக்குமானால், மின்சார வாரியம் எவ்வளவு செலவானாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் மின் திட்டங்களைத் தொடங்குவதற்குத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தொடரிலே, நாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சோளசிராமணி பாசூர் இடையே அமைக்கப்படுகின்ற தடுப்பணையில் மேலே செல்கின்ற பாதையை இரு வழிப்பாதையாக அமைத்துக் கொடுத்தமைக்கு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். காவிரி ஆற்றிலே கிட்டத்தட்ட 11 தடுப்பணைகள் கட்டலாம் என்று கடந்த 1996-2001 ஆட்சியிலே திட்டமிடப்பட்டது. இதுவரை 7 தடுப்பணைகள்தான் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீதியுள்ள 4 தடுப்பணைகளையும் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டினால், வெள்ளக் காலங்களில் காவிரி நீர் வீணாவதைத் தடுப்பதோடு, மின் உற்பத்திக்கும் பயன்படும் என்ற நிலையிலே, நாமக்கல் மாவட்டத்திலே திட்டமிடப்பட்டிருக்கிற கண்டிபாளையம் மற்றும் கூடுதுறை என்ற இடங்களில் தடுப்பணைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அறிவித்த அந்தத் திட்டத்தில்தான், கொல்லிமலை தடுப்பணைத் திட்டம் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல அங்கே எத்தனை மதகுகள் கட்டினாலும் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியாது. ஒரு நீர் மின் நிலையத்தை உருவாக்க வேண்டுமென்றால், குறைந்தது 5 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான நீரை அங்கே தேக்க வேண்டும். இப்பொழுது கொல்லிமலைப் பகுதியிலே அந்த நீரைத்



தேக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதனால்தான் 63 கோடி ரூபாயிலே அந்தத் திட்டத்தை இப்பொழுது நிறைவேற்ற இருக்கின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இப்போதைக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**24—**

## ஏற்றுமதி மையம்

***1579—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டத்தில் மலர் சாகுபடி செய்து ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றுமதி மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் கொய் மலருக்கென 198.73 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனமும், தனியார் நிறுவனமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள டான்ப்ளோரா என்ற கூட்டு நிறுவனம் இணைந்து ஏற்றுமதி மண்டலம் அமைத்துள்ளது. தேன்கனிக்கோட்டை தற்சமயம் பொதுக் கட்டமைப்பு வசதிகளுடன் அமைந்துள்ள ஏற்றுமதி மண்டலத்திலிருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ளதால் இப்பகுதியில் உள்ள மலர் உற்பத்தி செய்யும் விவசாயிகள் ஓசூரில் அமைந்துள்ள ஏற்றுமதி மண்டலம்மூலம் தாங்கள் உற்பத்தி செய்யும் மலர்களை ஏற்றுமதி செய்து பயனடையலாம் என்பதால் தேன்கனிக்கோட்டை பகுதியில் மலருக்கென ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2006 டிசம்பர் 7

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதியிலே தளி பகுதியில் ஆண்டு முழுவதும் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவிவருவதால் தளி 'Little England' என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பகுதியிலே Cut Flowers, mass சாகுபடி செய்து ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு சீதோஷ்ண நிலை இருப்பதால் பல்வேறு தனியார் நிறுவனங்கள் மலர் சாகுபடி செய்து கோடிக்கணக்கான ரூபாயை அந்நியச் செலாவணியாக டாலர்களாக ஈட்டி வருகின்றன. அந்தப் பகுதியிலே குறு, சிறு விவசாயிகள் சாகுபடி செய்கின்ற மலர்களை ஏற்றுமதி செய்வதற்கான குளிர் பதனக் கிடங்கு போன்ற வியாபாரக் கட்டமைப்பு வசதிகள் இல்லாத காரணத்தினால் இடைத்தாகர்களுக்குக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமை உள்ளது. ஆகவே, குறு, சிறு விவசாயிகள் நேரடியாக ஏற்றுமதி செய்து பயன்பெறும் வகையில் குளிர் பதனக் கிடங்கு மற்றும ஏற்றுமதி மையத்தை தளி பகுதியிலே அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்குத் தந்த பதிலைத்தான் இப்பொழுதும் தர இயலும். அங்கிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்திலேதான் தேன்கனிக்கோட்டை இருக்கிறது. அங்கு தனியாக ஒரு ஏற்றுமதி மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமா என்று பரிசீலித்ததிலே வாய்ப்பு இல்லை என்ற தகவல் கிடைத்திருக்கின்றது. ஆகவே, இப்பொழுது 24.85 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே டிட்கோ நிறுவனமும், தனியார் நிறுவனமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள இந்தக் கூட்டு நிறுவனத்தினுடைய ஏற்றுமதி மண்டலம் அங்கே 15.28 கோடி ரூபாய் செலவு செய்து பல்வேறு கட்டுமானப் பணிகள் எல்லாம் முடிந்திருக்கின்றன. ஆகவே, தேன்கனிக்கோட்டை பகுதியிலே இருக்கக்கூடிய கொய் மலர் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளும் இந்த ஏற்றுமதி மண்டலத்தையே பயன்படுத்திக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் இருக்கிற ஏலகிரி மலை சுற்றுலாத்தலங்களில் ஒன்றாகும். கடல் மட்டத்திலிருந்து 3 ஆயிரம் அடி உயரத்திலே இருக்கின்ற அந்த மலையிலே மலர்களை சாகுபடி செய்யக்கூடிய சீதோஷ்ண நிலை இருக்கிற காரணத்தினாலே அங்கு இருக்கிற மலைவாழ்



2006 டிசம்பர் 7]

மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்கின்ற வகையிலே அங்கே மலர்களை சாகுபடி செய்து அருகில் இருக்கிற ஓசூருக்கும், சென்னைக்கும் அனுப்புவதற்கு அங்கே வேளாண் துறைமூலமாக மலர் உற்பத்தி செய்ய துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அப்படி ஒரு கோரிக்கை வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையாக எழுதிக் கொடுத்தால் ஆய்வு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன்.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம், ஓசூர், தருமபுரி போன்ற பகுதிகளிலே பூக்களை விவசாயிகள் நிறைய பயிரிடுகிறார்கள். அந்தப் பூக்கள் எல்லாம் பெங்களூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழக விவசாயிகளுடைய நலன் கருதி அந்தப் பூக்களில் கிடைக்கின்ற இலாபத்தை தமிழக விவசாயிகளே பெறுகின்றவிதத்தில் இந்தப் பகுதியிலே சென்ட் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை அமைத்து விவசாயிகளுக்கு நிறைய இலாபத்தை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகைப் பூ போன்றவற்றிலிருந்து சென்ட் தயாரிப்பது இலாபகரமாக இல்லை என்று தெரிய வருகிறது. அப்படி அமைப்பதற்கு யாரும் முன்வருவதும் இல்லை. ஆனால், கொய் மலர் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதிலே இப்போது நல்ல இலாபம் கிடைக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் தருமபுரி மாவட்டத்திலே 1,222 ஹெக்டேர் பரப்பிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1,867 ஹெக்டேர் பாரப்பிலும் மலர் சாகுபடி செய்யப்பட்டு, அதன்மூலம் தருமபுரி மாவட்டத்தில் 9,300 மெட்ரிக் டன்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 14,700 மெட்ரிக் டன்களும் மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இதில் ரோஜா, மல்லிகை, முல்லை, சாமந்தி, கனகாம்பரம், செண்டுமல்லி மலர் இரகங்களும், ஏஸ்டர், கோல்டன் ரெட் கொய் மலர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன. ஓசூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் பசுமைக் குடில் 100 ஹெக்டேர் பரப்பளவில்

அமைக்கப்பட்டு ஏற்றுமதிக்கு உகந்த ரோஜா இரகங்கள் பயிரிடப்படுகின்றன. இந்தப் பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் மலர்கள் ஏற்றுமதிமூலம் ஆண்டு ஒன்றுக்கு அந்நியச் செலாவணி ரூபாய் 100 கோடி அளவில் தற்போது கிடைக்கின்றது. இந்த ஆண்டு டான்ப்ளோரா மூலம் 3 கோடி மலர்கள் ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டு அதன்மூலம் ரூ.30 கோடி அந்நியச் செலாவணி கிடைக்க வழி ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, சென்ட் தொழிற்சாலை அமைப்பதற்கு யாராவது முன்வருவார்களேயானால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் கிட்டத்தட்ட பல்லாயிரம் ஏக்கரில் சூரியகாந்தி பயிரிடுகின்றார்கள். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் விழுப்புரம் மாவட்டத்திலே எந்தத் தொழிற்சாலையும் இல்லாமல் இருக்கின்றது. அங்கே சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை அமைத்தால், எங்கள் தொகுதியிலே இருக்கின்ற அனைவருக்கும் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு உறுதுணையாக இருக்கும். அதேபோன்று எங்கள் தொகுதியில் மணலூர்பேட்டை பேரூராட்சியில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இயங்கி வருகின்றது. பல ஆண்டுகளாக அதற்குக் கட்டடம் இல்லாமல், அங்கே இருக்கின்ற விவசாயிகளுடைய விளைபொருட்கள் எல்லாம் மழையிலே நனைந்து அவர்கள் அவதிக்குள்ளாகின்றார்கள். இதைப் பல முறை இங்கேயும் நான் சொல்லியிருக்கின்றேன். ஆனால், இடமில்லை, அது இல்லை இது இல்லையென்று அங்கே இருக்கின்ற அதிகாரிகள் இதுவரையில் தட்டிக் கழித்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை வட்டத்தில் மலர் சாகுபடி செய்து ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றுமதி மையம் அமைக்கப்படுமா என்பது மூலக் கேள்வி. அவர் கேட்கின்ற கேள்வி இந்தக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டதல்ல. தனிக் கேள்வி போடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.



**25—**

## தூர் வாரும் பணி

***6452—திருமதி டி. யசோதா:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பெரும்புதூரில் உள்ள பெரிய ஏரியின் நீர்வரத்துக் கால்வாயைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பெரும்புதூர் ஏரியின் வரத்துக் கால்வாய் தற்போது நல்ல நிலையில் உள்ளது. எனவே, தூர் வாரும் பணி தற்போது அவசியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரி நீர்வரத்துக் கால்வாயைத் தூர் வார அவசியமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பதில் அளித்திருக்கிறார்கள். இது இல்லாவிட்டாலும்கூட பல இடங்களிலே இப்போது, பொதுவாக நீர்வரத்துக் கால்வாய்கள் பொதுப் பணித் துறை மூலமாக குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கக்கூடிய மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும்கூட, அங்கே வழுக்கனோடை மற்றும் கல்லணைக் கால்வாய், கென்னடியன் கால்வாய், பாளையத்தான் கால்வாய் போன்ற கால்வாய்கள் தூர் வாரப்படாமல், அதேபோல, எங்களுடைய வேலூர் மாவட்டத்திலே பாலாற்றில் வந்து கலக்கக்கூடிய பல நீர்வரத்துக் கால்வாய்கள், என்னுடைய வேலூரைச் சுற்றி இருக்கக்கூடிய நகரங்களிலே இருக்கக்கூடிய கால்வாய்களைக்கூட தூர் வார வேண்டிய ஒரு நிலை. அதேபோல, ஈரோடு மாவட்டத்திலே காளிங்கராயன் கால்வாய் என்று பல கால்வாய்களை நீங்கள் தூர் வாரி கரையைச் செப்பனிட்டால்தான் விவசாயிகள் எதிர்காலத்திலே ஏரிக்கு நீரைப் பெற முடியும். விவசாயத்திற்கும் பயன்பட முடியும். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், நபார்ட் வங்கியின் மூலமாகவோ அல்லது உலக வங்கித் திட்டத்தின் மூலமாகவோ நிதியை அதிகமாகப் பெற்று, இந்தக் கோடைக்கு அடுத்த மழைக்காலத்திற்குள்ளாக எல்லா கால்வாய்களையும் செப்பனிட்டு

ஏரிகளைத் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆற்றுக்கால் கால்வாய்களைத் தூர் வாருவது, பெரும் பாசனத் திட்டங்கள் உள்ள கால்வாய்களைத் தூர் வாருகின்ற பணிகளை திராவிட முன்னேற்றக் கழகம் சென்ற முறை ஆட்சியில் இருக்கிறபோதே நிறைவேற்றி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிற தாமிரபரணி ஆற்றின் 8 கால்வாய்களையும் ஏற்கெனவே தூர் வாரி இருக்கிறோம். பரம்பிக்குளம், ஆழியாற்றிலே செய்திருக்கிறோம். காவிரியிலே தூர் வாரி இருக்கிறோம். அவர் குறிப்பிட்ட கீழ்பவானியிலே பல இடங்களில் தூர் வாரப்பட்டு இருக்கின்றன. காளிங்கராயன் சேனலைப் பற்றிச் சொன்னார்கள். காளிங்கராயன் சேனலில் ஆண்டு முழுவதும் தண்ணீர் ஓடிக்கொண்டு இருப்பதால், அவற்றை ஓராண்டு நிறுத்தினால்தான் தூர் வார முடியும். அவர்களோடு நாங்கள் பேசி இருக்கிறோம். ஆகவே, உலக வங்கியின் உதவியோடு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் தண்ணீர்ப் பாசனமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் கல்லணையில் இருந்து, காவிரியினுடைய பகுதியிலே, கடற்கரை வரையிலே கிட்டத்தட்ட 480 கோடி ரூபாய்க்கு நபார்டு வங்கியினுடைய திட்டத்தோடு செயல்படுத்துவதற்கு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்து இருக்கிறார்கள். ஆகவே, கால்வாய்களைத் தூர் வாருவது என்ற பணியை ஆரம்பித்ததே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். அந்தப் பணியைச் சென்ற முறையும் செய்தது. இந்த முறையும் செய்துகொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் உள்ள உப்படமங்கலம் ஏரியில் இருந்து வரும் உபரி நீர், ஓடை உள்வீரவாய்க்கம் வழியாக திருச்சி, கரூர் மெயின் ரோட்டை உடைத்து, இரயில்வே இருப்புப் பாதையையும் உடைத்து வருகிறது. இதனால் மழைக் காலங்களில் அதிக பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, சுமார் 8 கி.மீ. நீளம் உள்ள இந்தக் கால்வாயை முழுவதுமாக தூர் வார அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றுக்கணக்கான கால்வாய்கள் இருக்கின்றன. கேட்டு இருப்பது



திருப்பெரும்புதூரில் இருக்கிற கால்வாய் தூர் வாரப்படுமா என்பதுதான். அதனால்தான் நான் பொதுவாகச் சொன்னேன். தமிழ்நாட்டிலே முக்கியமான கால்வாய்கள் தூர் வாரப்படும். உறுப்பினர்கள் தங்கள் தொகுதியிலே அப்படிப்பட்ட கால்வாய்களை அவசியமாக தூர் வாரவேண்டும் என்றால், எழுதிக் கொடுத்தால் அதுகுறித்து அரசு கவனித்து, நியாயம் என்று உணர்ந்தால் நிச்சயம் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக பாசனம் செய்கிற பெரிய வாய்க்கால்கள் எல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் சீர் செய்யப்பட்டுவிட்டன. ஆனால், மானாவாரி குளங்களுக்கு, அதேபோன்று வாய்க்கால்களில் இருந்து குளங்களுக்குச் செல்கிற நீர்வரத்துக் கால்வாய்கள், அநேகமாக எந்த வாய்க்கால்களும் சீர் செய்யப்படவில்லை. ஏனென்றால் குளங்களுக்கு தண்ணீர் வர முடியவில்லை. அந்த வாய்க்கால்கள் எல்லாம் 2 கி.மீ., 3.கி.மீ. நீளம் இருக்கின்றன. அதுபோன்ற வாய்க்கால்களை, கொஞ்சம் சிறப்புக் கவனமாக அரசு எடுத்து அந்த நீர்வரத்துக் கால்வாய்களையெல்லாம் நீங்கள் சீரமைத்துத் தரவேண்டும். ரொம்ப காலமாக அவை செயல்படாமல் இருக்கின்றன. எனவே, அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதிலே ஒரு வகை உண்டு. குளங்களிலே சில குளங்கள் தனித் தனிக் குளங்களாக இருக்கும். சிலவற்றுக்கு கோர்வைக் குளங்கள் என்று பெயர். அவை திருநெல்வேலி மாவட்டத்தில்தான் அதிகம். ஒரு குளம் நிரம்பி அடுத்த குளத்திற்குப் போகும். அந்தக் கால்வாய் தூர் வாரப்படாமல் இருந்தால், அடுத்த குளத்திற்குத் தண்ணீர் வராது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து. இதிலே பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகள் உண்டு. பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஏரிகளும் உண்டு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சருடைய அனுமதியோடு ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த முறை தமிழ்நாட்டிலே இருக்கிற கிட்டத்தட்ட 39,000 ஏரிகள், அத்தனையும் பொதுப் பணித் துறையே எடுத்து தூர் வாரவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு நபார்டுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது.

சில இடங்களிலே தூர் வாராமல் நின்று போனதற்கு என்ன காரணம் என்று கேட்டால், நான் நேற்றுகூட ஒரு கோப்பில் அதை எழுதி இருக்கிறேன். வனத் துறையினர் அந்தப் பகுதிகளிலே கருவேல மரங்களை வைத்துவிடுகிறார்கள். கருவேல மரங்களை இலட்சக்கணக்கில் செலவு செய்து நட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். தூர் வாருகிறபோது அவற்றை அள்ளிப் போடவேண்டிய அவசியம் வந்துவிடுகிறது. கால்வாய்களிலும் நட்டு வைத்து இருக்கிறார்கள். ஏரிக் கரையிலே நட்டது போய், ஏரி நடுவிலே நட்டது போய், ஒரு குளத்திற்கும் இன்னொரு குளத்திற்கும் நடுவில் வருகிற கால்வாயிலும் நட்டுவிட்ட காரணத்தால் தூர் வார முடியாத நிலை இருக்கிறது. பஞ்சாயத்தில் என்ன நினைக்கிறார்கள்? அதை வெட்டாதீர்கள் சார். அது வளர்ந்து வெட்டினால் பஞ்சாயத்துக்கும் கொஞ்சம் வருமானம் வரும். அதற்கு எத்தனை வருடங்கள் ஆகும் என்று தெரியாது. ஆகையினாலே, ஏரிகள், கண்மாய்கள், கால்வாய்களில் மரம் நடுவது வரவேற்கத்தக்கது என்று சொன்னாலும், இந்தப் பகுதிகளிலே மரம் நடுகிறபொழுது நட்ட மரத்தை மூன்றாவது மாதத்திலேயே பிடுங்கி எறிகிற காரணத்தால் வனத் துறைக்கும் நட்டம், நமக்கும் நட்டம். பொதுப் பணித் துறையும் வேலை செய்யாமல் இருக்கிறது. அப்படி சில ஏரிகள் நின்று போயிருக்கின்றன. அவற்றையும் இந்த முறை எப்படித் தூர்வாருவது என்பதற்கு, முதல்வர் அவர்களோடு கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**வினா எண் 26, மாண்புமிகு உறுப்பினர் அருள் அன்பரசு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.**

**26—**

### கலைக் கல்லூரி

***1493—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சோளிங்கர் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* சோளிங்கர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஒரு கோடி ரூபாய் பணமும், 5 ஏக்கர் நிலமும் அந்த ஊர் மக்கள் கொடுத்தால் தேவையின் அடிப்படையில் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலும் என் வேலூர் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி ஆகும். இங்கு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் அதிக அளவில் வசிக்கின்றார்கள். இவர்கள் தங்களுடைய உயர் படிப்பிற்காக நெடுந்தூரம் பயணம் செய்துதான் தங்களுடைய கல்வியைத் தொடர முடியும் என்ற அவலநிலை உள்ளது. இதற்குக் காரணம் இங்கு ஒரு அரசுக் கலைக் கல்லூரி இல்லாததே. இதனால் தங்களுடைய இளம் வயதிலேயே கல்வியைத் தொடர முடியாமல் வேலைக்குச் செல்லும் ஒரு நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். கடந்த கால ஆட்சியில்தான் இது கானல் நீராக இருந்தது. இந்த ஆட்சியில் இது கண்டிப்பாக நிறைவேறும் என்று நாங்கள் நம்பியிருக்கின்றோம். ஏற்கெனவே நான் வைத்த கோரிக்கை சோளிங்கர் கோயிலுக்கு ரோப் கார் வசதி. அது உடனடியாக நிறைவேற்றப்படுமென்ற செய்தியை நம்முடைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். அதேபோன்றதொரு இனிப்பான செய்தியை சோளிங்கருக்கு ஒரு அரசுக் கலைக் கல்லூரியோ அல்லது அரசுப் பொறியியல் கல்லூரியோ அமைக்க வேண்டுமென்றும்—ஏற்கெனவே நீங்கள் வால்பாறைக்கு ஒரு அரசுக் கலைக் கல்லூரியை அனுமதித்திருக்கின்றீர்கள். அதேபோல அந்தக் கருணையை சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்கும் நீங்கள் காட்ட வேண்டுமென்றும்—அதற்கு மாண்புமிகு சபாநாயகராகிய நீங்களும் பரிந்துரை செய்ய வேண்டுமென்று நான் கேட்டு அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதி அமைந்துள்ள வேலூர் மாவட்டத்தில் 3 அரசுக் கல்லூரிகள், 7 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 11 சுய நிதிக் கல்லூரிகள் என ஆக மொத்தம் 21 கல்லூரிகள் அந்த மாவட்டத்தில் இருக்கின்றன. சோளிங்கர் பகுதியிலே இருந்துகூட தனியார் கல்லூரி துவக்குவதற்கான ஒரு கோரிக்கை மனு வந்திருக்கிறது. ஆகவே, அந்தத் தனியார் கல்லூரியைத் துவக்குவதற்கு, அவர்களோ அல்லது மாண்புமிகு

[2006 டிசம்பர் 7

உறுப்பினர் அவர்களோ முன்வந்தால் நிச்சயமாக இந்த அரசு முன்னுரிமை வழங்கி அந்தப் பகுதியிலே தனியார் கல்லூரி துவங்குவதற்கு வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டிலேயே கூட்டுறவு நிறுவனத்தின் மூலமாக நடைபெறுகிற ஒரே கல்லூரி திருப்பூரிலே அமைந்துள்ள குமரன் பெண்கள் கல்லூரி. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் அதை துவக்கி வைத்தார்கள். விடுதலைப் போராட்ட வீரர் கொடி காத்த குமரனின் பெயரை நினைவுகூரும் வகையில் அந்தக் கல்லூரிக்கு குமரன் கல்லூரி என்றும் பெயர் வைத்து பெருமை சேர்த்தார்கள். அந்தக் கல்லூரி இன்றைக்கு தனியார் கல்லூரியினுடைய பட்டியலிலேதான் இடம் பெற்றிருக்கிறது. ஆகவே, சுய நிதிக் கல்லூரி என்ற பட்டியலிலிருந்து அரசு உதவி பெறும் கல்லூரிகள் பட்டியலுக்கு அதை மாற்றித் தந்தால் அந்தக் கல்லூரி மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்குப் பேருதவியாக இருக்கும். நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தந்தபோது நேரடியாகவும், அவரிடத்திலே கல்லூரி நிர்வாகத்தின் சார்பிலேயும் அந்த மனுக்களை வழங்கியிருக்கிறோம். ஆகவே, உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களினுடைய அனுமதியோடு அந்தக் கல்லூரியை அரசு உதவி பெறும் கல்லூரியாக மாற்றித் தர உரிய நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற அந்தக் கல்லூரி, கூட்டுறவுத் துறையினால் நடத்தப்படுகிற கல்லூரி. அரசு உதவி பெறும் கல்லூரி என்று அறிவித்தால் அதற்கான நிதிச் சுமையும் அரசுக்கு வந்து சேரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு உணர்வார்கள். ஆகவே, உங்களுக்கு அரசு உதவி பெறும் கல்லூரி என்று பெயரிலே மட்டும்தான் வேண்டுமா; உதவியும் வேண்டுமா? அந்த உதவி வேண்டுமென்று கேட்கிறபொழுது அது இயலாத காரியம் என்ற காரணத்தினால் கூட்டுறவுத் துறையினால் நடத்தப்படுகிற கல்லூரிகளைச் சேர்த்தால் அது சரியாக இருக்காது. ஆகவேதான் நீங்கள் கூறிய கருத்தை வேண்டுமானால் நிதியுதவி கொடுப்பதற்காகக் கூட்டுறவுத் துறையிலிருந்து, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்கூட கலந்து கொண்டிருக்கிறார்.



2006 டிசம்பர் 7]

அவருடைய துறையிலே இருந்துகூட அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையிலே அரசு ஆடவர் கல்லூரி இல்லை என ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் மனு அளித்து இருக்கின்றோம். மூவலூர் பகுதியிலே இராமாமிர்தம் அம்மையாருடைய நினைவாக அக்கல்லூரி உருவாக்கப்பட வேண்டும். அங்கே அரசு வழங்கிய 10 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இடத்திலே கல்லூரியைத் துவங்குவதற்கு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோல, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதல்வர் அவர்கள் இந்த வாய்ப்பினைக் கொடுத்திருக்கிறார்கள். 5 ஏக்கர் நிலம், ஒரு கோடி ரூபாய் பணம் என்று சொன்னால், அந்தத் தொகுதியிலே உடனடியாக கல்லூரியை உருவாக்குவதற்கு இந்த அரசு முன்வரும். ஏனென்றால், இன்று அரசுக் கல்லூரிகளை அதிகமாக உருவாக்க வேண்டும் என்று எண்ணினாலும்கூட, இங்கே இருக்கிற நிதிநிலைக்கேற்ப அவற்றை maintenance செய்வது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிற காரணத்தால்தான் இதுபோன்ற முடிவுகளை எடுத்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிலத்தைக் கொடுத்து அதற்குரிய நிதியையும் கொடுப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தால் நிச்சயமாக அங்கே ஒரு ஆடவர் கல்லூரி தனியாக உருவாவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கிற ஒரே ஒரு அரசுக் கல்லூரி செங்கற்பட்டில் இருக்கிற அரசுக் கல்லூரி மட்டுமே. அதிலே அதிகமான மாணவர்கள் ஒவ்வொரு பாடப் பிரிவிற்கும் விண்ணப்பிக்கிறார்கள். அதிலே சேர்க்கை இடம் குறைந்த எண்ணிக்கையிலே இருப்பதால்

மாணவர்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. அதுமட்டுமல்லாமல், அங்கேயுள்ள அந்தப் பழமையான கல்லூரியிலே பட்ட மேற்படிப்பு இல்லை. அதைக் கொண்டு வருவதற்கு நம்முடைய அரசு முன்வருமா? மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்க முடியவில்லை என்று சொன்னாலும், மாலை நேரக் கல்லூரியை அதிலே துவக்குவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே இந்த அரசு shift system அறிமுகப்படுத்துவது என்று முடிவெடுத்து 10 அரசுக் கல்லூரிகளில் அதை நிறைவேற்றியிருக்கிறோம். செங்கற்பட்டு கல்லூரியிலே இதுபோன்று மாணவர்களுடைய சேர்க்கை விண்ணப்பம் அதிகம் இருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அடுத்த ஆண்டே அங்கேயும் இதுபோன்ற shift முறை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படிப்புக்கான விண்ணப்பங்கள் வருமானால் அதையும் கொடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**27—**

## கட்டடம்

***4418—திரு. தா. உதயசூரியன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், வடக்கனந்தலில் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நடப்பு நிதியாண்டில் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம் வடக்கனந்தலில் இயங்கும் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது திட்டம் இல்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். சுமார் 50 ஆண்டு காலமாக இந்த வடக்கனந்தல் சார் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதேபோல, என்னுடைய தொகுதியில் உள்ள கள்ளக்குறிச்சி, சின்னசேலம் போன்ற பகுதிகளிலும் இந்த அலுவலகங்கள் நீண்ட காலமாக வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, வரும் நிதியாண்டில் கட்டிக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புவதோடு, வரும் நிதியாண்டில் இதுபோன்று வாடகைக் கட்டடங்களில் இயங்கும் எத்தனை சார் பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூரிலே சார் பதிவாளர் அலுவலகத்தினுடைய கட்டடம் ஆங்கிலேயர் காலத்திலே கட்டப்பட்டது. மழைக் காலங்களிலே மேற்கூரையில் நீர் தேங்கி அந்தக் கட்டடத்தில் உள்ள record-கள் அனைத்தும் மழையில் நனைந்துவிடுகின்றன. பாதிப்பாக உள்ளது என்று அதிகாரிகள் என்னிடம் எழுதிக் கொடுத்துள்ளார்கள். அதற்கு ஏதாவது புதுக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் காடாம்புலியூர் பண்ருட்டி ஆகிய பகுதிகளில் வாடகைக் கட்டடங்களில் சார் பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. சமீபத்தில் பெய்த மிகப் பெரிய மழை, வெள்ளச் சேதத்தினால் அந்த Registrar அலுவலகங்களுக்குள்ளேயே

வெள்ளம் புகுந்து, அங்கே இருந்த ஆவணங்களை எல்லாம் Registrar அவர்களால் பாதுகாக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு, பக்கத்து வீட்டிலே பாதுகாப்பாக எடுத்து வைத்ததாகக்கூட பத்திரிகையில் செய்தி வந்தது. ஆதலால், மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரிமை அடிப்படையில் வெள்ளம் மற்றும் மழையினால் பாதிக்கப்பட்ட என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அந்த Registrar அலுவலகங்களுக்கு வரும் நிதியாண்டில் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருகின்ற நிதியாண்டில் நிறைவேற்றப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

## சட்டக் கல்லூரி

***8708—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, ஆரணி நகரத்தில் சட்டக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கின்ற மாணவர்கள் சட்டம் பயில்கின்ற வாய்ப்பு குறைவாக உள்ளது. பெருவாரியாக மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பெரு நகரங்களில் சென்று படிக்கின்ற வாய்ப்பும் குறைவாக உள்ளது. வேலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில்





80 சதவீதம் கிராமப்புறமாக உள்ளது. எனவே, இந்த மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலே, அதன் மையப் பகுதியாக இருக்கின்ற ஆரணி நகரில் சட்டக் கல்லூரியை அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக சட்டக் கல்லூரிகளைத் தமிழகத்திலே பல்வேறு தலைநகரங்களிலே அரசு நடத்தி வருகின்றது. தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்றவுடனே, செங்கல்பட்டிலேயிருந்த கல்லூரியை அரசினுடைய சட்டக் கல்லூரியாக மாற்றி, இந்த ஆண்டு அரசுக்கு இன்னும் ஒரு கல்லூரி அதிகமாகி, நிதிச் சுமையும் உருவாகியிருக்கின்றது. எதிர்காலத்திலே, நிதிநிலையைப் பொறுத்து, அரசு இதுபற்றிப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பாக சட்டக் கல்லூரி அமைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னாலும்கூட, அமைச்சர் அவர்களும் எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் என்கின்ற முறையில், திண்டுக்கல் மாவட்டம் என்பது மிகப் பின்தங்கிய மாவட்டம். அதிலும், வேடசந்தூர் தொகுதி என்பது மிகமிகப் பின் தங்கிய தொகுதி. எங்களுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் இதுவரை எந்தக் கல்லூரியும் இல்லை. ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பு முயற்சி எடுத்து எங்களுடைய மாவட்டத்திற்கு, குறிப்பாக, வேடசந்தூர் தொகுதியில், சட்டக் கல்லூரி அமைக்க பெருமுயற்சி எடுத்துக்கொள்வார்களா, என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தண்டபாணி அவர்களுடைய ஆசை நிறைவேற வேண்டுமென்பது என்னுடைய எண்ணமும்தான். இருந்தாலும், தற்சமயம் அரசின் சார்பாக நடத்துவது என்பது, மிகப் பெரிய நிதிச் சுமை என்பதை எல்லோரும் அறிவார்கள். குறிப்பாக, இந்த ஆண்டே, தமிழகத்திலே மாணவர்கள் படிக்க வேண்டுமென்பதற்காக, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், சென்னையிலேகூட ஏற்கெனவே இருந்த எண்ணிக்கையைவிட, பல மடங்கு, 3 மடங்கு மாணவர்கள் சேர்க்கையை உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், செங்கல்பட்டு கல்லூரியையும் அரசினுடைய சட்டக் கல்லூரியாக மாற்றியதால் இன்றைக்கு அரசுக்கு மிகப் பெரிய

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாது மலையைச் சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்கும், அங்கு பயணிகள் தங்குவதற்கு தங்கும் விடுதி அமைக்கும் திட்டத்திற்கும், செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் ம. வரதன்.

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை சுற்றுலாப் பகுதியாக இருக்கிறது. ஜவ்வாது மலைக்குப் பார்வையாளர்கள் வருவதற்கு அஞ்சுகிறார்கள்; காரணம், சரியான பஸ் போக்குவரத்து கிடையாது. திருப்பத்தூரிலிருந்து ஜவ்வாது மலைக்கு வர வேண்டுமென்று சொன்னால், 4 மணி நேரம் ஆகிறது. போளூரிலிருந்து ஜவ்வாது மலைக்கு போக வேண்டுமென்று சொன்னால், 3 மணி நேரம் ஆகிறது. செங்கத்திலிருந்து ஜவ்வாது மலைக்கு வரவேண்டுமென்றால், 5 மணி நேரம் ஆகிறது. முதலிலே, சாலை வசதி சரியில்லை. பெரிய பஸ் போக முடியாது. சாலைகள் ரொம்ப bend-ஆக இருப்பதால் பெரிய பஸ் போய் திரும்ப முடியாத ஒரு சூழ்நிலை. மினி பஸ் மட்டும்தான் போய்க்கொண்டிருக்கிறது. மினி பஸ்கள் போகின்றபோதுகூட, பல இடங்களிலே விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. வேலூர், திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களிலே இருக்கக்கூடியவர்கள் குடும்பத்தோடு ஜவ்வாது மலைப் பகுதிக்குச் சென்று, அந்த இயற்கைக் காட்சியைக் காண்பதற்கு விரும்பினாலும்கூட, அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படிச் செல்கின்ற பயணிகள், அங்கே 2 மணி நேரம் சுற்றிப்பார்த்துவிட்டு வரவேண்டுமென்று சொன்னால், காலையில் 6 மணிக்குப் புறப்பட்டுச் சென்றால், அங்கே போய்ச் சேர்வதற்கு பகல் 2 மணி ஆகிறது. 2 hours–க்குள் சுற்றிப்பார்த்து திரும்பி வரவில்லையென்றால், திரும்பி வருவதற்கு பஸ் இருக்காது. அதனால், போகிறவர்கள் உடனே திரும்ப வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே தங்குவதற்கு வசதிகள் இல்லை. லாட்ஜ் கிடையாது; ஹோட்டல் கிடையாது. எந்தவிதமான வசதிகளும் இல்லாததால், அந்தச் சுற்றுலாத் தலம் இன்றைக்கு ஒரு நல்ல தலமாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** கேள்விக்குத்தான் வருகிறேன். என்னுடைய தொகுதி அது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கட்டும். கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. போளூர் ம. வரதன்:** அதிலே 3 தொகுதிகள் வருகின்றன. போளூர், செங்கம், கலசப்பாக்கம். 3 தொகுதிகள், 11 பஞ்சாயத்துக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no, no.

**திரு. போளூர் ம. வரதன்:** எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், அது சுற்றுலாத் தலம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No elaborate discussion. Please put the question alone.

**திரு. போளூர் ம. வரதன்:** சுற்றுலாத் துறைக்குத்தான் சார், வருமானம். அந்த வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால், அந்தச் சுற்றுலா மையத்தை விரிவுபடுத்த வேண்டும். பயணிகள் சென்று தங்குவதற்கு வசதி, லாட்ஜ், இதர வசதிகளை உருவாக்கினால் அந்தத் தலம் விரிவடைந்து அரசுக்கு வருவாய் ஏற்படும். எங்கள் மந்திரிகூட சிரிக்கிறார். அடிக்கடி அவர் அங்கே போகிறார். ஜனங்கள் கேட்கிறார்கள், எங்கள் உள்ளூர் மந்திரியை. நாளை மறுநாள்கூட அங்கே போகிறோம். அந்த மக்களுடைய கோரிக்கை, ஒரு லாட்ஜ் வேண்டும்; ஹோட்டல் வேண்டும் என்பதுதான். வருகின்ற பயணிகளை வரவேற்கின்ற விதத்திலே அந்த மையத்தை விரிவுபடுத்தி, அழகுபடுத்தி, வருகின்றவர்களை வரவேற்பதற்கு அங்கே அடிப்படை வசதிகளை அரசு உருவாக்கித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத்' துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையைப் பொறுத்தமட்டில், அங்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவேண்டுமென்று நம்முடைய உணவு அமைச்சர் அவர்களும், நானும் 2 மாதத்திற்கு முன்பாக அங்கு சென்று நேரடியாகப் பார்வையிட்டோம். பார்வையிட்ட பிறகு, அவருடைய முயற்சியின் காரணமாகவும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவருடைய முயற்சியின் காரணமாகவும், இன்றைக்கு அங்கு பஸ் போக்குவரத்து வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், போக்குவரத்துத் துறையின் சார்பாக, தனி மண்டலமாக அறிவிக்கப்பட்டு, போக்குவரத்து சுற்றுலாப் பயணிகளுடைய தேவைகளை நிறைவேற்றக்கூடிய அளவிற்கு

அவர்களுக்கும் கருத்துருக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஜவ்வாது மலையைப் பொறுத்த மட்டில், சுற்றுலாப் பயணிகளுடைய அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்காக, சுற்றுலாத் துறை பங்காக 54 இலட்சம் ரூபாய் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு, ஆட்சித் தலைவர் மூலமாக பணிகள் தொடங்கப்பட உள்ளன.

(முற்பகல் 10–50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

## குடமுழுக்கு

***789—திரு. க. சிவராஜ்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்திற்கு குடமுழுக்குச் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ரிஷிவந்தியம் கிராமத்தில், அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகள் சுமார் 10 இலட்சம் மதிப்பீட்டிலும், உபயதாரர்கள் கொடையிலும் துவக்கப்பட்டு, சுமார் 60 சதவீதப் பணிகள் முடிவுற்றுள்ளன. பணிகள் முடிவுற்றவுடன், குடமுழுக்கு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரிஷிவந்தியம் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் ஆலயம், மிகத் தொன்மை வாய்ந்த ஆலயம். இதற்குக் குடமுழுக்குச் செய்ய வேண்டுமென்று, கடந்த 10 ஆண்டு காலமாக முயற்சி மேற்கொண்டு, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 60 சதவிகித பணிகள்தான்



இன்றைக்கு முடிந்திருக்கின்றன. காரணம், இது வருவாய் குறைந்த ஆலயம். பொதுவாக, ஆலயங்களுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு நடத்தப்பட வேண்டுமென்று கூறுவார்கள். ஆனால், இந்த ஆலயத்திற்கு குடமுழுக்கு நடைபெற்று ஏறத்தாழ 30, 35 ஆண்டு காலம் ஆகின்றது. இது வருவாய் இல்லாத ஆலயமாக இருக்கின்ற காரணத்தினால்தான், இப்படி பணி தாமதமாக நடந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, வருவாய் அதிகமுள்ள ஆலயங்களிலிருந்து நிதியைப் பெற்று இதுபோன்ற ஆலயங்களுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு நடத்தப்பட வேண்டுமென்ற அந்த விதியினை இந்து சமய மற்றும் அறநிலையத் துறை பின்பற்றுமா? அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தக் கோயில் வருமானம் குறைவாக உள்ள கோயிலாக இருக்கின்ற காரணத்தினால், கடந்த காலங்களில் திருப்பணி நடைபெறுகின்ற காரியம் தள்ளிப்போய் இருந்திருக்கலாம். ஆனால், இப்போது அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அரசுத் துறையின் சார்பில் 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். அதேபோல தனியார்கள் மூலமாக திருக்கோயிலினுடைய பணிகளை, உபயதாரர்கள் மூலமாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அதிலே உப பணிகளாக, சுவாமி விமானம், அம்பாள் விமானம், மடப் பள்ளி மற்றும் ஐந்து நிலை ராஜகோபுரம், திருக்குளம் மதிற்சுவர் பராமரித்தல் போன்ற பணிகள் விரிவாகவும், விரைவாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, உறுப்பினருடைய ஐயப்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் அவரே ஒப்புக்கொள்கின்றார். 60 சதவிகிதப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்றும், எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மூலமாக, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், ஒரு விளக்கம் பெற விரும்புகின்றேன். சமீபத்திலே பத்திரிகையிலே வந்த ஒரு செய்தி, திருப்பதி ஏழுமலையானை online மூலமாக வணங்குவதற்கான ஏற்பாடுகள்

[2006 டிசம்பர் 7

செய்யப்படும்; அதற்குரிய கட்டணம் இவ்வளவு என்று நிர்ணயித்து, நமது தமிழ்நாட்டிலே ஏற்பாடு செய்வதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. Online என்பது மனித சக்தியின் மூலமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், திருப்பதி ஏழுமலையான், அது தெய்வீக சக்தியாக இருக்கிற காரணத்தினாலே, மனித சக்தி மூலமாக பயன்படுத்தப்படுகிற online மூலமாக தெய்வ சக்தியை வணங்குவதற்குரிய வாய்ப்பு என்று சொல்லப்படுகிற காரணத்தினாலே மனித சக்தி பெரியதா, தெய்வ சக்தி பெரியதா, என்ற வினா இதிலே இருக்கிற காரணத்தினாலே இப்படிப்பட்ட விஞ்ஞானபூர்வமான காலத்தில் மனித சக்தியை தெய்வ சக்தி பயன்படுத்த வேண்டிய அவசியம் வந்திருக்கிறது. இதைப்பற்றிய கருத்து ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்தக் கேள்விக்கு அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் காலையில் 5–00 மணியளவிலே, 5–30 மணியளவிலே அந்தச் செய்திகள் ஒளிபரப்பப்படுகின்றன. அதை உறுப்பினரும் கண்டுகளிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

**திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுத் திருக்கோவில்களில் நடைபெறுகின்ற குடமுழுக்கு விழாக்கள் பெரும்பாலும் வட மொழியிலேதான் நடைபெறுகின்றன. சில திருக்கோவில்களில் தமிழில் நடத்தப்பட வேண்டும் என்று சொன்னால், அங்கு இருக்கக்கூடிய நிர்வாக அதிகாரிகள் அல்லது அர்ச்சகர்கள் அதற்குத் தடை விதித்து, அதனால் சிலபேர் நீதிமன்றத்திற்குப் போய் உத்தரவு வாங்கக்கூடிய நிலைமை இருந்து வந்திருக்கிறது. எனவே, தமிழில் வழிபாடு செய்யப்படுவதற்கு எப்படி முழு உரிமை இருக்கிறதோ, நடைபெறுகிறதோ, அதைப்போல தமிழ்நாட்டுத் திருக்கோவில்கள் தமிழ் மன்னர்களாலே உருவாக்கப்பட்ட கோவில்கள், தமிழ் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பாதுகாக்கக்கூடிய இடம். அப்படிப்பட்ட இடத்தில் தமிழில்தான் குடமுழுக்கு நடைபெறவேண்டும் என்று அறநிலையத் துறை சம்பந்தப்பட்ட கோவில்களுக்கு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.



2006 டிசம்பர் 7]

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் குடமுழுக்குகளுக்கே தடை விதிக்கப்பட்டிருந்த காலம் இருந்தது. ஆனால், இப்பொழுது குடமுழுக்குகள் ஏராளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சில இடங்களில் தமிழில் குடமுழுக்கு நடத்துவதற்கு, தமிழ் முறையில் நடத்துவதற்கு சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இருக்கின்ற சிக்கல்களை இவ்வரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே இயங்குகின்ற இந்த அரசு களைவதற்கான அனைத்து முயற்சிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. ஆகவே, ஒரு சில இடங்களில் ஏற்படுகின்ற அந்தப் பிரச்சினைகளையும் வெகு விரைவில் தீர்த்து, எல்லா கோவில்களிலும் உறுப்பினர் அவர்கள் விரும்புகின்ற வகையில் தமிழில் குடமுழுக்கு நடைபெறுவதற்கு இவ்வரசு முயற்சி மேற்கொள்ளும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (முதலாவது பட்டியல்)*

**1—**

### மணிமண்டபம்

**வினா எண் 1101—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சீர்காழியில் தமிழிசை மூவருக்கு மணிமண்டபம் அமைக்க முன்னரே அறிவித்தவாறு தற்போது செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*சீர்காழியில் தமிழிசை மூவருக்கு மணிமண்டபம் அமைப்பது தொடர்பான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.*

**2—**

### நாடக வளர்ச்சி

**வினா எண் 2628—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

நாடக வளர்ச்சிக்கு மாவட்டந்தோறும் சிறப்புப் பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நாடக வளர்ச்சிக்கு மாவட்டந்தோறும் சிறப்புப் பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

**3—**

### தமிழ் இசை

**வினா எண் 2631—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் இசையை மக்களிடையே பரப்புவதற்கு புதிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்போது புதிய செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும், தமிழ் இசையை மக்களிடையே பரப்புவதற்கு தமிழக அரசு கலை பண்பாட்டுத் துறைமூலம் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு தமிழிசை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

**4—**

### கிராமியக் கலை

**வினா எண் 2632—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமியக் கலையை வளர்க்கும் புதிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆம். இந்நிதியாண்டில் (2006-2007) பகுதி II திட்டத்தின்கீழ் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின்மூலம் கிராமியக் கலையை வளர்க்க ரூ.3.50 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.



**5—**

### நிதி ஒதுக்கீடு

**வினா எண் 2884— திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திற்கு 2006–2007 ஆம் ஆண்டுக்கான திட்டப் பணிகளுக்கு மத்திய திட்டக் குழு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதியமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசின் நிதி ஆதாரங்களையும், மத்திய அரசின் நிதி உதவியினையும் கருத்தில் கொண்டு மாநிலத்தின் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு, மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளிக்கிறது. அவ்வாறே 2006-2007 ஆம் ஆண்டிற்காக ரூ.12,500 கோடி அளவிலான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

**6—**

### பணி நிரந்தரம்

**வினா எண் 1473—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின் துறையில் தினக் கூலி அடிப்படையில் பணிபுரிபவர்களைப் பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

மின் துறையில் தினக் கூலி அடிப்படையில் எவரும் [illegible] எனவே, பணி நிரந்தரம் என்கிற நிலை எழவில்[illegible]



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227441
சென்னை-600 008

**7—**

## இரப்பர் தொழிற்சாலை சங்கம்

**வினா எண் 1616—திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு இரப்பர் தொழிற்சாலை சங்கம் எந்த வருடம், எந்த நோக்கத்திற்காக பதிவு செய்யப்பட்டது?

(ஆ) அந்தச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு இரப்பர் தொழிற்சாலை லிமிடெட் (இண்ட் எண் 1357) 11-3-1981 அன்று பதிவு செய்யப்பட்டு, 19-3-1981 அன்று 277 உறுப்பினர்களுடன் ட்ரீடு இரப்பர் (TREAD RUBBER) உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) இந்தச் சங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் 1988-ல் 4000 சதுர அடியில் தொழிற்சாலை கட்டடம் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எனவே, சங்கத்திற்கென சொந்தக் கட்டடம் புதியதாக கட்ட வேண்டிய நிலை ஏற்படவில்லை.

**8—**

## கடனுதவி

**வினா எண் 2030—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு சிறு தொழில் செய்ய கடன் உதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு அவர்களது திட்ட மதிப்பீட்டை பொறுத்து பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

**9—**

## மின்சாரக் கம்பிகள்

**வினா எண் 2116—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகராட்சி, VSS காலனி பகுதியில் வீட்டின் மேல் செல்லும் மின்சாரக் கம்பிகளை மாற்றிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி, VSS காலனி பகுதியில் அமைந்துள்ள இடம், உடுமலை நகராட்சிக்கு உட்பட்டதால் அப்பகுதியில் வீட்டின்மேல் செல்லும் கம்பிகளை மாற்ற வேண்டி நகராட்சி நிர்வாகம் விண்ணப்பம் செய்தால், மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகராட்சி பணம் செலுத்தியவுடன் மின் கம்பிகளை மாற்ற முடியும்.

**10—**

## மின் திருட்டுகள்

**வினா எண் 2233—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆண்டு தொழிற்சாலைகளில் மின் திருட்டு நடைபெற்று வழக்குகள் ஏதேனும் பதிவு செய்யப்பட்டதா?

(ஆ) இதற்கு ஏதேனும் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகை என அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

| | | |
|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டு (2005–2006) தொழிற்சாலைகளில் கண்டுபிடிக்கப்பட்ட மின் திருட்டுகள் | 94 |
| | குற்றவியல் நடவடிக்கை தவிர்க்க சமரசம் செய்யப்பட்டவை | 78 |
| | வழக்குகள் பதிவு செய்யப்பட்டவை | 16 |
| (ஆ) | ஆம் | |
| (இ) | 94 தொழிற்சாலைகளில் மின் திருட்டுகளால் நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இழப்பீட்டுத் தொகை | ரூ.321.20 இலட்சம் |
| | வசூலித்த சமரசத் தொகை | ரூ.61.30 இலட்சம் |
| | வசூலித்த அபராதத் தொகை | ரூ.58.57 இலட்சம் |

11—

## சிறு தொழில்கள்

**வினா எண் 2493—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட சிறு தொழில்கள் எத்தனை?

(ஆ) இதன்மூலம் எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டியுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு தொகுதியில் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்தின்மூலமாக கடந்த ஐந்தாண்டுகளில் நிரந்தர சிறு தொழில் பதிவு செய்த விவரப்படி 325 சிறு தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன.

(ஆ) இந்நிறுவனங்கள்மூலம் மொத்தம் 709 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

12—

## மின் கம்பம் மாற்றம்

**வினா எண் 2601—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், ஆலம்பாக்கம், கே.கே. நகர் பிரதான சாலையிலுள்ள பழுதடைந்துள்ள மின் கம்பம் மாற்றப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், ஆலம்பாக்கம், கே.கே. நகர், பிரதான சாலையிலுள்ள பழுதடைந்துள்ள 7 மின் கம்பங்கள் மாற்றப்பட்டுவிட்டன. மீதமுள்ள 10 கம்பங்கள் விரைவில் மாற்றப்படும்.

13—

## சிறு தொழில்கள்

**வினா எண் 2782—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறு தொழில்களை ஊக்குவிக்க புதிய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறு தொழில்களை ஊக்குவிக்க புதிய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. காஞ்சிபுரம் மாவட்டத்தில் நான்கு தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன.

மத்திய அரசு உதவியுடன் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் வாயிலாக வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு தொடங்க பயிற்சியும், மானியத்துடன் கூடிய கடன் வசதி வழங்க அந்தந்த மாவட்ட தொழில் மையங்களின்மூலம் உதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டில் 894 நபர்களுக்கு காஞ்சிபுரம் மாவட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வங்கிக் கடனுக்காக 2,768 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு அவற்றுள் 1,134 நபர்களுக்கு ரூ.403.70 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**14—**

## தார்ச் சாலை

**வினா எண் 395—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, ஆண்டியகவுண்டனூர் ஊராட்சி, தம்புரான் கோவில் சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியிலுள்ள மானுப்பட்டி–தம்புரான் காடு (தம்புரான் கோவில் வழி) வரை மொத்தம் 3 கி.மீ. தூரப் பாதை உள்ளது. இதில் இந்த நிதியாண்டு 2006–2007–ல் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1 கி.மீ. தூரம் கப்பிச் சாலை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க அம்மாவட்ட நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**15—**

## சமத்துவபுரம்

**வினா எண் 481— திரு. கே.பி. இராமசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீண்டும் சமத்துவபுரம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

முன்பு அமைக்கப்பட்டுள்ள சமத்துவபுரங்களைப் பழுது நீக்கி சாலை, குடிநீர் மற்றும் தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கவும், வீடுகளைப் பழுது பார்க்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதியதாக சமத்துவபுரம் அமைப்பது குறித்து தற்சமயம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**16—**

## தெரு விளக்கு

**வினா எண் 904— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கரியஞ்செட்டிபாளையம் ஊராட்சிக்குத் தேவையான தெரு விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரியஞ்செட்டிபாளையம் ஊராட்சியில் தற்போது போதுமான அளவில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு, நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

[2006 டிசம்பர் 7

17—

## தெரு விளக்கு

**வினா எண் 905—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, காளியாபுரம் ஊராட்சிக்குத் தேவையான தெரு விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காளியாபுரம் ஊராட்சியில் தற்போது போதுமான அளவில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

18—

## தெரு விளக்குகள்

**வினா எண் 907—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ரமணமுதலிபுதூர் ஊராட்சிக்குத் தேவையான தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி, ரமணமுதலிபுதூர் ஊராட்சியில் தற்போது போதுமான தெரு விளக்குகள் நல்ல முறையில் எரிந்து வருகின்றன.



2006 டிசம்பர் 7]

19—

## தெரு விளக்குகள்

**வினா எண் 908—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தென்சித்தூர் ஊராட்சிக்குத் தேவையான தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி, தென்சித்தூர் ஊராட்சியில், தற்போது போதுமான அளவில் தெரு விளக்குகள் நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

20—

## தெரு விளக்குகள்

**வினா எண் 909—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சிக்குத் தேவையான தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி, சோமந்துரை ஊராட்சியில், தற்போது போதுமான அளவில் தெரு விளக்குகள் நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

[2006 டிசம்பர் 7

**21—**

## தார்ச் சாலை

**வினா எண் 913—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்திற்குட்பட்ட சமூகரெங்கபுரம் ஊராட்சி, சிங்காரத்தோப்பு-சௌந்திரபாண்டியபுரம் சாலை, சமூகரெங்கபுரம்-கண்ணாத்திகுளம் சாலை, ராதாபுரம் ஊராட்சி, ஈச்சட்டி-சௌந்திரபாண்டியபுரம், வள்ளியூர்-இட்டமொழி சாலையில் இருந்து கும்பிகுளம் ஊராட்சி, கண்ணங்குளம் சாலை ஆகிய சாலைகளைச் தார்ச் சாலைகளாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, சிங்காரத்தோப்பு-சௌந்திரபாண்டியபுரம் சாலை 2.4 கி.மீ. நீளம் மெட்டல் சாலையாகும். மேற்கண்ட சாலை PMGSY 2005-2006 தொகுதி 5-ல் மாவட்ட ஆட்சியர் ஆணை எண் அ4-5616-04, நாள் 19-8-2005-ன்படி சேர்க்கப்பட்டுள்ளது.

சமூகரெங்கபுரம்-கண்ணாத்திகுளம் சாலை 0/0-3/0 நீளம் 3 கி.மீ. சரள் சாலை ஆகும். தார்ச் சாலையாக மாற்ற ரூ.30 இலட்சம் செலவாகும்.

ஈச்சட்டி-சௌந்திரபாண்டியபுரம் சாலை 0/0-3/0 நீளம் 3 கி.மீ. கற்சாலை ஆகும். இதனை தார்ச் சாலையாக மாற்ற ரூ.24 இலட்சம் செலவாகும்.

இட்டமொழி சாலையிலிருந்து கண்ணங்குளம் சாலை-வள்ளியூர், இட்டமொழி சாலையிலிருந்து வடசேரி சாலை வழியாக கண்ணங்குளம் மொத்த நீளம் 4 கி.மீ. இதில் 0.6 கி.மீ. மெட்டல் சாலை ஆகும். மீதம் உள்ள பகுதி சாள் சாலையாகும். இதனை தார்ச் சாலையாக மாற்ற ரூ.40 இலட்சம் செலவாகும். மேற்காணும் சாலைப் பணிகளை மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதியில்லை.



2006 டிசம்பர் 7]

**22—**

## தார்ச் சாலை

**வினா எண் 914—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சிக்குட்பட்ட பெருங்கண்ணன்குளம்-சித்தாலங்குளம் சாலை, கஸ்தூரிரெங்கபுரம்-பொன்னாத்தி, புதுக்குறிச்சி சாலை, ராதாபுரம் இடையன்குடி சாலையிலிருந்து கைலாசபேரி காலனி சாலை, கஸ்தூரிரெங்கபுரம் பெருங்கண்ணன்குளம் சாலையிலிருந்து ஆய்மேடி வழியாக வள்ளியூர்-இட்டமொழி சாலை வரை தார்ச் சாலை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், பெருங்கண்ணன்குளம்-சித்தாலங்குளம் சாலை 2.6 கி.மீ. நீளம் தற்போது கற்சாலையாக உள்ளது. இதனை தார்ச் சாலையாக மாற்ற ரூ.26 இலட்சம் செலவாகும்.

கஸ்தூரிரெங்கபுரம் பொன்னாத்தி புதுக்குறிச்சி காலனி சாலையின் நீளம் 0.8 கி.மீ. கற்சாலையாகும். மேற்படி சாலை தார்ச் சாலையாக மாற்ற ரூ.8 இலட்சம் செலவாகும்.

ராதாபுரம் இடையன்குடி சாலையிலிருந்து கைலாசபேரி வழியாக ஆத்தங்கரை பள்ளிவாசல் செல்லும் சாலையின் நீளம் 1.8 கி.மீ. தற்போது மண் சாலையாக உள்ளது. இதனைத் தார்ச் சாலையாக மாற்ற ரூ.48 இலட்சம் செலவாகும்.

கஸ்தூரிரெங்கபுரம் பெருங்கண்ணன்குளம் சாலையிலிருந்து ஆமையடி வழியாக இட்டமொழி சாலை, ஆமையடி வரை உள்ள சாலை 1.6 கி.மீ. நீளம் தார்ச் சாலையாக உள்ளது. மேலும் ஆமையடியிலிருந்து வள்ளியூர் இட்டமொழி சாலை வரை 2.4 கி.மீ. தூரம் உள்ளது. தற்போது சாள் சாலையாக உள்ளது. இதனைத் தார்ச் சாலையாக மாற்ற ரூ.24 இலட்சம் செலவாகும். மேற்காணும் சாலைப் பணிகளை மேற்கொள்ள போதிய நிதி வசதி இல்லை.

23—

## தார்ச் சாலை

**வினா எண் 1090—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் சுமார் 80 கி.மீ. மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் சுமார் 80 கி.மீ. மண் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றி அமைப்பதற்கு ரூ.2,27,10,000 செலவாகும். வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கண்ட பணியை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

24—

## ஆக்கிரமிப்புகள்

**வினா எண் 1261—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியத்தையும், அரியலூர் ஒன்றியத்தையும் இணைக்கும் ஏலாக்குறிச்சி சிலுப்பனூர் சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியத்தையும், அரியலூர் ஒன்றியத்தையும் இணைக்கும் ஏலாக்குறிச்சி சிலுப்பனூர் சாலை 8.8 கி.மீ. நீளமுள்ள பழுதடைந்த தார்ச் சாலையாகும். இதில் திருமானூர்



ஊராட்சி ஒன்றியத்தில் 7.8 கி.மீ. நீளமும், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1 கி.மீ. நீளமும் உள்ளடக்கியதாகும். இச்சாலையில் இருபுறமும் நல்ல விளைநிலங்கள் உள்ளன. இச்சாலையின் இருபக்கமும் உள்ள வயல்களின் நீர்ப்பாசன வாய்க்கால்களின் வழியே செல்லும் நீர் மற்றும் ஏரிக் கசிவு நீர் ஆகியவற்றின் காரணமாக இச்சாலை அடிக்கடி பழுதடைந்து வருகின்றது. விவசாயிகள் தங்கள் வயலின் எல்லையைத் தாண்டியும் வேலி வைத்து உள்ளனர். பெருமளவில் பயன்படும் இச்சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வருவாய்த் துறையின் ஒத்துழைப்போடு அப்புறப்படுத்தி, வரும் நிதியாண்டில் முன்னுரிமையின் அடிப்படையில் இச்சாலை செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

## சாலை வசதி

**வினா எண் 1262—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமானூர் ஒன்றியம், மேலப்பழுவூர்—சில்லக்குடி சாலை விரைவில் போடப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருமானூர் ஒன்றியம், மேலப்பழுவூர் கிராமத்திலிருந்து மரவனூர் செல்லும் சாலையில் இடதுபுறம் பிரிந்து சில்லக்குடி கிராமத்திற்கு ஒரு வண்டிப்பாதை செல்கிறது. இப்பாதை 2 கி.மீ. நீளமுள்ள மண் பாதையாகும். இப்பாதை ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சில்லக்குடி கிராமத்தை இணைக்கும் பாதையாகும். மேற்படி பாதையின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பாதையினை அகலப்படுத்தி கிராவல் சாலை அமைக்க ரூ.3 இலட்சம் தேவைப்படும். வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் இப்பணியை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

26—

## தார்ச் சாலை வசதி

**வினா எண் 1265—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 டிசம்பர் 7

முகையூர் தொகுதிக்குட்பட்ட காடகனூர் கிராமத்தில் இருந்து பில்ராம்பட்டு வரை செல்லும் இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காடகனூர் பில்ராம்பட்டு ஊராட்சி சாலையை மேம்பாடு செய்து தார்ச் சாலை அமைக்கவும் மற்றும் மூன்று சிறுபாலங்கள் அமைக்கவும் தோராயமாக ரூ.25.00 இலட்சம் (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) தேவைப்படும்.

முகையூர் தொகுதிக்குட்பட்ட காடகனூர் கிராமத்தில் இருந்து பில்ராம்பட்டு வரை செல்லும் இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைப்பதற்கு வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு அல்லது இதர திட்டத்தின்கீழ் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள பரிசீலனை செய்யப்படும்.

**27—**

**இணைப்புச் சாலை**

**வினா எண் 1274—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் காணை ஒன்றியத்தில் இதுவரை அமைக்கப்படாத கொசப்பாளையம்-மேல்வெங்கமூர் இணைப்புச் சாலையினை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதியில் காணை ஒன்றியத்தில் இதுவரை அமைக்கப்படாத



2006 டிசம்பர் 7]

கொசப்பாளையம்-மேல்வெங்கமூர் இணைப்புச் சாலையினை அமைக்க, வரும் நிதியாண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் NREGA மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு வரப்பெறும்போது முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**28—**

**தார்ச் சாலை**

**வினா எண் 1275—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, நல்லாப்பாளையம் கிராமத்திலிருந்து இருளர்பாளையத்திற்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, நல்லாப்பாளையம் கிராமத்திலிருந்து இருளர்பாளையத்திற்கு தார்ச் சாலை அமைக்க, வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு வரப்பெறும்போது முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**29—**

**தார்ச் சாலைகள்**

**வினா எண் 1502—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, செம்படாபாளையம் பஞ்சாயத்து அலுவலகம்–ஆற்று வரையுள்ள கப்பிச் சாலை, கடக்காடு–அந்தியூர் பிரதான சாலை வரையுள்ள மண் சாலை,

பழனிவேல்புரம் நந்தமேடு-கூச்சிக்கல்லூர் வரையுள்ள சாலை, செம்படாபாளையம் எம்ஜி.ஆர். சிலை-சித்தூர் ஓடை வரையுள்ள சாலை ஆகிய பகுதிகளில் புதிய தார்ச் சாலைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, செம்படாபாளையம் ஊராட்சி அலுவலகம்-ஆறு வரையுள்ள சாலை, கடக்காடு-அந்தியூர் பிரதான சாலை வரையுள்ள மண் சாலை மற்றும் செம்படாபாளையம் எம்ஜி.ஆர். சிலை-சித்தூர் ஓடை வரையுள்ள ஊராட்சி சாலைகளை புதிய தார்ச் சாலைகளாக அமைக்க ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து ஒதுக்கீடு பெற்று முன்னுரிமை அடிப்படையில் தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பழனிவேல்புரம் நந்தமேடு-கூச்சிக்கல்லூர் வரையுள்ள ராமச்சந்திரபுரம் முதல் குறிச்சி சாலை வழி பழனிவேல்புரம் சாலையினை கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் (Project-IV) நெடுஞ்சாலைத் துறையில் எடுத்துச் செய்ய முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**30—**

### தார்ச் சாலை

**வினா எண் 1506—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நத்தம்மேடு சாலையிலிருந்து பழனிவேல்புரம் வழியாக செல்லும் சாலை, சின்னமுனியனூர்-முத்தப்பன் கொட்டாய் வழியாக பெரிய ஏரி வரை செல்லும் சாலை ஆகிய சாலைகளை தார்ச் சாலைகளாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நத்தம்மேடு சாலையிலிருந்து பழனிவேல்புரம் வழியாக செல்லும் சாலை 2006-2007 நிதியாண்டில் ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சின்னமுனியனூர்-முத்தப்பன் கொட்டாய் வழியாக பெரிய ஏரி வரை செல்லும் ஊராட்சி சாலையை தார்ச் சாலையாக மாற்ற போதிய நிதி வசதி இல்லை.

**31—**

### தார்ச் சாலை

**வினா எண் 1508—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி சின்னபருவாச்சி-பாட்டப்பன்கோவில், சின்னபருவாச்சி சாலைப் பிரிவு-வொரசக்காட்டூர் செம்பளிச்சம்பாளையம் பகுதியிலுள்ள அனைத்து வீதிகள், மாக்கன்காடு-ஐடியல் பிரிவு நல்லதம்பிகாட்டுக் கொட்டாய்-தாண்டரம் பிரிவு ஆகிய சாலைகளை புதிய தார்ச் சாலைகளாக அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒட்டப்பாளையம் ஊராட்சி, சின்னபருவாச்சி சாலை மற்றும் பாட்டப்பன்கோவில் சாலை ஆகிய சாலைகளை அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சின்னபருவாச்சி சாலைப் பிரிவு-வொரசக்காட்டூர் சாலையானது ஊராட்சி சாலையாகும். ஊராட்சியில் போதிய நிதி வசதியின்மையால்

[2006 டிசம்பர் 7

பவானி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு வரப்பெற்றால், முன்னுரிமையில் தார்ச் சாலை அமைக்கப்படும்.

செம்பளிச்சம்பாளையம் சாலைப் பகுதியிலுள்ள அனைத்து வீதிகள், மாக்கன்காடு, ஐடியல் பிரிவு, நல்லதம்பிகாட்டுக் கொட்டாய், தாண்டரம் பிரிவு சாலை ஆகிய சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

32—

## தார்ச் சாலை

**வினா எண் 1519—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, வரதநல்லூர் கூலிக்காரன்பாளையம், கருமகவுண்டன்புதூர் பகுதிகளில் தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், தொப்பூர், மேட்டூர், பவானி, ஈரோடு சாலை முதல்; சன்னியாசிப்பட்டி சாலை முதல் கருமகவுண்டன்புதூர் செல்லும் ஊராட்சி சாலை கி.மீ. 0/0 01/0–ல் 0.550 கி.மீ. நீளம் ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் மாநில நிதிக் குழு மானியம்மூலம் தார்ச் சாலையும், 0.450 கி.மீ. நீளமுள்ள சாலை ரூபாய் 4.50 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியப் பொது நிதி 2005–2006 ஆம் ஆண்டிலும் தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

1.20 கி.மீ. நீளமுள்ள கூலிக்காரன்பாளையம் மற்றும் வரதநல்லூர் ஆகிய பகுதிகளில் அமையப்பெற்றுள்ள சாலைகளுக்கு தார் தளமிட ரூ.6.00 இலட்சம் மற்றும் 1.00 கி.மீ. நீளமுள்ள தொப்பூர், மேட்டூர், பவானி, ஈரோடு சாலை முதல் கூலிக்காரன்பாளையம் (வழி) மயானம் ஊராட்சி சாலையில் தார் தளத்தைப் புதுப்பிக்க ரூ.5.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. பவானி ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதியில்லாததால் இப்பணியினை தற்போது மேற்கொள்ள இயலாது.



2006 டிசம்பர் 7]

33—

## தார் சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 1720—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் ஊராட்சி, மகுடஞ்சாவடி முதல் கொங்கணாபுரம் செல்லும் சாலை, ஒண்டிப்பனையிலிருந்து அ. புதூர் வரையுள்ள தார் சாலைகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் ஊராட்சி, மகுடஞ்சாவடி முதல் கொங்கணாபுரம் செல்லும் சாலை ஒண்டிப்பனையிலிருந்து அ. புதூர் வரையுள்ள சாலை தூரம், 1.60 கி.மீ. ஆகும். ஒன்றிய பொது நிதியில் எடுத்துச் செய்யப் போதுமான நிதியாதாரம் இல்லாமையால், வெள்ள நிவாரண திட்டத்தில் ரூபாய் 9.70 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

34—

## நிழற்குடைகள்

**வினா எண் 2431—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வால்பாறை தொகுதியில், சோமந்துரை ஊராட்சி, கடைவீதி பேருந்து நிறுத்துமிடம், அங்கலகுறிச்சி ஊராட்சி, நான்குமுனை சுங்கம் பேருந்து நிறுத்துமிடம், பிலிசின்னம்பாளையம் ஊராட்சி பேருந்து நிறுத்துமிடம் ஆகிய அருகே, இடங்களில் நிழற்குடைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணிகளை மேற்கொள்ள தற்போது போதிய நிதி வசதி இல்லை. ஆகவே, வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப இப்பணிகளை மேற்கொள்வது குறித்து பரிசிலிக்கப்படும்.

**35—**

### சமூகநலக் கூடம்

**வினா எண் 3016—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர், ரமண முதலிபுதூர், காளியாபுரம், பிலிசின்னம்பாளையம், கரியாஞ்செட்டிபாளையம், அங்கலகுறிச்சி ஆகிய ஊராட்சிகளில் சமூகநலக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணிகளை மேற்கொள்ள தற்போது போதிய நிதி வசதி இல்லை. ஆகவே, வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப இப்பணிகளை மேற்கொள்வது குறித்து பரிசிலிக்கப்படும்.

**36—**

### புதிய கட்டடம்

**வினா எண் 1259—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, அரகண்டநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் சேமிப்புக் கிடங்கிற்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அரகண்டநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் பழைய கட்டடம் பழுதடைந்துள்ளது. புதிய கட்டடத்தில் வங்கியின் அலுவலகம் மற்றும் உரக் கிடங்கு 2003 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. வங்கியில் தானிய ஈட்டுக்கடன் ஏதும் வழங்கப்படவில்லை. எனவே, வங்கிக்கு சேமிப்புக் கிடங்கு கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**37—**

### விவசாயிகள் நலன்கள்

**வினா எண் 639—திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகள் மற்றும் ஜவ்வரிசி மாவுப் பொருள் தயாரிப்பு நிறுவனங்களின் நலன்களை காக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மரவள்ளிப் பயிர் அனைத்து மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது. சேலம், கடலூர், தருமபுரி, நாமக்கல் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் அதிக பரப்பளவில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 95,022 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இதிலிருந்து 32,01,414 மெட்ரிக் டன் மகசூல் கிடைக்கிறது.

சேலம் மாவட்டத்தில் 25,000 எக்டேர் பரப்பில் மரவள்ளிப் பயிர் சாகுபடி செய்யப்பட்டு, 8,04,827 மெட்ரிக் டன் மகசூல் கிடைக்கிறது. விருதுநகர் மாவட்டத்தில் மரவள்ளி மொத்தம் 30 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டு 1,011 மெட்ரிக் டன் மகசூல் பெறப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் சுமார் 400 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச்சு தயாரிக்கும் பணியில் செயல்பட்டு வருகின்றன. மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு

அவ்வப்போது சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மரவள்ளி பயிரிடும் விவசாயிகளை அழைத்து முத்தரப்புக் கூட்டம் நடத்தி சரியான விலை, சரியான எடை, உரிய நேரத்தில் பணப் பட்டுவாடா செய்தல் போன்றவற்றை ஒழுங்குபடுத்தி வருகிறார்கள். தேசிய தோட்டக் கலை இயக்ககத்தின் மூலம் 2,000 எக்டேர் பரப்பிற்கு நச்சுயிரி நோய் தாக்காத விதைக்கரணைகளை, திசு வளர்ப்புமூலம் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகித்திட ரூ.225 இலட்சம் மதிப்பீட்டில் மைய அரசுக்குப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1 எக்டேருக்கு ரூ.11,250 மானியமாக விதைக்கரணைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்படும். மேலும், சேகோசர்வ் என்ற தொழில் துறையைச் சார்ந்த அரசு நிறுவனம் ஜவ்வரிசி மாவுப் பொருட்கள் தயாரிப்பாளர்களின் நலனைப் பேணி வருகிறது.

**38—**

### குளிர்பதனக் கிடங்கு

**வினா எண் 942—திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி பகுதியில் முருங்கைக்காய் பதப்படுத்தும் குளிர்பதனக் கிடங்குகளை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அரவக்குறிச்சி பகுதியில் முருங்கைக்காய் பதப்படுத்த குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**39—**

### கூட்டுறவு வங்கி மானியம்

**வினா எண் 983—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் மண்புழு உரம் தயாரிப்பதற்கு வேளாண்மைத் தொடக்கக் கூட்டுறவு வங்கி மானியம் தருமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகள் மண்புழு உரம் தயாரிப்பதற்கு வேளாண்மைத் தொடக்கக் கூட்டுறவு வங்கி மானியம் தரும் திட்டமேதும் தற்சமயம் நடைமுறையில் இல்லை.

**40—**

### சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை

**வினா எண் 1258—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணலூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமான கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மணலூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தற்சமயம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**41—**

### தோட்டக்கலையை மேம்படுத்துதல்

**வினா எண் 1279—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தோட்டக்கலையை மேம்படுத்த அரசு கடந்த ஆண்டு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

(ஆ) இந்த ஆண்டு எடுக்க இருக்கும் நடவடிக்கை குறித்து அரசு அறிவிக்குமா?

[2006 டிசம்பர் 7

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தில் காய்கறி, பழப்பயிர், மலர்கள், நறுமணப் பயிர்கள் மற்றும் இதரப் பயிர்களில் கீழ்க்கண்ட விவரப்படி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நடவுச் செடிகள் மற்றும் உயர் விளைச்சல் காய்கறி விதைகள் 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது:-

| | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| காய்கறி | 4.190 | 253.00 |
| பழப் பயிர் | 1.299 | 30.50 |
| மலர்கள் | 0.570 | 3.00 |
| நறுமணப் பயிர்கள் | 0.440 | 9.00 |
| இதரப் பயிர்கள் | 0.400 | 25.00 |
| **மொத்தம்** | **6.839** | **320.50** |

(ஆ) நடப்பாண்டில் காய்கறிகள், பழப்பயிர்கள், மலர்கள், நறுமணப் பயிர்கள் மற்றும் இதரப் பயிர்கள் 330 எக்டேர் பரப்பளவில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் காய்கறி விதைகள் மற்றும் இதரச் செடிகள் 50 சத மானிய விலையில் வழங்கப்படும். துல்லிய பண்ணையத் திட்டம் 10.5 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படும். மேலும் 530 எக்டேர் பரப்பளவில் சொட்டு நீர்ப் பாசனம் விவசாயிகளின் வயல்களில் 50 சத மானியத்தில் அமைத்துத் தரப்படும்.

**42—**

## தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 1719—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 டிசம்பர் 7]

(அ) தமிழகத்திலுள்ள தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தோட்டக்கலை பயிர்களின் பரப்பளவை அதிகரிக்கவும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இத்திட்டம் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, கோவை, திண்டுக்கல், தேனி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, சிவகங்கை, திருச்சி மற்றும் கடலூர் ஆகிய 13 மாவட்டங்களில் சென்ற ஆண்டில் செயல்படுத்திட ரூ.32.90 கோடி நிதி விடுவிப்பு மைய அரசால் செய்யப்பட்டது. நடப்பாண்டில் இத்திட்டத்தில் நீலகிரி மாவட்டத்தையும் சேர்த்து 14 மாவட்டங்களில் செயல்படுத்த ரூ.93.05 கோடிக்கு பிரேரணை மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**43—**

## பழவகைச் செடிகள்

**வினா எண் 2108—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தோட்டக்கலைப் பண்ணையில் கடந்த ஆண்டு பழவகை நாற்றங்காலில் எவ்வளவு செடிகள் உற்பத்தி செய்யப்பட்டன?

(ஆ) இதன்மூலம் அரசிற்கு எவ்வளவு இலாபம் என அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த ஆண்டு பழவகைச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்ட விவரம் வருமாறு:

| வ. எண் | விவரம் | எண்கள் |
|---|---|---|
| 1 | மா-ஒட்டு | 28,000 |
| 2 | சப்போட்டா-ஒட்டு | 600 |
| 3 | புளியன்-ஒட்டு | 9,700 |
| 4 | எலுமிச்சை | 1,400 |
| 5 | கொய்யா பதியம் | 33,619 |
| 6 | பெருநெல்லி | 20,000 |
| 7 | புளியன் நாற்று | 10,000 |
| 8 | கறிவேப்பிலை | 5,600 |
| 9 | பலா-ஒட்டு | 3,500 |
| 10 | அழகுசெடி | 3,500 |
| 11 | மால்டா | 1,400 |
| | மொத்தம் | 1,14,319 |

(ஆ) இதன்மூலம் ரூ.1.171 இலட்சம் இலாபம்.

44—

## விதைகள் உற்பத்தி

**வினா எண் 2473—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் விதைப் பண்ணைகளில் விதைகள் கூடுதலாக உற்பத்தி செய்ய சிறப்பு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் பெரம்பலூர், சிவகங்கை, திண்டுக்கல், இராமநாதபுரம், தூத்துக்குடி, நாமக்கல் தவிர இதர மாவட்டங்களில் உள்ள 37 அரசு விதைப் பண்ணைகள், 5 மாநில எண்ணெய்வித்துப் பண்ணைகள் மற்றும் 1 பயறு விதைப் பண்ணை, ஆக மொத்தம் 43 அரசு விதைப் பண்ணைகள் இயங்குகின்றன.



2. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான ஆதார விதைகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து வல்லுநர் விதைகள் பெறப்பட்டு, அவற்றைப் பயனபடுத்தி, நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறு விதைகள் அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை தவிர, பயறு எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகிய ஆதார விதைகள் அரசு விதைப் பண்ணை மற்றும் மாவட்டத்திலுள்ள முன்னோடி விவசாயிகளின் வயல்களில் விதைப் பண்ணைகள் அமைத்தும், ஆதார விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

3. மேற்கண்டவாறு உற்பத்தி செய்யப்பட்ட ஆதார விதைகளைக் கொண்டு விவசாயிகளின் நிலங்களில் விதைச் சான்றுத் துறையில் நேரடியான கண்காணிப்பில், சான்று விதையாக உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, தேவைக்கேற்ப ஆதார விதைகள் அரசு விதைப் பண்ணைகளால் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பது தெரிவிக்கப்படுகிறது.

45—

## நெல்லிக்காய் உற்பத்தி

**வினா எண் 3065—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில், டாப்சிலிப், கோழிகமுத்தி, சங்கரன்குடி ஆகிய இடங்களிலுள்ள மலை ஜாதி மக்கள்மூலம் நெல்லிக்காய் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வால்பாறை கடல் மட்டத்திலிருந்து 3,000 அடி உயரத்தில் உள்ளது. எனவே, அங்கு நெல்லி வணிக ரீதியாக சாகுபடி செய்ய இயலாது. மேலும் டாப்சிலிப், கோழிகமுத்தி, சங்கரன்குடி பகுதிகள் வனத் துறைக்கு உட்பட்ட பகுதியில் உள்ளது. இப்பகுதிகளில் பழங்குடியினர் வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் சாகுபடி செய்து வருகின்றனர்.

[2006 டிசம்பர் 7

46—

## மரவள்ளிக்கிழங்கு

**வினா எண் 3069—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சங்கரன்குடி, மலைஜாதி மக்கள் மரவள்ளிக்கிழங்கு பயிரிட்டு வளர்க்க அரசு உதவி புரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதி, சங்கரன்குடி, மலைஜாதி மக்கள் மரவள்ளிக்கிழங்கு பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர், கோயம்புத்தூர்மூலம் நடப்பு ஆண்டில் நடப்பு பருவத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மரவள்ளிக்கிழங்கு விதைக் கரணைகள் 50 சதம் மானியத்தில் வழங்கி உரிய தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும்.

47—

## விற்பனை நிலையம்

**வினா எண் 3455—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள டாப்சிலிப் தாவரங்கள் விற்பனை நிலையத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் உள்ள டாப்சிலிப்பில் தாவரங்கள் விற்பனை நிலையம் தோட்டக்கலைத் துறைமூலம் எதுவும்



2006 டிசம்பர் 7]

செயல்படவில்லை. ஆழியாறு பகுதியில் உள்ள கோட்டூர் என்ற இடத்தில் இயங்கி வரும் வேளாண் கிடங்கில் தோட்டக்கலைத் துறை சார்பில் பழக்கன்றுகள், காய்கறி விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் டாப்சிலிப்பில் உள்ள விவசாயிகளின் நலனுக்காக விற்பனை செய்யப்படுகின்றன. அங்கு தனியாக விற்பனை நிலையம் ஒன்றினை அமைக்கும் கருத்துரு அரசிடம் இல்லை.

48—

## விதை பதப்படுத்தும் நிலையம்

**வினா எண் 3540—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழித் தொகுதியில் விதை பதப்படுத்தும் நிலையம் ஒன்றினை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் விதை பதப்படுத்தும், அதாவது அறுவடையாகும் விதைகளை சுத்திகரிப்பு செய்து தரும் நிலையங்கள் திருக்கடையூர் மற்றும் நாகமங்கலம் ஆகிய பகுதிகளில் உள்ளன. மேற்கண்ட இரண்டு இடங்களும் சீர்காழிக்கு அருகில்தான் உள்ளன. எனவே, சீர்காழி பகுதியில் அறுவடையாகும் விதைகளையும், இந்த இரண்டு நிலையங்களிலும் சுத்திகரிப்பு செய்துகொள்ளலாம். புதியதாக ஒரு நிலையம் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை.

49—

## சேமிப்புக் கிடங்கு

**வினா எண் 8016—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரியில் மரவள்ளிக்கிழங்கு சேமிப்புக் கிடங்கு அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மரவள்ளிக்கிழங்கு விரைவில் அழுகக்கூடிய பொருள். மேலும், அறுவடை செய்து ஒரு நாளைக்கு மேல் சேமித்து வைக்க இயலாது. மரவள்ளிக்கிழங்கை அறுவடை செய்த 24 மணி நேரத்திற்குள் அரைத்து ஸ்டார்ச்சாக மாற்றாவிட்டால் அதன் மாவுச்சத்து குறைந்து கெட்டுப்போய் விடுவதுடன், நச்சுத்தன்மை கொண்டதாக மாறிவிடும். எனவே, வேளாண்மை விற்பனைத் துறையின்மூலமாக மரவள்ளிக் கிழங்கிற்கென சேமிப்புக் கிடங்கு ஏதும் அமைக்க வாய்ப்பில்லை.

**50—**

## உழவு

**வினா எண் 8022—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுக்குச் சொந்தமான டிராக்டர்கள்மூலம் குறைந்த வாடகையில் விவசாயிகள் உழவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அரசுக்குச் சொந்தமான வேளாண்மைப் பொறியியல் துறை டிராக்டர்கள்மூலம் தற்பொழுது குறைந்த வாடகையான ஒரு மணி நேரத்திற்கு ரூ.150 வீதம் விவசாயிகளுக்கு உழவு செய்ய அளிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வகையில் 2006–2007 ஆம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான வேளாண்மைப் பொறியியல் துறையில் 121 டிராக்டர்கள்மூலம் ஜூலை 2006 முடிய 36,486 மணி நேரம் உழவர் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**51—**

## ஆகாயத்தாமரைச் செடிகளை அகற்றுதல்

**வினா எண் 2212—திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சாத்தான்குளம் தொகுதி, மருதூர் மேல் கால்வாய் சார்ந்த குளங்கள் அனைத்தும் ஆகாயத்தாமரைச் செடிகளால் சூழ்ந்துள்ளதால், அதனை உடனடியாக அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

பராமரிப்பு நிதியின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் தொகையில் மருதூர் மேலக்கால் மற்றும் கீழக்கால் கால்வாய் சார்ந்த குளங்களில் உள்ள ஆகாயத்தாமரைச் செடிகளை அகற்றும் பணி, நடப்பு நிதியாண்டிற்குள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**52—**

## கடனுதவி

**வினா எண் 4441—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள முன்னாள் படைவீரர்களின் குடும்பத்தினருக்கு சிறு தொழில் செய்ய கடனுதவி வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்களுக்கு சிறு தொழில் செய்திட கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

வங்கிக் கடன் வட்டி மானிய திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் முன்னாள் படை வீரர் மற்றும் அவர்தம் விதவையர் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள்மூலம் சிறு தொழில் (விவசாய கடன்கள் நீங்கலாக) முனைவதற்காக பெறும் ரூ.2,50,000/– வரையிலான கடன்களுக்கு அவர்கள் செலுத்தும் வட்டியில் 50 சதவீதத் தொகை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்கள் பெறும் வங்கிக் கடன் ரூ.7.50 இலட்சத்திற்கு 100 சதவீதம் வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

[2006 டிசம்பர் 7

**செம்பக்ஸ்–II:**

இத்திட்டத்தின்கீழ் முன்னாள் படை வீரர் மற்றும் அவர்தம் விதவையர்கள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களை மேற்கொள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் அதிகபட்சமாக ரூ.10.00 இலட்சம் வரை கடன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் தொழில் முனைவோரின் பங்கீடு 15 சதவீதம் ஆகும். இக்கடன் அதிகபட்சமாக 10 ஆண்டுகள் வரையில் திரும்பச் செலுத்தக்கூடியதாகும்.

**செம்பக்ஸ்–III:**

கதர் மற்றும் கிராமத் தொழில்கள் முனைய முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்கள் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்மூலம் தேசிய வங்கிகளால் தொழிற்கேற்றபடி கடன் வழங்கப்படுகிறது. தொழில் தொடங்கிட தேவைப்படும் கடன் தொகையில் பகுதித் தொகை 30 சதவீதம் ஆகும். இது இறுதியில் மானியமாக வழங்கப்படும்.

**தேசிய ஈக்விட்டி நிதித் திட்டம்:**

சிறு தொழில் மற்றும் சில விவசாயத் தொழில்கள் தொடங்கிட அதிக்பட்சமாக ரூ.50.00 இலட்சம் வரை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகள்மூலம் முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. கடன் தொகையில் 10 சதவீதம் தொழில் முனைவோரின் பங்கீடு ஆகும். 65 சதவீதம் முறை கடனாகவும், 25 சதவீதம் குறைந்த வட்டிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்துத் திட்டங்கள்மூலம் வால்பாறையில் உள்ள முன்னாள் படைவீரர்களின் குடும்பத்தினருக்கும் சிறு தொழில் செய்ய கடனுதவி வழங்க இயலும்.

(ஆ) ஏற்கெனவே நடைமுறையில் உள்ளதால் எப்பொழுது என்பதற்கு இடமில்லை.

**53—**

### சிற்றுந்து வசதி

**வினா எண் 919—திரு.கோவை தங்கம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 டிசம்பர் 7]

(அ) வால்பாறை மலைப் பகுதியில் மினி பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையிலுள்ள பகுதி திட்டத்தின்கீழ் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் 250 சிற்றுந்துகள் அனுமதிச் சீட்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சில மாவட்டங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 250 அனுமதிச் சீட்டுகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. போக்குவரத்து வசதி தேவையுள்ள கிராம மக்களுக்கு சிற்றுந்து வசதியைப் பரவலாக்கும் வகையில் மிகக் குறைவான அனுமதிச் சீட்டுகள் வழங்கிய பிற மாவட்டங்களில், பயன்படுத்தப்படாத அனுமதிச் சீட்டுகளைத் தேவையான மாவட்டங்களுக்கு ஒன்றியம்வாரியாக மறு ஒதுக்கீடு செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

**54—**

### தலைக்கவசம் அணிதல்

**வினா எண் 2905—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரு சக்கர வாகனங்கள் ஓட்டுபவர்கள் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும் என்ற ஆணையை வெளியிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மோட்டார் வாகன சட்டப் பிரிவு 129–ன்படி, இரு சக்கர வாகன ஓட்டுநர்கள் வாகனம் ஓட்டும்பொழுது கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும். இந்நிலையில், சில வாகன ஓட்டுநர்கள் தலைக்கவசம் அணிவதால், தங்களுக்கு அசௌகரியங்கள், தலை முதலான பகுதிகளில் உடல் உபாதைகள் ஏற்படுவதாகத் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது. இந்நிலையில் மோட்டார் வாகன சட்டப் பிரிவு 129–ஐக் கட்டாயமாக அமல்படுத்த உத்தரவிட வேண்டும் என்று

[2006 டிசம்பர் 7

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு அவை நிலுவையில் உள்ளன. இந்நிலையில் இதற்காக அரசு ஆணை வெளியிட வேண்டும் என்ற அவசியம் தற்போது எழவில்லை.

**55—**

### பட்டா வழங்குதல்

**வினா எண் 2006—திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனப் புறம்போக்கு நிலங்கள் மற்றும் ஒதுக்கீட்டுக் காடுகளில் வீடுகட்டி விவசாயம் செய்து வாழ்ந்துவரும் மக்களின் அனுபவ நிலங்களுக்கும், வீடுகளுக்கும் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் வனப் புறம்போக்கு நிலங்கள் மற்றும் ஒதுக்கீட்டுக் காடுகளில் வீடுகட்டி விவசாயம் செய்து வாழ்ந்துவரும் மக்களின் அனுபவ நிலங்களுக்கும், வீடுகளுக்கும் பட்டா வழங்க அரசு விதிகளில் இடமில்லை.

**56—**

### காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 2177—செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களில் காலியாகவுள்ள அமைச்சுப் பணியாளர்கள் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

அரசாணை எண் 14, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ப்பி) துறை, நாள் 07-02-2006 இல் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான தடையை நீக்கம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.



2006 டிசம்பர் 7]

தமிழகத்தில் உள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களில் காலியாகவுள்ள எல்லா பணியிடங்களையும் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு எவ்வளவு விரைவாக நிரப்ப முடியுமோ அவ்வளவு விரைவாக நிரப்புமாறு அனைத்து நீதித் துறை நியமன அலுவலர்களுக்கும் சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து அறிவுறுத்தப்பட்டுள்ளது. மூன்றாம் நிலை சுருக்கெழுத்துத் தட்டச்சர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நியமன அலுவல் எல்லைக்குட்பட்டதாகும். தேர்வாணையம், மேற்படி பணிகளுக்கான தேர்வுகள் நடத்தி நீதித் துறையில் சார்நிலைப் பணியிடங்களுக்குப் பணியாளர்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும். தேர்வாணையத்தின் நியமன அலுவல் எல்லைக்குட்படாத இதரப் பணியிடங்களுக்குப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட வேலை வாய்ப்பகங்களால் முன்மொழிந்து அனுப்பப்படும் பணியாளர்கள் ஆவர்.

**57—**

### மனைப் பட்டா

**வினா எண் 2548—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, பன்னம்பட்டி, வண்ணார்பாறை பகுதியில் குடியிருந்து வரும் 15 குடும்பங்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பன்னம்பட்டி கிராமம், வண்ணார்பாறை என்ற இடத்தில் 15 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கோரும் புறம்போக்கு நிலமானது சேலம் மாநகராட்சி எல்லையில் இருந்து 16 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ளதால் அரசு விதிகளின்படி பட்டா வழங்க இயலாது.

**58—**

### விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம்

**வினா எண் 2932—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் மீண்டும் அமைப்பது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம் இயற்றவும், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தினை மீண்டும் அமைக்கவும், அரசு கருதி அதற்கான சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான சட்டம் இயற்றப்பட்டவுடன், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படும்.

**59—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 3563—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், இடிகரை சிறப்பு சிற்றூராட்சிக்குட்பட்ட மணியக்காரன்பாளையத்தில் உள்ள ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், இடிகரை கிராமம், மணியக்காரன்பாளையம் புல எண் 442/1 மற்றும் 517 ஆகியவை நீர்நிலைப் புறம்போக்கு என்பதால் இவ்விடத்தில் பட்டா வழங்க இயலாது.

**60—**

## அடிப்படை வசதி

**வினா எண் 4145—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் மாணவர் விடுதி, சிற்றுண்டி உணவு விடுதி மற்றும் வாகன வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியினைத் தமிழக அரசே ஏற்று அரசு சட்டக் கல்லூரியாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அரசு சட்டக் கல்லூரியாக மாற்றியபின் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் அரசு செய்து தரும்.

**61—**

## காலிச் சாக்குகள்

**வினா எண் 3542—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து பொது விநியோகக் கடைகளில் உள்ள காலிச் சாக்குகளை அரசே கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள அனைத்து பொது விநியோகக் கடைகளில் உள்ள காலிச் சாக்குகளை அரசே கொள்முதல் செய்வது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் செயல்படும் கிடங்குகளில் அமுதம் சில்லறை அங்காடிகளில் உள்ள காலிச் சாக்குகள் திரும்பப் பெறப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுகின்றன. கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் சில்லறை அங்காடிகளில் உள்ள காலிச் சாக்குகள் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களால் டெண்டர் முறையில் விற்பனை செய்யப்படுகின்றன.

[2006 டிசம்பர் 7

62—

## அறக்கட்டளை

**வினா எண் 2625— திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம், நெம்மேலி ஆளவந்தார் நாயக்கர் அறக்கட்டளை நிலங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றி அறக்கட்டளையின் வருமானத்தை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

நெம்மேலி ஆளவந்தார் நாயக்கர் அறக்கட்டளைக்குச் சொந்தமான நஞ்சை 67.92 ஏக்கர், புஞ்சை 986.08 ஏக்கர், ஆக மொத்தம் 1054.00 ஏக்கர் நிலத்தில் 924 ஏக்கர் நிலங்கள் கீழ்க்கண்டவாறு பயன்படுத்தப்பட்டு வருகின்றன:

| | | ஏக்கர் சென்ட் |
|---|---|---|
| 1. | அரசு வனத் துறையின்மூலம் சவுக்கு பயிரிடப்பட்டுள்ளது | 611.00 |
| 2. | பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டவை | 266.00 |
| 3. | சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிகக் குடியிருப்புகள் கட்ட மாவட்ட ஆட்சியரால் தற்காலிகமாக எடுத்துக்கொள்ளப்பட்டது | 12.00 |
| 4. | முந்திரி மற்றும் பனைத் தோப்பு | 12.00 |
| 5. | அறக்கட்டளைக்குச் சொந்தமான கட்டடம், மனை மற்றும் காலியிடம் | 2.00 |
| 6. | பண்ணைச் சாகுபடி | 21.00 |
| | **கூடுதல்** | **924.00** |



2006 டிசம்பர் 7]

மீதமுள்ள 130 ஏக்கர் நிலத்தில் இந்த ஆண்டு மழைக்காலத்தில் வனத் துறையின்மூலம் சவுக்கு பயிரிடப்பட உள்ளது. வேறு ஆக்கிரமிப்புகள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ஆக்கிரமிப்பு ஏதேனும் உள்ளதா என்பதைக் கண்டறிய அளவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

63—

## கழிப்பிடம் கட்டுதல்

**வினா எண் 3215—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயிலுக்கு நவீனக் கழிப்பிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை வட்டம், வால்பாறை நகர், அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயிலின் வளாகத்தில் திருமண மண்டபத்திற்கு அருகில் தற்பொழுது இரண்டு கழிப்பறைகள் பக்தர்கள் பயன்பாட்டிற்காக உள்ளன. மேலும் இரண்டு கழிப்பறைகள் திருக்கோயில் நிதிமூலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

64—

## ஆலயம் புதுப்பித்தல்

**வினா எண் 3428—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, திருத்தணி அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தில் உள்ள கரிம்பேடு ஆலயத்தை புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பள்ளிப்பட்டு தொகுதி, திருத்தணி அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் நிர்வாகத்தின்கீழுள்ள கோயிலான சுரிம்பேடு, அருள்மிகு நாதாதீஸ்வர சுவாமி திருக்கோயில் திருப்பணிகள் ரூ.3.60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டு திருக்கோயில், மேல்தளத்தில் தட்டோடு பதிக்கும் பணி, கோபுரத்தில் உள்ள சுதை வேலைப்பாடுகள் சீர்செய்யும் பணி, கோபுரம் உட்புறம் பழுதுபார்த்தல் பணி, அனைத்து சன்னதிகள் மற்றும் கோபுரங்களுக்கு வர்ணம் தீட்டும் பணி ஆகியன நடைபெற்று சுமார் 80 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. மீதம் உள்ள பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு வரும் நவம்பர் மாதம் குடமுழுக்கு நடைபெற ஏதுவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**65—**

### பஞ்சாலையை அரசு எடுத்து நடத்துதல்

**வினா எண் 3412—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரை வட்டம், முத்தனேந்தல் சோமசுந்தரம் பஞ்சாலையை மீண்டும் அரசு எடுத்து நடத்த உத்தேசித்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ)* மானாமதுரை முத்தனேந்தல் சோமசுந்தரம் பஞ்சாலையை மீண்டும் அரசு எடுத்து நடத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**66—**

### கழிப்பிடம் கட்டுதல்

**வினா எண் 1306—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* வால்பாறை தொகுதி, கோட்டூர் சிறப்பு ஊராட்சி, பொங்காளியூர் இடைநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கழிப்பிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதி, கோட்டூர் சிறப்பு ஊராட்சி, பொங்காளியூர் இடைநிலைப் பள்ளிக்கு ஒரு சிறுநீர்க் கழிப்பிடமும், ஒரு கழிப்பிடமும் (Toilet) உள்ளன. 2004–2005-ல் அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் ஒரு கழிப்பிடமும் 2005–2006-ல் அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் ஒரு கழிப்பிடமும் 2005–2006-ல் பேரூராட்சியில் ஒரு கழிப்பிடமும் கட்டப்பட்டுள்ளது. மாணவ/மாணவியர் எண்ணிக்கை அதிகம் உள்ளதால் மாணவர்களுக்கு ஒரு சிறுநீர்க் கழிப்பிடமும், மாணவியர்க்கு ஒரு சிறுநீர்க் கழிப்பிடமும் தனித்தனியாக அனைவருக்கும் கல்வித் திட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**67—**

### கழிப்பிடங்கள் கட்டுதல்

**வினா எண் 1317—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியில் வால்பாறை ஆரம்பப் பள்ளிக்குப் போதுமான கழிப்பிடங்கள் கட்டித் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதி, வால்பாறை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் இரு சிறுநீர்க் கழிப்பிடங்களும், கழிப்பிடம்

[2006 டிசம்பர் 7

(Toilet) ஒன்றும் ஆக மூன்று கழிப்பறைகள், 2002-2003 மற்றும் 2005–2006 ஆம் ஆண்டுகளில் அனைவருக்கும் கல்வித் திட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் கட்டப்பட்டு உபயோகத்திலுள்ளன. தற்போது, மாணவர் மற்றும் மாணவியர்களுக்குக் கூடுதலாகத் தேவைப்படும் சிறுநீர்க் கழிப்பிடம் ஒன்று அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**68—**

**சட்டங்களை எளிமையாக்குதல்**

**வினா எண் 2788—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரிச் சட்டங்களை எளிமையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 நடைமுறையில் உள்ளது. இதற்குப் பதிலாக 01-01-2007 முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ள மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் வணிகர்கள், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அறிந்துகொள்ளும் வகையில் மிகவும் எளிமையாக வடிவமைக்கப்படும்.

**69—**

**வியாபாரிகளுக்குச் சலுகைகள்**

**வினா எண் 3328—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை மலைப்பகுதி என்பதால் வணிக வரித் துறையின்மூலம் வியாபாரிகளுக்குச் சில சலுகைகள் வழங்க அரசு முன்வருமா?



2006 டிசம்பர் 7]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

வால்பாறை போன்ற ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள வணிகர்களுக்கு மட்டும் வரிவிலக்கு அல்லது வரிக்குறைப்பு ஆகிய சலுகைகள் வழங்க வணிக வரிச் சட்டங்களில் வகையில்லை. எனினும், பொருளாதாரத்தில் கீழ்நிலையிலுள்ள அனைத்துப் பகுதி பொதுமக்களுக்குத் தேவைப்படும் உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் போன்ற பொருட்களின்மீது விற்பனை வரி விலக்கு அளித்து அரசு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**70—**

**கால்பந்து மைதானத்தைச் சீர்படுத்துதல்**

**வினா எண் 1685—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் விளையாட்டு அரங்கத்தில் கால்பந்து விளையாட்டு மைதானத்தை சீர்செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கால்பந்து மைதானத்தைப் பொதுமக்கள் நன்கு பயன்படுத்தி வருகின்றனர். கால்பந்து மைதானத்தைச் சீர்படுத்த கட்டட மையம்மூலம் ரூ.12.50 இலட்சம் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. Helipad அமைத்திடும் கருத்துரு எதுவும் தற்போது இல்லை.

(ஆ) மேற்காணும் தொகை ரூ.12.50 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் கால்பந்து மைதானத்தைச் சீர்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

71—

### விளையாட்டு அரங்கம்

**வினா எண் 2846—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரில் விளையாட்டு அரங்கம் மற்றும் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு நகரில் விளையாட்டு அரங்கம் மற்றும் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

### விளையாட்டு மைதானம்

**வினா எண் 3194—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப்பகுதியில் விளையாட்டு மைதானம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை மலைப்பகுதியில் விளையாட்டு மைதானம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



73—

### விளையாட்டுப் போட்டிகள்

**வினா எண் 3197—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டியை ஒருமுறை வால்பாறையில் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தனித்தனியாக நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) மாதந்தோறும் நடத்தப்படும் மாவட்ட அளவிலான போட்டிகள் வால்பாறையிலும் நடத்த வழிவகை உள்ளது.

74—

### உதவித் தொகை

**வினா எண் 3198—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப்பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு விளையாட்டுத் துறையில் ஆர்வத்துடன் ஈடுபட அரசு உதவித் தொகை வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை மலைப்பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு விளையாட்டுத் துறையில் ஆர்வத்துடன் ஈடுபட அரசு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஏதும் தனியாக இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

75—

**கிளை அலுவலகம்**

**வினா எண் 3208—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சுற்றுச்சூழல் துறையின் சார்பாக கிளை அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் சுற்றுச்சூழல் துறையின் சார்பாக கிளை அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

76—

**விளையாட்டு மையம்**

**வினா எண் 3410—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் மாணவர்களுக்கு அரசு சார்பில் விளையாட்டு மையம் ஒன்று கட்ட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரையில் மாணவர்களுக்கு அரசு சார்பில் விளையாட்டு மையம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



77—

**விளையாட்டுப் போட்டிகள்**

**வினா எண் 4111—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகராட்சி அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வொரு நகராட்சியிலும் தனியாக நகராட்சி அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

78—

**விளையாட்டுப் போட்டிகள்**

**வினா எண் 4112—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஒவ்வொரு ஒன்றியத்திலும் தனித்தனியாக ஊராட்சி ஒன்றிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தும் திட்டம் அரசால் ஏற்கப்பட்டுள்ளது.

(ஆ) அக்டோபர் மாதத்தில் நடைபெற உள்ளது.

[2006 டிசம்பர் 7

79—

## கிரிக்கெட் மைதானம்

**வினா எண் 4116—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் கிரிக்கெட் மைதானம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் கிரிக்கெட் மைதானம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

80—

## உடற்பயிற்சிக் கூடம்

**வினா எண் 6942—திரு. ஆர் சின்னசாமி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, மாநகராட்சிக்குட்பட்ட காந்தி நகர் ஆதிதிராவிட பகுதியில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தா அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சிங்காநல்லூர் தொகுதி, மாநகராட்சிக்குட்பட்ட காந்தி நகர் ஆதிதிராவிட பகுதியில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



2006 டிசம்பர் 7]

81—

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 8082—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், சீரங்கம்பாளையத்தில் விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், சீரங்கம்பாளையத்தில் விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

82—

## புல்மலையை அழகுபடுத்துதல்

**வினா எண் 4870—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள புல்மலையை அழகுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் உள்ள புல்மலை பகுதி தேசிய பூங்காவாக அறிவிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியைத் தனியாக அழகுபடுத்த ஒதுக்கீடு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

83—

## புதியதாகச் சாலை

**வினா எண் 1071—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதியில் வேலூர் சத்துவாச்சாரி சேம்பாக்கம் பகுதியில் நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையில் சுடுகாட்டுக்குச் செல்லவும், பள்ளிக் குழந்தைகள், பொதுமக்கள் செல்லவும் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சேம்பாக்கம் பிள்ளையார்கோயில் முதல் இராகவேந்திரா கோயில் வரை செல்லும் சாலைப் பகுதியானது வேலூர் (நெ) கோட்டப் பராமரிப்பிலுள்ள 2.00 கி.மீ. நீளமுள்ள மாவட்ட இதர சாலையாகும். இந்தச் சாலை கிருஷ்ணகிரி–இராணிப்பேட்டை சாலை (தே.நெ. 46–ல்) கி.மீ. 116/2–ல் பிரிந்து செல்கிறது. இவ்விடத்தில் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் கீழ்ப்பகுதியில் (Underpass) பேருந்து மற்றும் இரு சக்கர வாகனங்கள் செல்ல தனிப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. தற்போது, சேம்பாக்கம் கிராம மக்கள் சுடுகாடு செல்லவும், பள்ளி மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவும் சேம்பாக்கம் பிள்ளையார் கோவில் சாலையைப் பயன்படுத்துகின்றனர். எனவே, புதியதாகச் சாலை அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

84—

## காப்பகம்

**வினா எண் 1336—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உடல் ஊனமுற்றவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கு ஒரு காப்பகம் நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் உடல் ஊனமுற்றோர்களுக்கான காப்பகம் தொடங்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன்வரும் பட்சத்தில் அரசு நடவடிக்கை எடுக்கும். வால்பாறையில் அரசு முதியோர் இல்லம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை. வால்பாறையில் தொண்டு நிறுவனங்கள் ஏதும் முதியோர் இல்லம் நடத்த முன்வருமாயின் அரசின் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவி பெறத் தகுதி பெற்றிருப்பின், மத்திய அரசின் மானிய உதவி பெற பரிந்துரைக்கப்படும்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

85—

## கால்நடை கிளை மருத்துவ மையங்கள்

**வினா எண் 3684—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில், தேவாமங்கலம், இறவாங்குடி, ஸ்ரீபுரந்தான், உல்லியக்குடி, உடையார்பாளையம் ஆகிய இடங்களிலுள்ள கால்நடை கிளை மருத்துவ மையங்களைத் தரம் உயர்த்தவும் அங்கு மருத்துவர்களை நியமிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்பட்டு வருகின்ற இறவாங்குடி, உடையார்பாளையம் மற்றும் டி. பாலூர் ஊராட்சியில் ஸ்ரீபுரந்தான், உல்லியக்குடி ஆகிய கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தவும் மற்றும் அங்கு மருத்துவர்களை நியமிக்கவும் தற்போது அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை. மேலும் தேவாமங்கலத்தில் கால்நடை நிலையம் ஏதும் செயல்படவில்லை.

[2006 டிசம்பர் 7

86—

## மாணவ-மாணவியர்களுக்கு உணவு

**வினா எண் 1220—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், மாணவ மாணவியர்களுக்கு மதியம் அரிசி உணவும், இரவு, காலை நேரங்களில் சிற்றுண்டியும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் நலம் / பழங்குடியினர் நலம் / பள்ளி விடுதிகள் / கல்லூரி / முதுகலைப்பட்டதாரி / தொழிற்பயிற்சிக் கல்வி விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு, அரசு ஆணை (நிலை) எண் 191, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 13-8-2003-ல் உத்தரவிட்டுள்ளபடி ஒருங்கிணைக்கப்பட்ட அளவு மற்றும் உணவுப் பங்கீடு அளவுகளின்படி (Menu and Ration) கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:-

| நாள் | காலை சிற்றுண்டி | மதிய உணவு | இரவு சாப்பாடு |
|---|---|---|---|
| ஞாயிறு | இட்லி, சாம்பார் | சாதம், சாம்பார், மோர். | சாதம், தக்காளி சூப், பொரியல், ரசம். |
| திங்கள் | ரவா கிச்சடி, சட்னி | சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர். | சாதம், காரக் குழம்பு, இஞ்சி ரசம், பொரியல். |
| செவ்வாய் | பொங்கல், சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர். | சாதம், சாம்பார், கூட்டு. |
| புதன் | தோசை, சாம்பார் | சாதம், மட்டன் குருமா, கூட்டு, மோர். | சாதம், காரக்குழம்பு, ரசம். |
| வியாழன் | ரவா கிச்சடி, சட்னி | சாதம், சாம்பார் பொரியல், மோர். | சாதம், காரக்குழம்பு, ரசம் மற்றும் பொரியல். |
| வெள்ளி | பொங்கல், சட்னி | சாதம், குழம்பு, பொரியல், மோர் | சாதம், காரக்குழம்பு, ரசம் மற்றும் பொரியல். |
| சனி | இட்லி, சட்னி | சாதம், சாம்பார், கூட்டு, மோர். | சாதம், சாம்பார், கூட்டு. |



2006 டிசம்பர் 7]

இவை தவிர,

| | | |
|---|---|---|
| முதல் வாரத்தில் புதன்கிழமை | மட்டன் | 80 கிராம் |
| இரண்டாம் வாரத்தில் புதன்கிழமை | சிக்கன் | 100 கிராம் |
| மூன்றாம் வாரத்தில் புதன்கிழமை | மட்டன் | 80 கிராம் |
| நான்காம் வாரத்தில் புதன்கிழமை | சிக்கன் | 100 கிராம் |

மேலும் வாரத்தில் இரண்டு நாட்கள் (திங்கள் மற்றும் வியாழன்) நாளொன்றுக்கு ஒரு முட்டை வீதம் மொத்தம் மாதத்தில் 8 முட்டைகள் வழங்கப்படுகின்றன. எனவே, இத்திட்டம் தமிழகத்திலுள்ள இத்துறை விடுதிகள் அனைத்திலும் செயல்படுத்தப்படுவதால், வால்பாறை தொகுதி விடுதி மாணவர்களுக்கு மட்டும் காலை, இரவில் சிற்றுண்டி வழங்குவது குறித்து பரிசீலிப்பது என்பது ஏற்புடையதாக இருக்காது.

87—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 2547—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, வெள்ளக்கல்பட்டி டால்மியா போர்டு பகுதியில், இரயில்வே துறைக்குச் சொந்தமான இடத்தில் குடியிருந்துவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஏழைகளுக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைமூலம் நிலம் ஆர்ஜிதம் செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, வெள்ளக்கல்பட்டி டால்மியா போர்டு பகுதியில், இரயில்வே துறைக்குச் சொந்தமான இடத்தில் குடியிருந்துவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நில எடுப்பு செய்வதற்கு, மேற்படி கிராமத்தில் அனைத்து புலங்களும் சதுரடியில் நிலமதிப்பு உடையதாலும், தகுதியான நிலம் ஏதுமில்லை என்பதாலும், வெள்ளக்கல்பட்டி கிராமத்தில் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது. அருகில் உள்ள சாமிநாயக்கன்பட்டி கிராமத்தில் நில எடுப்பு செய்து ஆதி திராவிடர் மக்களுக்கு வழங்க இயலும்.

[2006 டிசம்பர் 7

**88—**

**உதவித் தொகைகள் காலதாமதமின்றி வழங்குதல்**

**வினா எண் 3172—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர் மாணவர், மாணவிகளுக்கு அரசு வழங்கும் உதவித் தொகைகளை காலதாமதமின்றி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். வால்பாறை உட்பட மாநிலத்தின் அனைத்து கல்வி மையங்களில் பயிலும் ஆதி திராவிடர் மாணவர்/மாணவிகளுக்கு அரசு வழங்கும் உதவித் தொகைகள் காலதாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவர்கள் கல்வியைத் தொடர்ந்து பயில ஏதுவாக இருக்கும்பொருட்டு, அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு, கல்வியாண்டு தொடக்கத்தில் சுற்றறிக்கைமூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கல்வி உதவித் தொகையில் 60 சதவீதம் முன்பணத் தொகையினைப் புதுப்பித்தல் உதவித் தொகை பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதுபோல் புதியதாக சேரும் மாணவ/மாணவியர்களிடம், விண்ணப்பங்கள் பெற்று கல்வி நிலையத்தின் தலைவர்கள் ஆய்வு செய்து, செப்டம்பர் மாத இறுதிக்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள் ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டும் என்றும், ஏற்கெனவே வழங்கப்பட்ட முன்பணம் போக மீதம் உள்ள தொகையினை மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களிடமிருந்து காசோலையாக பெற்றவுடன் மாணவ/மாணவிகளுக்கு ஒரே தவணையாக வழங்க வேண்டும் என்றும், கல்வி உதவித் தொகை வழங்கும் பணி நவம்பர் மாத இறுதிக்குள் முடித்திட வேண்டும் என்றும் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப உரிய நேரத்தில் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.



2006 டிசம்பர் 7]

**89—**

**தரம் வாய்ந்த அரிசி உணவு**

**வினா எண் 3178—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரிலுள்ள டாக்டர் அம்பேத்கர் மகளிர் தங்கும் விடுதியில் உள்ள மாணவிகளுக்கு நல்ல தரம் வாய்ந்த அரிசி உணவு வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் அனைத்து விடுதிகளுக்கும் தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் தரமான அரிசி பெற்று, விடுதி மாணவ/மாணவியர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறே கோயம்புத்தூர் மாநகரில் உள்ள டாக்டர் அம்பேத்கர் மகளிர் தங்கும் விடுதியில் உள்ள மாணவிகளுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் பெறப்படும் தரமான அரிசியைக் கொண்டே தரமான உணவு வழங்கப்பட்டு வருகிறது.

**90—**

**நிலப் பட்டா**

**வினா எண் 3378—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, பிச்சானூர் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு நிலப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், பிச்சானூர் கிராமம் புல எண் 98.5/1-ல் 3.5 ஏக்கர் ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தப்பட்டு 105 பயனாளிகளுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**91—**

**கல்வி உதவித் தொகை**

**வினா எண் 3385—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996–2001-ல் வழங்கியதைப்போல் ஆதி திராவிட வகுப்பு மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையை வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

1996–2001-ல் வழங்கியதுபோல் ஆதி திராவிடர் மாணவர்களுக்கு தற்போதும் கீழே குறிப்பிடப்பட்ட கல்வி உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது:

1. மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகை
2. பிரீமெட்ரிக் கல்வி உதவித் தொகை (துப்புரவுத் தொழில் செய்வோரின் பிள்ளைகளுக்கு)
3. மாநில அரசின் போஸட் மெட்ரிக் உதவித் தொகை
4. மாநில அரசின் பிரீமெட்ரிக் உதவித் தொகை
5. உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை
6. இளங்கலைப் பட்டப்படிப்பு வரை சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம்
7. முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் பெண்களுக்கு மட்டும் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம்



**92—**

**மீன்களைப் பெருக்குதல்**

**வினா எண் 2079—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி அமராவதி அணையில் மீன்களைப் பெருக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

உடுமலைத் தொகுதியிலுள்ள அமராவதி அணையில் இந்த ஆண்டு உயர் ரக பெருங்கெண்டை இனமாகிய கட்லா, ரோக் மற்றும் மிருகால் ஆகிய மீன்குஞ்சுகளை 6 செ.மீ. அளவில் தரமாக வளர்த்து முறையே 3,00,000, 1,00,000 மற்றும் 1,00,000 இருப்பு செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. ஏற்கெனவே, கட்லா 1,29,934 இருப்பு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ளவற்றிற்கு செப்டம்பர் 15-க்குள் இருப்பு செய்யப்படும்.

**93—**

**மீன்களைப் பெருக்குதல்**

**வினா எண் 3075—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் நீராறு அணையில் மிருகால், கட்லா, ரோக், மடவா, விரால், ஜிலேபி, ஆறாம், விலாங்கு முதலிய மீன்களை மிக அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். நீராறு அணையில் மீன் உற்பத்தி அதிகரிக்க உரிய வழிமுறைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) 2006-2007 ஆம் ஆண்டில் இந்நீர்த்தேக்கத்தில் வேகமாக வளரக்கூடிய இந்திய பெருங்கெண்டை மீன்களாகிய கட்லா, ரோக், மிருகால் மற்றும் சாதாகெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்து மீன்வளம் பெருக நடவடிக்கை எடுக்கப்படும்.

94—

## மீன்கள் உற்பத்தி

**வினா எண் 3083—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சோலையாறு அணையில் மிருகால், மொச்சை, கெண்டை, ஆறாம், விலாங்கு, ஜிலேபி, கட்லா, ரோக், மடவா, விரால், வஞ்சிரம், நெய்மீன் முதலிய மீன்களை மிக அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) சோலையாறு அணையில் பெருங்கெண்டை மீன்களான கட்லா, ரோக் மற்றும் மிருகால் போன்ற மீன் குஞ்சுகள் துறையால் இருப்பு செய்யப்பட்டு வளர்த்து எடுக்கப்படுகின்றன. மற்ற மீன்கள் (வஞ்சிரம்/நெய்மீன் தவிர) இயற்கையாக நீரில் உற்பத்தியாகி வருகின்ற வகைகள் என்பதால் அவற்றை இருப்பு செய்வதில்லை. வஞ்சிரம்/நெய்மீன் ஆகியவை கடல் மீன்களாகும். இவை நன்னீரில் உயிர் வாழ்வதில்லை.

(ஆ) நடப்பு ஆண்டிலும் (2006-2007) சோலையாற்றில் பெருங்கெண்டை மீன்கள் மற்றும் இயற்கையில் உற்பத்தியாகும் மீன்களை அதிகமாக உற்பத்தி செய்து மக்களுக்குப் பயன்படும் வகையில் மீன் பிடிப்பினை மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

95—

## மீன்கள் உற்பத்தி

**வினா எண் 3107—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு அணையில் மிருகால், ஆறாம், விலாங்கு, ரோக், மடவா முதலிய மீன்களை மிக அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆழியாறு அணையில் மீன்வளத்தைப் பெருக்குவதற்காக மிருகால் மற்றும் ரோக் இன மீன் குஞ்சுகள் அதிக அளவில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் பண்ணைகளில் வளர்த்து அணையில் இருப்பு செய்யப்படுகின்றன. நாட்டுப்புற மீன்களாகிய விலாங்கு, ஆறாம், மடவா போன்ற மீன்கள் ஆழியாறு நீர்த்தேக்கத்தில் தானாகவே இனப்பெருக்கம் செய்து தன்னுடைய இனத்தினை வளர்க்கிறது. மீன் வளர்ச்சிக் கழகம் அவ்வாறான மீன்களைப் பாதுகாத்து வருகின்றது.

96—

## உயர்ந்த ரக மீன்கள்

**வினா எண் 3114—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நீராறு மற்றும் சோலையாறு அணைகளில் உயர்ந்த ரக மீன்களை வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள சோலையாற்றில் உயர் ரக கெண்டை மீன் குஞ்சுகள் மீன்வளத் துறைமூலம் இருப்பு செய்யப்பட்டு மீன் பிடிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வால்பாறை தொகுதியிள்ள சோலையாறு மற்றும் நீராறு நீர்த்தேக்கங்களில் 2006–2007 ஆம் ஆண்டில் உயர் ரக கெண்டை மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு மீன்வளத்தினைப் பெருக்கிட மீன்வளத் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

97—

## மீனவர்களுக்குக் காலனி விடு

**வினா எண் 3704—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொட்டாய்மேடு மீனவர்களுக்குக் காலனி வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொட்டாய்மேடு மீனவர்களுக்குக் காலனி வீடு கட்டிக் கொடுக்கும் தனியான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**98—**

**கதர்த் துணிகள்**

**வினா எண் 3203—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்த் துணிகளை, கலப்படம் இல்லாத நூல்கள்மூலம் தயாரித்து விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், கதர்த் துறை அமைச்சர்:** (அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் நூல்களுக்குத் தேவையான பஞ்சு/சிலைவர், மத்திய அரசின் கதராணையரகத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு கதர் நூல் தயார் செய்து, கதர்த் துணி உற்பத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கலப்படம் ஏற்படுவதற்கு இடமில்லை. மேலும் கதராணையரகத்தால் மத்திய சான்று அளிக்கும் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அதன்மூலம் ஒவ்வொரு கதர் வாரியத்தையும்/சங்கத்தினையும் ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கி வருகிறது. கதராணையரகம் மற்றும் கதர் வாரியத்தின்கீழ் இயங்கும் நிறுவனங்களின் உற்பத்தியில் கலப்படம் ஏதுமிருப்பின் கதராணையரகம் நடவடிக்கை எடுத்து சான்றிதழை ரத்துச் செய்யும்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**99—**

**கதர்த் துணிகளுக்குத் தள்ளுபடி**

**வினா எண் 3204—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கதர்ப் பட்டு மற்றும் கதர்த் துணிகளுக்கு கதர்க் கடையில் 50 சதவிகிதம் நிரந்தரமாக விற்பனையில் தள்ளுபடி செய்து விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், கதர்த் துறை அமைச்சர்:** (அ) கதர்ப் பட்டு மற்றும் கதர்த் துணிகளுக்கு கதர்க் கடையில் 50 சதவிகிதம் நிரந்தரமாக விற்பனையில் தள்ளுபடி செய்து விற்பனை செய்ய சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**100—**

**விளம்பரம்**

**வினா எண் 4141—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி மலைப் பகுதியில் கதர்த் துணிகளை அதிக அளவு வாங்கும் வகையில் விளம்பரம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், கதர்த் துறை அமைச்சர்:** (அ) வால்பாறை தொகுதியில் தற்போது விளம்பரம் செய்யும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

[2006 டிசம்பர் 7

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) திருவரங்கத்தில் திறக்கப்படவிருந்த பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டதாக வந்த செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் ஓர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவரங்கம் அரங்கநாதர் கோயில் அருகே பெரியார் சிலையை நிறுவி, அதை 9 ஆம் தேதி திராவிடர் கழகத்தினர் திறக்க இருக்கக்கூடிய அறிவிப்பு எல்லாம் வந்த பிறகு, இப்பொழுது சில கட்சிகள் அதை எதிர்த்து கண்டன அறிக்கை எல்லாம் தந்து, இந்து மக்கள் கட்சியினுடைய மாநிலத் தலைவர் அர்ஜுன் சம்பத் அவர்கள் மாநில அளவிலே இதற்காக ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்துவதாக அறிவித்திருக்கிறார்கள். நாடு சுதந்திரம் அடைந்து அவரவர்கள் சில உரிமைகளைப் பெற்று ஜனநாயக முறைப்படி நடந்துகொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் சிலை வைத்துத் திறப்பதற்கு ஒரு போராட்டம், வைத்துவிட்டால் சில பேர் அதன் கை விரலை உடைத்துவிட்டு அதற்காக ஓர் ஆர்ப்பாட்டம், இல்லையென்று சொன்னால் இதற்கு ஓர் ஆர்ப்பாட்டம் என்று இப்படிப்பட்ட நிகழ்வுகள், ஒரு நல்ல நாகரிகத்தைத் தமிழகத்திலே பிரதிபலிக்கவில்லை என்பதை நான் இங்கே அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவரவர்கள் அவர்களுடைய கடமையை—இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் அவர்கள் ஆலயத்திற்குச் சென்று அவர்களுடைய கருத்துகளைப் பரப்புவதிலே யாரும் எந்தத் தடையும் வைப்பதில்லை. அதே போல சில பேர் திராவிட கழகத்தினர் அவர்களுடைய கொள்கையை அவர்கள் அந்த இடத்திலே பரப்புவதிலே—தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவுப் பகலவனாக இருந்து அவர்கள் பெண் விடுதலைக்கு என்று எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்னாலே இந்த அவையிலே சமூக நீதியைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இப்படிப்பட்ட சமூக நீதி நம்முடைய தமிழகத்தில் கிடைப்பதற்கும், பெண் விடுதலைக்கும் மிகவும் வித்திட்டு, அதற்காக அரும்பாடுபட்டவரும், அதேபோல மதுவிலக்கு என்ற கொள்கையிலே உறுதியாக இருந்து, தமிழகத்திலே தனக்குச் சொந்தமான தென்னை மரங்களை எல்லாம் வெட்டி வீழ்த்தி சமுதாயப் புரட்சியைத் தமிழகத்திலே செய்த, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராகவும் இருந்து செயல்பட்ட அந்தப்



2006 டிசம்பர் 7] [திரு. சி. ஞானசேகரன்]

பகுத்தறிவுப் பகலவன், வெண்தாடி வேந்தன் தந்தை பெரியாருடைய சிலையைத் திறப்பதற்கு சில இயக்கங்கள் திடீரென்று ஒரு போராட்டம்; அதற்கு ஒரு மாறுபட்ட போராட்டம் இன்னொரு இயக்கத்தினரால் என்று எல்லாம் இருக்கக்கூடிய நிலையைத் தவிர்த்து ஒரு நல்ல நாகரிகம் தமிழகத்திலே இங்கே தவழ வேண்டும். அப்படிப்பட்ட நிலையை உருவாக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இப்படிப்பட்ட முறையற்ற ஆர்ப்பாட்டங்களையெல்லாம் அறிவித்து, தேவையில்லாத சில விஷயங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றவர்களை எப்படியாவது கட்டுப்படுத்தி, ஒரு நல்ல தமிழ் நாகரிகத்தை நம்முடைய சமுதாயத்தில் மலர வைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் திருவரங்கத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்துக் காலையிலே எனக்கும் செய்தி வந்துள்ளது. 24–10–1973 அன்று திருச்சி மாநகரம், திருவரங்கம் காவல் நிலையம் எதிரில் தந்தை பெரியார் அவர்களுடைய சிலை வைப்பதற்கு, பெரியார் சுய மரியாதைப் பிரச்சார இயக்கத்திற்கு 144 சதுர அடி இடம் வழங்கி அரசு ஆணை பிறப்பித்திருந்தது. 4–12–1996 அன்று திராவிடர் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் திரு. வீரமணி அவர்கள் தலைமையிலே பெரியார் சிலை வைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 9–8–2006 அன்று அந்த இடத்தைச் சுற்றி இரும்பு வேலி அமைக்கப்பட்டது. 18–11–2006 அன்று நள்ளிரவு சுமார் ஆறு அடி உயரத்திற்குப் பீடம் அமைக்கப்பட்டு, 21–11–2006 அன்று சுமார் ஆறு அடி உயரம் கொண்ட பெரியார் அவர்களின் முழு உருவச் சிலையை அந்த இடத்தில் நிறுவி, அதைத் திறப்பதற்காக வெள்ளைத் துணியால் மூடி வைக்கப்பட்டுள்ளது.

28–11–2006 அன்று திருவரங்கத்தில் புனிதம் காப்போர் கூட்டமைப்பு என்ற பெயரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் இந்து மக்கள் கட்சியினுடைய மாநிலத் தலைவர் பேசும்போது, பெரியார் சிலையைத் திறந்தால் உண்ணாவிரதம் அல்லது சாலை மறியல் செய்வோம் என்று பேசி, அதன் காரணமாக அந்த வட்டாரத்திலே ஒரு பரபரப்பை, ஆத்திரமூட்டக்கூடிய செயலை அவர் அங்கே உருவாக்கினார். இதற்கிடையே திராவிடர் கழகத்தினுடைய தலைவர் திரு. வீரமணி அவர்கள் இந்தச் சிலையைத் திறந்து வைப்பதற்கான அறிவிப்புகள்

எல்லாம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இந்து இளைஞர் மன்றத்தினுடைய சார்பில் மதுரை உயர் நீதிமன்றக் கிளையிலே பெரியார் சிலையைத் திறக்கக் கூடாது என்று இடைக்காலத் தடை கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுவை விசாரித்த நீதிபதிகள், பெரியார் சிலை திறக்க இடைக்காலத் தடை விதிக்க மறுத்துவிட்டார்கள் என்ற செய்தியும் வந்தது. இப்போது அந்தச் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளது அல்லது அந்தச் சிலை விகாரப்படுத்தப்பட்டுள்ளது என்பதுபோல ஒரு செய்தி வந்திருக்கின்றது. பெரியார் அவர்களுடைய சிலை மாத்திரம் அல்ல. பெருந் தலைவர்களுடைய—நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சிலையிலே சிலருக்குக் கருத்து மாறுபாடுகள் இருக்கலாம். அந்தச் சிலைக்குரிய பெரியவர்கள், தலைவர்கள் சொன்ன கருத்துகளில் வேறுபாடான நிலைகள் மற்றவர்களுக்கு இருக்கலாம். அதற்காக சிலைகளை இப்படி சேதப்படுத்துவது என்ற அநாகரிகச் செயலை அனுமதிக்க முடியாது; இந்த அரசு நிச்சயமாக அனுமதிக்காது. அதிலும் குறிப்பாக பெரியாருடைய சிலையை என்றால், அதைச் சேதப்படுத்தியவரையும் சேர்த்து மனிதனாக ஆக்கியவரின் சிலை. அதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-05*

மனிதர்கள் மனிதர்களாக வாழ வேண்டும்; மானத்தோடு வாழ வேண்டும்; தன்மான உணர்வு பெற்று வாழ வேண்டும் என்ற அந்த உணர்வை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்கள், சிலையாகத் தமிழகத்திலே பல பகுதிகளிலே காட்சி தருகின்றார். அந்தச் சிலை வைப்பது, அதைக் காண்கிற நேரத்தில் இவர் யார் என்கிற கேள்வியை மாத்திரம் எழுப்புவதில்லை. என்ன செய்தார், எதற்காகப் பாடுபட்டார், இந்தச் சமுதாயம் விழிப்படைவதற்காக அவர் ஆற்றிய தொண்டு என்ன என்பதையெல்லாம் எடுத்துக் கூறுவதற்கும், விளங்கிக்கொள்வதற்கும், அவ்வழியில் மற்றவர்கள் நடப்பதற்கும் பயன்படக்கூடிய ஒன்றாகும். அந்தச் சிலையை உடைத்தவர்கள் யாராயினும் மன்னிக்கப்படக் கூடியவர்கள் அல்ல என்பதை இந்த மாமன்றத்தில் இந்த அரசின் சார்பில் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, நான்கு பேர், இந்த விஷமத்தனத்திலே ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும், மேலும் புலன் விசாரணை நடைபெறுவதாகவும் காவல் துறை சார்பிலே எனக்குச் செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. இத்தோடு, இந்த விஷமத்தனத்தைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, எந்தக் கருத்துடையவர்களாக இருந்தாலும் சரி, ஒரு தலைவருடைய கருத்துகளுக்கு எதிராக





கருத்துகளைச் சொல்லுங்கள்; கருத்துக்கு கருத்து, எண்ணங்களுக்கு எண்ணம், கொள்கைக்குக் கொள்கை என்று அந்த மோதுதல் இருக்க வேண்டுமே தவிர, சிலைகளை உடைப்பது, சீரழிப்பது என்பதை நாம் என்றைக்கும் பொறுத்துக்கொள்ள முடியாது என்பதை இந்த அவையிலே எடுத்துக் கூறி, உரிய நடவடிக்கை, இன்று நடைபெற்ற இந்த விஷமத்தனத்திற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், யாரும் இதை மேலும் மேலும் வளர்த்து, இதை பூதாகாரமாக ஆக்காமல் இருக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொண்டு, இந்த அளவோடு நம்முடைய ஞானசேகரன் அவர்கள் எடுத்த அந்தப் பிரச்சினைக்கு என்னுடைய விளக்கமாக அளித்து அமைகின்றேன். வணக்கம்.

## (ஆ) தமிழகத்தில் வேளாண் விதைகளில் மரபணு சோதனை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. நா. இராமகிருஷ்ணன் ஆகியோர், தமிழகத்தில் சர்ச்சைக்குட்பட்ட மரபணு விதைகள் சோதனை முறையில் பயிரிடப்பட்டுள்ளதால், விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த சிறப்புக் கவன ஈர்ப்பில் பேச முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களை அழைக்கிறேன்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, இன்று சர்வதேச அளவிலும், இந்திய அளவிலும், மிக அதிகமாகப் பேசப்படுகின்ற இந்த தேசத்தின் முதுகெலும்பாக உள்ள விவசாயிகளுடைய எதிர்காலம் குறித்து ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த அவையிலே எழுப்பி, அதன்மூலமாக நம்முடைய தமிழக அரசினுடைய கவனத்தைக் கோருவதற்கான வாய்ப்பினை அளித்த தங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'This generation will perish, not because of the failures of the previous generations but by the achievements of the earlier generations' என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். இருக்கின்ற தலைமுறை அழிந்து போவதற்கான காரணம், கடந்த தலைமுறையினுடைய தோல்விகள அல்ல, சாதனைகளே என்று இப்போது ஆங்கிலத்திலே அதை அழகாகச் சொல்லியிருக்கிறார். இரண்டு முக்கியமான விஞ்ஞானத் தொழில்நுட்பங்கள் இன்று மனித குலத்தினுடைய வரலாற்றையே கேள்விக்குறிக்கு உள்ளாக்கியிருக்கின்றன. ஒன்று, தகவல் தொழில்நுட்பம்—I.T. என்று சொல்லக்கூடிய Information Technology என்று

சொல்லக்கூடிய தகவல் தொழில்நுட்பம் மனிதனுடைய வாழ்க்கையை,
அவனுடைய அன்றாட அலுவல்களை, ஏன் பூகோளத்தையே
மாற்றியமைத்திருக்கிறது; உலக பூகோளத்தையே மாற்றியமைத்திருக்கிறது.
அதேபோல, Bio-Tech என்று அழைக்கப்படக்கூடிய உயிரியல்
தொழில்நுட்பம் என்கிற விஞ்ஞானம் எதிர்கால மனிதன் எப்படி இருக்க
முடியும் என்பதை இன்றைய வரைபடத்திலே சித்தரித்து அவன்
மரபணுக்களையே மாற்றி, மனிதனுடைய குணத்தையே மாற்ற முடியும்
என்பதையெல்லாம் இந்த விஞ்ஞானம் நிரூபித்துக்கொண்டிருக்கிறது.
அந்த விஞ்ஞானம் மிக ஆபத்தான விஞ்ஞானம் என்று இன்று உலகத்திலே
இருக்கின்ற மிகப் பெரிய நாடுகளிலே இருக்கின்ற பாராளுமன்றங்கள்,
ஐக்கிய நாடுகள் சபையிலே இருப்பவர்கள்கூட இந்த Bio-Tech என்கிற
விஞ்ஞானத்தினுடைய விளைவுகளைப் பற்றி விஞ்ஞானிகள் முழுமையாக
எல்லோருக்கும் தகவல் தெரிவித்த பின்புதான் அத்தகைய
பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை சர்வதேச
நாடுகளோடு ஒப்பந்தமாகச் செய்துகொண்டிருக்கிறோம். இரண்டு, மூன்று
நாட்களுக்கு முன்னால்கூட ஒரு ஆச்சரியமான, அற்புதமான விஞ்ஞானக்
கண்டுபிடிப்பைச் சொன்னார்கள். The Swapping of genes, அதாவது
மரபணுக்களையே மாற்றியமைப்பதன்மூலமாக ஆணினுடைய
chromosome-ஐப் பெண்ணினுடைய chromosome க்கும்,
பெண்ணினுடைய chromosome-ஐ ஆணினுடைய chromosome-க்கும்
ஒரு பரிசோதனை முயற்சியாக முதல் முறையிலே Honey bees என்று
சொல்லக்கூடிய தேனீக்களிலே செய்து பார்த்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-10

அப்படி chromosome மாற்றப்பட்ட அந்தத் தேனீக்கள்—ஆண்
தேனீக்கள் பெண் தேனீக்களைப் போலவும், பெண் தேனீக்கள் ஆண்
தேனீக்கள் போலவும் நடந்து கொண்டதாக விஞ்ஞானக் குறிப்புகள்
சொல்லுகின்றன. இன்று அத்தகைய விஞ்ஞானச் சோதனை ஒவ்வொரு
நாடுகளிலும் மேற்கொள்ளப்படுகின்றபோது, மிகப் பெரிய கவனங்களை
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். இன்று வளர்ந்துவிட்ட
நாடுகள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், அந்த விளைவுகளைத்
தெரியாத அந்தப் பரிசோதனைகளைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக,
நம்மைப்போன்ற வளர்ந்து வரும் நாடுகளைப் பயன்படுத்துவதுதான்
இதிலே இருக்கின்ற மிகப் பெரிய ஆபத்து.

சமீப காலங்களிலே, நம்முடைய நாட்டிலே புதிது புதிதாக நோய்கள்
வருவதற்குக்கூட ஒரு காரணம் சொன்னார்கள். பறவை ஜுரம் என்ற
ஒரு ஜுரம் வந்தது என்று சொன்னார்கள், Birds Flu. S.A.R.S. என்கிற





ஒரு நோய் வந்தது. இப்பொழுது நம்முடைய தமிழகத்தினுடைய
அரசியலையே இரண்டு, மூன்று மாதங்களாக ஆக்கிரமித்துக்
கொண்டிருந்த சிக்குன்-குன்யா நோய் வந்தது. இந்த நோய்களுக்கெல்லாம்
என்ன காரணம் என்று ஒருவர் ஒரு பெரிய கட்டுரை எழுதியிருந்தார்.
பல பன்னாட்டு நிறுவனங்கள் நம்முடைய நாடுகளிலே பல
Virus—களைப் பற்றி ஆராய்ச்சி செய்கின்றபோது அவர்கள் முன்பின்
அறிவிப்புக் கொடுக்காமல் சில மனிதர்களையே அழைத்து சில vaccines
என்று சொல்லக்கூடிய தடுப்பு ஊசிகளைப் பரிசோதித்துப் பார்க்கின்றனர்.
இதுதான் இதைப்போன்ற புதிது புதிதான நோய்கள் வருவதற்கான
காரணம் என்று அவர்கள் சொன்னார்கள். அதை நான் உண்மை
என்றுகூட இப்பொழுது இந்த மாமன்றத்திலே சொல்ல வரவில்லை.
ஆனால், அது பரிசீலிக்கப்பட வேண்டிய தகவல் என்றுதான் சொன்னேன்.

இந்த அடிப்படையிலே இன்று G.M. Seeds - Genetically Modified Seeds,
அதாவது மரபணுக்கள் மாற்றப்பட்ட விதைகள் என்று, Monsanto என்று
சொல்லக்கூடிய ஒரு மிகப் பெரிய பன்னாட்டு விதை நிறுவனம் உலகம்
முழுவதும் அந்த விதைகளை அறிமுகப்படுத்த நினைக்கிறது. அந்த
விதையினுடைய மிக ஆபத்தான குணம் என்னவென்று சொல்கிறார்கள்
என்று சொன்னால், அந்த விதை பயிரிடப்படுகின்றபோது அந்த
விதையிலிருந்து வருகின்ற பயிரிலிருந்து வருகின்ற மகரந்தச் சேர்க்கை
நம்முடைய நாட்டினுடைய பாரம்பரியமான விதைகளை மலட்டு
விதைகளாக்கும் ஆபத்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.
அத்தகைய விதைகள் நம்முடைய தமிழகத்திலே பரிசோதனைக்கு
அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்கின்ற தகவல் வருகிறபோது—நான்
பரிசோதனையே, விஞ்ஞானப் பரிசோதனையே வேண்டாமென்று
சொல்கின்ற அந்த மூடத்தனத்தின் முடைநாற்றத்திற்குள் என்னை
அடைத்துக்கொள்ள விரும்பவில்லை. புதிய கண்டுபிடிப்புகளைப்
பரிசோதிக்கக் கூடாது என்ற சொல்லக்கூடிய அளவிற்கு உலக
விஞ்ஞானத்தினுடைய பார்வை இல்லாதவனும் அல்ல; ஆனால்,
அத்தகைய பரிசோதனை, அந்த Seed testing சரியான விளைவுகளை
உண்டு பண்ணாவிட்டால் தமிழகத்தினுடைய விதை முதல்—Seed Capital
என்னவாகும் என்கிற கேள்விக்குறியை நான் உங்களுடையமூலமாக
நம்முடைய மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்குக் கொண்டு செல்ல ஆசைப்படுகிறேன்.

அவர்கள்கூட ஏற்கெனவே இந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பதில்
சொல்லி, 17-11-2006 அன்று நம்முடைய 'இந்து' பத்திரிகையிலேகூட
அவர்கள் கொடுத்த பேட்டி வெளிவந்திருக்கிறது. அதைக்கூட அவர்கள்
கவனத்திற்கு நான் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

"With Farmers all over the State threatening a "war unto the finish" against genetically engineered crops, the State Government on Thursday said it had an "open mind" on the issue and would allow the crops only if they were proved to have no demonstrable side effects" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரசுக்கு open mind இருக்கிறது; திறந்த மனது இருக்கிறது என்று. ஆனால், இதில் என்ன நான் அரசிடம் கேட்க விரும்புகிறேன் என்று சொன்னால், இத்தகைய சோதனையை நீங்கள் அனுமதித்து இருக்கிறீர்களா, எந்தெந்த இடங்களில் எல்லாம் இத்தகைய சோதனைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன? ஏன் என்று சொன்னால், உத்தராஞ்சல் மாநிலத்திலே, Brinjal-B.T.—கத்தரி விதைகளைப் பரிசோதிப்பதற்காக நடத்தப்பட்ட அந்த முயற்சியை அந்த மாநிலத்து விவசாயிகள் முழுமையாக நின்று, முழுமையாக எதிர்த்து உத்தராஞ்சல் மாநில முதலமைச்சர் மாண்புமிகு திவாரி அவர்கள் அந்த B.T. seeds, G.E. seeds-ஐத் தன்னுடைய மாநிலத்திலே அனுமதிப்பது இல்லை என்கிற கொள்கை முடிவை எடுத்திருக்கிறார். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் இருக்கிறபோது, இன்று ஆந்திராவிலும், மகாராஷ்டிராவிலும் விவசாயிகள் ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்று சொன்னால், இந்த B.T. Cotton seeds என்கிற அந்த மரபணு மாற்றப்பட்ட விதையை நம்பி பெரும் தொழில் முதலீட்டில் அந்த விவசாயத்தை மேற்கொண்டதால்தான் அத்தகைய தற்கொலைகள் நிகழ்ந்தன என்றெல்லாம் இன்று விவசாயச் சங்கங்கள் சொல்லியிருக்கின்றன. ஏற்கெனவே கோவை மாவட்டத்திலே இருக்கின்ற ஆலந்துறையிலே அந்த நெல்லைப் பயிரிட்டிருக்கிறார்கள். நம்முடைய Green Peas மற்றும் விவசாயச் சங்கங்களைச் சார்ந்தவர்கள் அங்கே போய் மிகப் பெரிய போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்களுக்கு மிகப் பெரிய கொள்கையை விளக்கி, தகவல்களை எல்லாம் அனுப்பியிருக்கிறார்கள்.

முற்பகல் 11–15

நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட நெடிய விவசாயப் பின்னணியிலிருந்து வந்தவர்கள்; அரசாங்கத்திலும் நீண்ட அனுபவம் உள்ளவர்கள். ஆகவே, இத்தகைய பரிசோதனை, இந்தியாவில் மட்டுமல்ல; தமிழகத்தினுடைய வேளாண்மையை, நம்முடைய விதை சேமிப்பை, நம்முடைய விவசாயிகளுடைய எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்குமா என்கிற அச்சத்திற்குப் பதில் தெரிவித்து, அதிலே மிக மிக ஒரு ஆலோசனையோடு, அனுசரணையோடு அத்தகைய பரிசோதனைகளைச் செய்யலாம் என்கிற முடிவை விஞ்ஞானிகளிடமும், அதிகாரிகளிடமும் மட்டும்



விட்டுவிடாமல், விவசாயச் சங்கங்களைச் சார்ந்தவர்களையும் கூப்பிட்டு, அவர்களிடமும் பேசி, அவர்களுடைய ஆலோசனைகளையும் ஏற்று, அதற்குப் பிறகு, அந்த விதைகளுக்கான பரிசோதனைக்கான அனுமதியை வழங்க வேண்டுமென்று உங்கள்மூலமாக நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரபணு விதை மாற்று என்பது இன்றைக்கு அன்னிய நாடுகளினால உற்பத்தி செய்யப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாக இந்தியத் திருநாட்டிற்குள் இன்றைக்குப் புகுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, தமிழர்களுடைய பாரம்பரிய உணவு வகைகள் எல்லாம் இன்றைக்கு நம்மைவிட்டு மறைந்து கொண்டு வருகின்றன. அந்த வகையில், ஒரு மாற்றுப் பயிரை இந்த மரபணுமூலமாக உருவாக்கி, இன்றைக்கு அன்னிய நாடுகள், நம் இந்தியாவில் இருக்கின்ற விவசாயிகளுடைய ஆரம்ப கால நெல் விதைகளாக இருந்தாலும் அல்லது விவசாயத்தைச் சார்ந்த எந்தவொரு பொருளாக இருந்தாலும், திரும்பவும் அதை உற்பத்தி செய்வதற்கான சூழல், அன்னிய நாடுகளை நாம் எதிர்பார்த்து இருக்க வேண்டிய ஒரு அவலத்திற்கு உள்ளாகிற ஒரு செய்தியாக இந்த மரபணு மாற்றுத் திட்டம் அமைந்திருக்கிறது.

உதாரணத்திற்கு, இதை எந்த நிறுவனம் கண்டுபிடித்ததோ, அவர்கள் நாட்டில் இந்த மரபணு விதை என்பது இல்லை. அவர்கள் அதை உற்பத்தி செய்து, அதை நம் இந்தியா போன்ற வளர்கின்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். குறிப்பாக, சங்க காலங்களில் கூறப்பட்டிருப்பதுபோல், 75 ஆயிரம் நெல் விதைமணிகள் நம்முடைய தமிழகத்தில் இருந்ததாக வரலாறுகள் சொல்கின்றன. சட்டீஸ்கர் மாநிலத்தில் 35 ஆயிரம் நெல் விதை மணிகள் இருந்ததாகவும், எனக்குத் தெரிந்த தகவல்களின் அடிப்படையிலே இந்தத் தகவலைச் சொல்கிறேன். ஆனால், இன்றைக்குக் குறிப்பிட்டு, விரல்விட்டு எண்ணக்கூடிய நெல் இரகங்கள் மட்டும்தான் தமிழகத்திலும், இந்தியாவிலும் இருந்து வருகின்றன. இப்படி இந்த மரபணு மாற்றம் என்பது நம்முடைய பாரம்பரியம் மிக்க உணவு வகைகளையும், குறிப்பாக மிகப் பெரிய திருக்கோயில்களிலே கும்பாபிஷேகம் செய்கின்றபோது, அங்கே களஞ்சியம் போன்று இருக்கின்ற அந்தக் கூண்டுகளில், கடல், புவி, ஆழிப்பேரலை போன்று மிகப் பெரிய சீற்றம் ஏற்பட்டு, இந்த மண்ணில் உள்ள மக்கள் பாதிக்கப்படுகின்றபோது, மேல்தளத்தில் அந்தத் திருக்கோயில்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்ற சாமை, கேழ்வரகு, பாரம்பரியமான

நெல் விதை மணிகளைத்தான் திரும்பவும் அந்த மக்கள் இந்த மண்ணிலே விதைத்து தங்கள் உணவுத் தேவைகளை உருவாக்கிக்கொள்வதற்குப் பயன்படுத்துகின்ற வரலாறுகள் எல்லாம் நம் தமிழ் மண்ணிலே இருந்தது உண்டு. ஆனால், இந்த மரபணு மாற்று விதை என்பது, இன்றைக்கு மிகப் பெரிய ஒரு உயிர்க்கொல்லியாக, மனித இனத்திற்கே தெரியாத அளவிற்கு, அதனுடைய தாக்கம் என்பது குறைந்தபட்சம்—கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக, தமிழகத்தினுடைய சட்டப் பேரவையிலே இருக்கின்ற அனைத்துக் கட்சிகளினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குமான—ஒரு மரபணு மாற்று விதை வீரியத்தினுடைய தன்மை குறித்து, எங்கள் பசுமைத் தாயகத்தினுடைய அமைப்பின் சார்பாக, இதிலே மிகச் சிறந்த விஞ்ஞானியாக இருக்கின்றவர்களை எல்லாம் வரவழைத்து இந்த ஆய்வை நாங்கள் நடத்தினோம். அவர்கள் இந்த ஆய்வினுடைய அறிக்கையை எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சமர்ப்பிக்கின்றபோது, இந்த மரபணு விதை மாற்றின்மூலமாக ஏற்படுகின்ற பாதிப்பு என்பது எந்த மக்களுக்கும் உடனடியாகத் தெரிவதற்கு வாய்ப்பில்லை; சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின்தான் இதனுடைய விளைவு, இதனுடைய தாக்கம் ஏற்படும் என்கிற அறிவியல்பூர்வமான உண்மை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உத்தராஞ்சல் மாநிலத்திலேகூட, கடந்த வாரம், அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்களே, இந்த மரபணு விதை மாற்றின்மூலமாகப் பயிர் செய்யப்பட்ட அந்த நெல் விதைகளினால் மிகப் பெரிய பாதிப்பு தன்னுடைய தலைமுறைக்கு இருக்கிறது; இந்த மக்களுக்கு அபாயம் இருக்கிறது என்பதை உள்வாங்கிக்கொண்டு, அறிவுபூர்வமாக அவருடைய அரசு அதிகாரிகள் அதை அவருக்குத் தெளிவுபடுத்தியதனுடைய விளைவாக, அவரே நேரடியாகச் சென்று, அந்த நெற்பயிர்களை எல்லாம், பெட்ரோலை ஊற்றி, தீயிட்டு, பல நூறு ஏக்கர்களைக் கொளுத்தி, அதை மண்ணோடு மண்ணாக்கி இருக்கிறார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், அந்த அளவிற்கு ஒரு கொடிய, மிகப் பெரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சூழல் இருக்கிறது என்பதை சட்டீஸ்கர் மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் உணர்ந்ததனுடைய விளைவுதான், அந்த நெற்பயிர்களை அழித்திருக்கிறார்கள்.

நம்முடைய மண்ணிலேகூட, கோவை மாவட்டத்தினுடைய விவசாயச் சங்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, அந்த நெல் விதைப் பயிர் வளர்ந்து வருவதை அழிப்பதற்கான போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின் பிறக்கின்ற குழந்தைகளிலிருந்து, அவர்களுடைய மாற்றங்கள், வேதியியல் கூறுகளின்



காரணமாக மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-20)

அதையெல்லாம் மாண்புமிகு நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சசர் அவர்களும், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், தமிழகத்திலே இருக்கின்ற வேளாண்மை விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகமும் ஆராய்ச்சி செய்து அந்த மறு ஆராய்ச்சிக்குப் பிறகு இதனுடைய தாக்கம் என்ன என்பதை அறிந்து, தமிழகத்தின் மக்களுடைய பயன்பாட்டிற்கு இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இந்த அரிசியைச் சாப்பிடுவதால் உடல் நலம் பாதிக்கப்படுவதும், பெண்களின் கர்ப்பப் பை சிதைவதும், ஆண்களுக்கு ஆண்மைக் குறைவுகள் ஏற்படுவதும் போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று அறிவியல்பூர்வமாக இன்றைக்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்கிற ஒரு செய்தியும் இன்றைக்குத் தமிழகத்திலேயே N.G.O.s-களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக, நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனமும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும், நம்முடைய அரசும் இந்த மரபணு மாற்று—ஒன்று, நம்முடைய பண்பாட்டுக் கலாச்சார உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன; இன்னொன்று, இதனுடைய தாக்கம் என்பது மிகப் பெரிய அளவிலே மனித இனத்திற்கே கேடு விளைவிப்பதாக இருக்கிறது.

உலக வரலாற்றில் நாளை யாரை எப்படி உருவாக்க வேண்டும் என்பதையெல்லாம் மாற்றக்கூடிய சாத்தியக்கூறுகளாக இந்த மரபணுக்கள் இருக்கின்றன என்று நிரூபித்திருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற ஒரு நுண்ணுயிரை எடுத்து வேறு ஒரு பயிரிலே, உதாரணத்திற்கு ஒரு உருளைக்கிழங்கு வளர்கிறது என்று சொன்னால், அந்த உருளைக் கிழங்கினுடைய செடியிலேயே இருவிதமான பயிர்களையே காய்க்க வைப்பதற்கு அல்லது தயாரிப்பதற்கு அந்த மரபணு மாற்றத்திலே அறிவியல்பூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கொய்யா மரம் இருக்கிறது என்று சொன்னால், கொய்யாப் பழம்தான் காய்க்கும். இதுதான் இந்தியாவினுடைய மரபு முறை, விவசாய முறை. ஆனால், இந்த மரபணு விதையின்மூலமாக அந்த மருந்தைச் செலுத்தினால் கொய்யா மரத்திலேயே பலாப் பழமும் காய்க்கும் அல்லது வேறுவிதமான திராட்சைகளையும் உருவாக்க முடியும் என்பது அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் மாண்புமிகு அமைச்சர் அவர்களும்,

முதலமைச்சர் அவர்களும்—எந்த நாட்டில் உருவாக்கப்பட்டதோ, அந்த
நாடுகள் இந்த மரபணுவைக் கொண்டு விவசாயம் செய்வதற்கு
வாய்ப்பில்லாத சூழல் இருக்கிறபோது, வளர்ந்து வருகின்ற இந்தியா
போன்ற நாடுகளில் இந்த மரபணுவைக் கொண்டு வந்து புகுத்துகின்ற
அன்னிய சக்திகளுக்குத் துணை போகாத அளவிற்கு, அதை எதிர்க்கின்ற
ஒரு நாடாகவும், அதைத் தடுத்து நிறுத்துகின்ற ஒரு நாடாகவும் நாம்
உருவாக வேண்டும். அதை அறிவியல்பூர்வமாக ஆராய்ச்சி செய்து
அதனுடைய தீர்வை நாட்டு மக்களுக்குத் தமிழக அரசு வெளிப்படுத்த
வேண்டுமென்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எங்கள்
கருத்தைப் பதிவு செய்து அமர்கிறேன். வாய்ப்புக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
வாய்ப்புக்கு நன்றி. இந்த B.T. விதைகள், B.T. பயிர்களால் தற்பொழுது
தமிழகத்தில் மட்டுமல்ல, நமது நாடு முழுவதிலும் உள்ள விவசாயிகள்
பெருத்த அச்சத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அண்மையில்கூட கோவை
மாவட்டத்திலே B.T. நெற்பயிர்கள் அழிக்கப்பட்டன. அதேபோன்று,
ஹரியானா மாநிலத்தில் கர்னால் என்னும் இடத்திலும் B.T. நெற்பயிர்கள்
தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் என்னவென்றால்,
இந்த மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை B.T. விதைகள் என்றும்
இந்தப் பயிர்களை B.T. பயிர்கள் அல்லது G.E. பயிர்கள்--Genetically
Engineered, G.M.-Genetically Modified அல்லது G.M.O.s-Genetically Modified
Organisms என்று அழைக்கின்றார்கள். B.T. என்றால் Bacillus thuringiensis
என்பதாகும். இது ஒரு வகைக் கிருமி. தாவரங்களில் விளைகின்ற
பூச்சிப் புழுக்களின் உணவுப் பாதையில் இந்தக் கிருமிகள் சென்று
நச்சுத்தன்மையை உண்டாக்கவல்லவை. இதைக் கண்டறிந்த
விஞ்ஞானிகள், இந்தக் கிருமிகளை ஆய்வுக் கூடங்களில் உருவாக்கி நெல்,
பருத்தி போன்ற விதைகளில் உள்செலுத்துகின்றனர். இக்கிருமிகளுக்கு
ஒரு குறிப்பிட்ட நோயை ம -டுமே எதிர்க்கின்ற சக்தி இருப்பதால், B.T.
பயிர்கள் பிற நோய்களைத் தாங்கும் சக்தியை இழந்துவிடுகின்றன. ஆனால்,
B.T. விதைகளை விற்கும் கம்பெனிகள் இவ்விதைகளுக்கு நோய்த் தடுப்பு
ஆற்றல் உள்ளதாக விவசாயிகளை ஏமாற்றி வருகின்றனர். மேலும்,
குறைந்த நிலப்பரப்பில் அதிக மகசூல் எடுக்கலாம் என்று;ம் ஒரு
பொய்யான தகவலை இந்த கம்பெனிகள் பரப்பிவிடுகின்றன. பல்வேறு
நாடுகளில் நடத்திய ஆய்வுகளின்மூலம் B.T. பொருட்கள் உயிரினங்கள்மீது
கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்றும், நோய் எதிர்ப்பு
ஆற்றல் இல்லையென்றும் தெரிய வந்துள்ளது. Monsanto போன்ற விதை



கம்பெனிகளுக்கு ஏழை நாடுகளைச் சுரண்டுவதுதான் நோக்கம். ஏழை
நாடுகள் இப்படிச் சுரண்டப்படுவதால் விவசாயிகள் கடுமையான கடன்
சுமைக்கு ஆளாகின்றார்கள். இப்படி ஏமாற்றப்பட்டதால்தான், ஆந்திரா,
மராட்டியம் போன்ற மாநிலங்களில் ஏராளமான விவசாயிகள் கடன்
சுமையால் தற்கொலை செய்துகொண்டனர்.

(முற்பகல் 11-25)

அமெரிக்காவில்கூட, 1980-க்குப் பிறகு B.T. பருத்தி விளைச்சல்
குறைந்துள்ளது. மத்தியப் பிரதேசத்தில் கார்கோன் மாவட்டத்தில் B.T
பருத்தி இரகம் நூறு சதம் தோல்வியடைந்துள்ளது. ஏன,
தமிழகத்திலும்கூட சேலம், நாமக்கல் மாவட்டங்களில் B.T. விதைகள்
முளைக்கவே இல்லை எனத் தெரிய வந்துள்ளது. B.T. விதைகளாலும்,
B.T. பயிர்களாலும், இப்பயிர்களின் மகரந்தத் தூளாலும் மனிதர்களின்
ஆரோக்கியத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் மிகுந்த ஆபத்து உள்ளது எனப்
பல நாடுகள், இந்த B.T. விதைகளைத் தடை செய்துள்ளன. மேலும்,
இந்த B.T. விதைகளில் Terminated Technology, Traitor Technology என்ற
Technology-கள் புகுத்தப்பட்டுள்ளன. Terminated Technology என்றால்,
இந்த விதைகளுக்குள்ளே, இந்த விதைகளின்மூலம் முளைக்கின்ற
பயிர்களிலிருந்து கிடைக்கின்ற விதைகள் மீண்டும் முளைக்கவே செய்யாது.
Traitor Technology என்றால், இந்தப் பயிர்கள் ஒரு குறிப்பிட்ட
பூச்சிக்கொல்லி மருந்தையோ அல்லது இரசாயன உரத்தையோ
பயன்படுத்தினால்தான் விளையும். இதன்மூலமாக, பூச்சிக்கொல்லி
மருந்துகள் விற்கின்ற கம்பெனிகளும், இந்த B.T. விதைகளை விற்கின்ற
கம்பெனிகளும் ஒரு ஏகபோக உரிமையை உண்டாக்கிக்கொள்ள இது
வாய்ப்பை அளிக்கும். எனவே, விவசாயிகளின் நலனை முன்னிட்டும்,
நுகர்வோர் நலனை முன்னிட்டும், ஒட்டுமொத்த மனித குலத்தின் நலனை
முன்னிட்டும் B.T. விதைகளையும், B.T. பயிர்களையும் அரசு தடை செய்ய
வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்
பதிவு செய்ய விரும்புகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, B.T. மரபணு நெல் உற்பத்தி செய்ததைப் பற்றி
நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களும்
மற்ற உறுப்பினர்களும், அதிலே ஒரு பெரிய ஆபத்து இருக்கிறது; அதை
அனுமதிக்கக் கூடாது என்று விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

1999-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இருந்தபோது,
முதன்முதலாக B.T. பருத்தி விதையை இங்கே பயன்படுத்த
வேண்டுமென்று Monsanto நிறுவனம் தமிழக அரசை அணுகியது.
அப்பொழுது, அதனுடைய விவரத்தை முழுமையாகக் கேட்டறிந்து,
நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் நான் விவாதித்து, இந்த
மரபணு முறையினால் மனிதர்களுக்கு அல்லது கால்நடைகளுக்கு
அல்லது பக்கத்திலே இருக்கக்கூடிய பயிர்களுக்கு ஏதாவது side effect
வருமா, பாதிப்பு வருமா என்பதையெல்லாம் பார்க்காமல் நாங்கள் இதை
அனுமதிக்க இயலாது என்று 1999-லேயே சொன்னோம். அதுமட்டுமல்ல,
1999-லே நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், ஒரு
குழுவைப் போட்டார்கள். அந்த Monsanto நிறுவனத்திடமும், Mahyco
நிறுவனத்திடமும் ஒரு நிபந்தனையைக்கூட நாங்கள் போட்டோம்.
வேண்டுமானால் பரிட்சார்த்தமாக, இந்த மரபணு முறையினாலே
எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்று நீங்கள் நிரூபிக்க, ஒரு இடத்தைத்
தேர்வு செய்து, 50 சென்ட்டிலோ, 25 சென்ட்டிலோ அதைப் பயிர்
செய்து, மற்ற பயிர்களையெல்லாம் அதைச் சுற்றிப் பயிர் செய்து,
அதனாலே ஏதாவது பாதிப்பு இருக்கிறதா, இல்லையா என்பதையும்
கண்டறிந்து, உறுதி செய்யப்படுவதற்கு ஒரு குழு அமைக்கிறோம் என்று,
அப்பொழுது தலைமைச் செயலாளருடைய தலைமையிலே,
உறுப்பினர்களாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், அதைப்போல
வேளாண்மைத் துறை அரசுச் செயலாளர், வனம் மற்றும் சுற்றுச் சூழல்
துறை அரசுச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்
துறை அரசுச் செயலாளர், தொழில் துறை அரசுச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலாளர், பொதுப்
பணித் துறை அரசுச் செயலாளர், இப்படிப் பல்வேறு செயலாளர்களைக்
கொண்டு ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் கருத்தை அறிந்த
பிறகுதான் நாங்கள் ஒரு முடிவுக்கு வர முடியும் என்று நாம்
சொல்லிவிட்டோம்.

(முற்பகல் 11-30)

அந்த அடிப்படையிலே, எல்லா மாநிலங்களிலும், இந்த B.T. பருத்தி
போடுவதன்மூலம் காய்ப் புழுவைக் கட்டுப்படுத்துகிறது, விளைச்சல்
கூடுதலாக வருகிறது. ஆகவே, இதைப் பயன்படுத்தலாம் என்று மாநில
அரசாங்கம் முதலிலே உடனே எந்த மாநிலத்திலும் முடிவு செய்யவில்லை.
மத்திய அளவிலே ஒரு குழு இருக்கிறது; மத்திய அரசாங்கத்தினாலே
நியமிக்கப்பட்ட ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவின்மூலம் ஒவ்வொரு
மாநிலத்திற்கும் தகவல் தருகிறார்கள். இப்படி பருத்தியை அவர்கள்
போடுவதன்மூலம் பரிட்சார்த்தமாகப் பரிசோதனை நடத்துவதற்கு



அவர்கள் முன்வருவார்களேயானால் சில விதிமுறைகளையெல்லாம்
வகுத்து, அந்த விதிமுறைகளின்படி அவர்கள் பரிசோதனைக்கு
உட்படுத்துகிறார்களா என்று கண்காணிக்க வேண்டுமென்று, மாநில
அரசாங்கத்திற்கு அந்தக் குழு தகவல் அனுப்பினார்கள்.

அந்த அடிப்படையிலேதான், இந்தியாவிலே நெல் ஆராய்ச்சி இயக்கம்.
ஹைதராபாத் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம். டெல்லி
பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், எம்.எஸ்.
சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், பஞ்சாப் வேளாண்மைப்
பல்கலைக்கழகம், லூதியானா, உஸ்மானியா பல்கலைக்கழகம்.
ஹைதராபாத் இப்படி எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் அந்தத் தகவல்
அனுப்பப்பட்டது. அந்த அடிப்படையிலே பார்த்து, இறுதியாக, மத்திய
அரசாங்கம் B.T. பருத்தி பயன்படுத்துவதிலே தவறில்லை, அது
உற்பத்தியை அதிகமாகத் தருகிறது, மற்ற பயிர்களுக்குப் பாதிப்பு
இல்லையென்று ஒரு பரிந்துரை செய்ததன்பேரில், B.T. பருத்தி—அதிலே
ஒன்று, இங்கு மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்களும்.
மற்றவர்களும் சொன்னதைப்போல, நேரடியாக அவர்கள் தருகின்ற அந்த
விதையை வாங்கி நாம் போட்டால், அந்தப் பருத்தியிலேயிருந்து
எடுக்கக்கூடிய விதையை நாம் போடுகிறபோது அது முளைக்காது. மாபுத்
தன்மை அழிந்துவிடுகிறது. ஆகவே, அந்த கம்பெனிகளிடத்திலேதான்
இந்த Monsanto கம்பெனியோ அல்லது Mahyco கம்பெனியோ,
அவர்களிடத்திலேதான் மீண்டும் போய் நாம் அந்த விதையை வாங்க
வேண்டும். அவர்கள் என்ன விலை நிர்ணயிக்கிறார்களோ, அந்த
விலையைக் கொடுத்து வாங்க வேண்டும். இந்த நிலை அப்பொழுது
இருந்தது.

இப்பொழுது நம்முடைய இந்திய விஞ்ஞானிகள், அந்த B.T. மரபணு
விதையை வாங்கி, பருத்தி விளைவித்து, அதிலேயிருந்து விதைகளை
எடுத்து, மாற்று மரபணு முறையை உருவாக்கி, இப்பொழுது அந்த
கம்பெனியிடத்திலேதான் வாங்க வேண்டுமென்று இல்லை.
அவர்களிடத்திலேதான் அந்த விதை வாங்க வேண்டுமென்று இல்லாமல்.
இப்பொழுது பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள், தனியார்கூட
சேலத்திலேகூட, ஆத்தூரிலே Rasi Seeds என்று இருக்கிறது. அதைப்போல.
ஒவ்வொரு மாநிலத்திலும், நிறைய இடங்களிலே ஹைதராபாத், கர்நாடகா
மாநிலம், மகாராஷ்டிரா மாநிலம். இப்படிப் பல்வேறு மாநிலங்களிலே,
அந்தப் பருத்தியிலேயிருந்து எடுத்த விதையை இப்பொழுது
விநியோகிக்கிறார்கள். அந்த B.T. பருத்தியை இப்பொழுது பெரும்பாலும்
விவசாயிகள் போடுகிறார்கள்.

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2006 டிசம்பர் 7

முற்பகல் 11-35

விளைச்சல், அதாவது பருத்தி உற்பத்தி அதிகமாக, ஒரு ஏக்கருக்கு குவிண்டால் அதிகமாக வருகிறது என்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே அதைப் பயன்படுத்துகிறார்கள். இதிலே B.T. என்பது Bacillus thuringiensis என்ற ஒரு பாக்டீரியாவால் உருவாகும் புரதம் ஆகும். இந்தப் புரதம் பூச்சிகளைக் கொல்லும் வலிமை பெற்றது என விஞ்ஞானிகள் கண்டறிந்து, அதனால் இப்புரதத்தைப் பயன்படுத்தி, பருத்தியில் உருவாகும் காய்ப் புழுக்களைக் கட்டுப்படுத்தி, 10 முதல் 15 முறை மருந்து தெளிப்பதையும் குறைத்து, 2 அல்லது 3 முறை மருந்து தெளிக்கும் நிலை ஏற்பட்டு, செலவு குறையக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது என்று நம்முடைய விஞ்ஞானிகள்தான் பரிந்துரை செய்திருக்கின்றார்கள்.

இதை நான் சொல்வது பருத்திக்கு. இந்தத் தொழில்நுட்பத்தை முதன்முதலில் இங்கு சொன்னதைப்போல, அமெரிக்காவினுடைய Monsanto நிறுவனம் கண்டுபிடித்து, அது இந்தியாவிற்கு வந்து, அதனுடைய patent right-ஐ இப்போது Mahyco கம்பெனிக்கு விற்று, அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து joint ஆக—இந்த நெல் குறித்து இப்பொழுது இந்த இரண்டு நிறுவனங்களும் சேர்ந்துதான் இதை ஆராய்ச்சி செய்கிறார்கள். இந்த நெல்லால் ஏதாவது பாதிப்பு உண்டா என்று ஆராய்ச்சி செய்யக்கூடிய நிலையில், இப்போது பல்வேறு மாநிலங்களில் இந்த ஆராய்ச்சிப் பணியைத் தொடங்கியிருக்கிறார்கள்.

இது மாநில அரசாங்கத்திற்குத் தெரியுமா என்றால், மாநில அரசாங்கத்திற்குத் தெரிவதில்லை. மத்தியிலே இருக்கக்கூடிய அந்த நிறுவனம், மத்திய அரசாங்கத்தினாலே உருவாக்கப்பட்டிருக்கிற அந்த நிறுவனம், நேரடியாக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் தகவல் தருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தகவல் தருகிறார்கள். இவர்கள் இந்த B.T. நெல்லை உற்பத்தி செய்வதற்கு, ஆராய்ச்சி செய்வதற்கு அங்கு இடம் தேர்வு செய்து, அவர்கள் அந்தப் பயிரை விளைவிப்பார்களேயானால், அந்த விதிமுறையைப் பின்பற்றுகிறார்களா என்று நீங்கள் கண்காணிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நேரங்களில் அனுப்புகிறார்கள், சில நேரங்களில் அனுப்பாமலும் விட்டுவிடுகிறார்கள். பல்கலைக்கழகங்களுக்கு இந்தத் தகவல் வருகின்ற காரணத்தினாலே நம்முடைய பல்கலைக் கழகங்களுடைய வேளாண்மைப் பொறியாளர்கள், விஞ்ஞானிகள் சென்று அதைப் பார்த்து வருகின்றார்கள். அப்படிப் பார்த்து வருகின்ற காரணத்தினாலே, இப்போது வழங்கப்பட்டிருக்கின்ற பரிந்துரை, இங்கே கோவை மாவட்டத்திலே ஆலந்துறையிலே விவசாயிகள் போய்ப் பயிரைப்



2006 டிசம்பர் 7] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

பிடுங்கி நெல்லை எல்லாம் மிதித்ததை நாம் போய்ப் பார்த்தோம். ஆனால், இதை அவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிந்து செய்யவில்லை.

அந்த விவசாயியிடத்திலே ஒரு ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கி அவர்கள் அந்தப் பயிரைச் செய்திருக்கிறார்கள். இதையறிந்த விவசாயிகள் சார்பிலே அங்கே போய் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதனுடைய நிலைமையை முழுமையாகப் பார்க்கிறபோது, எப்படி இன்றைக்கு எல்லாப் பகுதிகளிலேயும் B.T. பருத்தி பயன்படுத்தப்பட்டு வருகிறதோ, அதைப்போல எதிர்காலத்தில் மரபணு மாற்றுவிக்கப்பட்ட B.T. நெல் பற்றிய ஆராய்ச்சி கடந்த 10 ஆண்டுகளாக உலக அளவிலே நடைபெற்று வருவதோடு, பிலிப்பைன்ஸ் நாட்டிலும், மணிலாவிலுமுள்ள அகில உலக நெல் ஆராய்ச்சி நிறுவனம்—IRRI, புரதத்தை நெல்லில் உட்புகுத்தி பூச்சி எதிர்ப்புத் திறன் கொண்ட பயிரை உருவாக்கி அதன்மூலம் பெறப்பட்ட பல நெல் இரகங்கள் இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளில் பரிசோதனை செய்யப்பட்டு, சீன நாட்டு உழவர்கள் B.T. நெல் இரகங்கள்மூலம் பூச்சி மருந்து தெளிப்பதைக் குறைத்தும், மகசூல் 28 சதவிகிதம் அதிகரித்திருப்பதாக சீனா நாட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியாவில் B.T. நெல் பற்றிய ஆராய்ச்சி 10 ஆண்டுகளாக, தனியார் மற்றும் அரசு நிறுவனம்மூலம் நடைபெற்று வருகிறது. புதுடெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்—ICAR, CRY-1AC B.T. நெல் ரகத்தை உருவாக்கி, 2001 ஆண்டு முதல் வயல்களில் பரிசோதனை நடத்தி வருகிறார்கள். பரிசோதனை நிலைதான்.

முற்பகல் 11-40

இந்த வகை B.T. நெல் பயிரைத் தாக்கும் தண்டு துளைப்பான் எனப்படும் குருத்துப் புழு மற்றும் இலைச் சுருட்டுப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதாகப் பரிசோதனையிலே வேளாண்மை விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் B.T. நெல் பற்றிய ஆராய்ச்சியை கடந்த 5 ஆண்டுகளாகச் செய்து வருகிறது. நமது மாநிலத்தில் பயிரிடப்படும் ஐ.ஆர். 64 மற்றும் அம்பை 16 நெல் இரகங்களில் B.T. புரதம் (CRY-1AC) உட்புகுத்தி ஆராய்ச்சியினை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதேபோல், மரபணு மாற்றுவிக்கப்பட்ட B.T. கத்தரி வகைப் பயிரிலும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். காய்ப் புழுத் தாக்குதலிலிருந்து இந்த வகைக் கத்தரிக்காய் பாதுகாக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் புரதம் மனிதனுக்கும், விலங்குகளுக்கும் எந்தவிதத் தீங்கும் விளைவிக்காது என்று ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இந்தத் தொழில்நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்துவதால், பூச்சி மருந்து தெளிப்பது குறைவதோடு, சுற்றுச்சூழல் பாதிக்காமலும், உற்பத்திச் செலவு குறைவதோடு, அதிக மகசூலும் பெற முடியும் என்றும் நம்முடைய விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

அதே நேரத்தில், கோவையில் இப்பொழுது இங்கு எடுத்துச் சொல்லப்பட்ட ஆலந்துறை கிராமத்தில், திரு. ரங்கராஜ் அவர்களுடைய வயலில், Mahyco நிறுவனம், B.T. நெல் ஆராய்ச்சியை அமைத்திருந்தார்கள். இதற்கு மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை (Department of Bio-Technology) அனுமதி பெற்று, இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளார்கள். தமிழக அரசின் அனுமதி பெறத் தேவையில்லை. மத்திய அரசாங்கத்தின் Department of Bio-Technology—மத்திய அரசாங்க நிறுவனத்தின் அனுமதி வாங்கினால் போதும், மாநில அரசாங்கத்தினுடைய அனுமதி தேவையில்லை. விவசாயச் சங்க உறுப்பினர்கள் ஆலந்துறை விவசாயி திரு. ரங்கராஜ் அவர்களின் வயலில் உள்ள ஆராய்ச்சி வயலுக்குச் சென்று, நெல் பயிரைப் பிடுங்கி அழித்ததை இங்கே நீங்கள் சுட்டிக்காட்டி இருக்கிறீர்கள்.

இதுதான் நடைபெற்றிருக்கின்றது. ஆகவே, இதிலே தொடர்ந்து ஆராய்ச்சி நிலையிலேயே இருக்கிறதே தவிர, இந்த B.T. நெல்லை எல்லோரும் பயன்படுத்தலாம் என்று தமிழக அரசாங்கமும் ஒன்றும் பரிந்துரை செய்யவில்லை, மத்தியிலே இருக்கக்கூடிய அந்த மத்திய அரசாங்கத்தினுடைய குழுவும் இன்னும் முழுமையாகப் பரிந்துரை செய்யவில்லை. ஆராய்ச்சி நிலையிலே இருக்கின்றது. ஆனால், இந்த ஆராய்ச்சியினுடைய முடிவிலே B.T. பருத்தியைப் பயன்படுத்தலாம்; அந்த விதையிலேயிருந்து மற்ற விதைகளை உற்பத்தி செய்யலாம் என்ற அளவுக்கு இப்பொழுது வந்திருப்பதைப்போல, ஒருவேளை சீனாவிலே இதிலே 28 சதவிகிதம் கூடுதலாக விளைச்சலைத் தருகிறது, வேறு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்று அவர்கள் பயிர் செய்யத் தொடங்கியதைப்போல நாமும் தொடங்கலாம் என்று ஆராய்ச்சியினுடைய முடிவிலே வருமேயானால், அதை விவசாயிகளாகப் பார்த்து, விரும்பி ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், நம்முடைய மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகளுக்குப் பாதிப்பு என்று வரக்கூடிய எதையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஏனென்று சொன்னால், Monsanto நிறுவனம் மற்றும் Mahyco நிறுவனம் ஆகிய இருவரும் 1999–லே வந்தபோது, நாங்கள் அப்பொழுதே இந்த முடிவை எடுத்துவிட்டோம்.

இவை பன்னாட்டு நிறுவனங்கள்; அவர்கள் இந்த விதையை விற்பதற்காக நம்மைப் பயன்படுத்துவார்கள். ஒருவேளை இந்த விதை



மலட்டுத் தன்மையாகிவிடும். பிறகு விவசாயிகள் அவர்களிடத்திலேயே விதையை வாங்க வேண்டும் என்ற நிலையெல்லாம் ஏற்படுமேயானால், விவசாயிகளுக்கு அது பெரிய சுமையாக மாறிவிடும் என்ற காரணத்தினாலே நாங்கள் அப்பொழுதே ஒப்புக்கொள்ளவில்லை. இப்பொழுதுகூட அவர்கள் நிர்ணயித்திருக்கிற விலை 1,650 ரூபாய். 450 கிராம் ஒரு ஏக்கருக்குத் தேவை என்று இருந்தது. பருத்தியைப் பற்றிச் சொல்கிறேன். தென்னிந்தியாவிலே இருக்கக்கூடிய மாநிலங்கள் நான்கும் சேர்ந்து, இந்த விலை அதிகமான விலை, இந்த விலை குறைக்கப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்குப் போட்டு, இப்பொழுது 750 ரூபாய்க்கு 450 கிராம் B.T. பருத்திக்கு விலை கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, B.T. நெல்லைப பொறுத்தவரைக்கும், அது ஆராய்ச்சி நிலையிலே இருக்கின்ற ஒன்று.

முற்பகல் 11-45

எல்லா விவசாயிகளுக்கும் இந்த விதை நெல் கிடைப்பது இல்லை. அல்லது கிடைத்த அந்த நெல்லை நீங்கள் வாங்கி, எல்லோரும் பயிரிடுங்கள் என்று நம்முடைய மாநில அரசாங்கம் பரிந்துரையும் செய்யவில்லை. ஆராய்ச்சியினுடைய இறுதிக் கட்டத்திலேதான், விஞ்ஞானிகளுடைய முடிவுக்குப் பின்னாலேதான் இது அமல்படுத்தப்படும். இப்போது தமிழ்நாட்டினுடைய விவசாயிகள் யாரும் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த அரசாங்கம், விவசாயிகளுக்குப் பாதிப்பாக ஒன்று இருக்குமேயானால், நிச்சயமாக அதை அனுமதிக்க மாட்டோம் என்பதை மட்டும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நான் நன்றியுடையவனாக இருக்கின்றேன். ஆனால், அவர்கள் சொன்ன ஒரு தகவல், மிக அதிர்ச்சிகரமான தகவல் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விளைவுகளே தெரியாத ஒரு பரிசோதனையை நமது தமிழகத்து மண்ணிலே அனுமதிப்பதற்கான உரிமை மாநில அரசிடம்தான் இருக்க வேண்டும். மாநில அரசிடம் அனுமதி பெறாமல், எந்தவிதமான விளைவுகளைப் பற்றியும் யாருமே தெரிந்திராத ஒரு பரிசோதனையை நம்முடைய மண்ணிலே நடத்த முடியும், அதற்கு மத்திய அரசு மட்டுமே அனுமதி கொடுக்க முடியும் என்கிற ஒரு சூழ்நிலை இந்த மாநிலத்திலுள்ள விவசாயிகளினுடைய

உரிமையைப் பாதிப்பதாகவே நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால், நம்முடைய அமைச்சர் அவர்கள், 17-11-2006 அன்று 'இந்து' பத்திரிகையிலே கொடுத்த பேட்டியிலே அவர் சொன்ன பதில், ஏதோ நம்மிடம் அனுமதி வாங்கித்தான் அவர்கள் அந்தப் பரிசோதனையை மேற்கொள்வதாக இருக்கிறது. அதாவது, அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்—'the Company Monsanto, Mahyco approached with a request to test the crops' என்று. நான் என்ன நினைத்தேன் என்று சொன்னால், ஒருவேளை மாநில அரசை அணுகி, நம்முடைய அரசின் அனுமதி பெற்றுத்தான் அத்தகைய பரிசோதனைகள் நடத்தப்படுகின்றனவோ என்று நான் நினைத்திருந்தேன். ஆனால், அமைச்சர் அவர்கள் இப்போது தருகின்ற பதிலைப் பார்த்தால், அந்தப் பரிசோதனை நடத்தப்பட்ட விவரமே விவசாயிகள் நடத்திய போராட்டத்திற்குப் பிறகுதான் அரசின் கவனத்திற்கு வந்திருப்பதாக அறிகிறேன்.

யாரோ, ரங்கராஜ் என்கிற ஒரு நபர், அவரது வயலிலே இப்படிப்பட்ட பரிசோதனை நடந்தது என்று சொன்னால், அதனால் அந்தச் சுற்றுப்புற விவசாயிகள் முழுவதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை வருகிறது; ஏனென்று சொன்னால், அந்த விதை முளைத்து பூக்கள் வருகின்றபோது, அந்தப் பூக்களிலிருந்து வருகின்ற அந்த மகரந்தச் சேர்க்கை, நம்முடைய பூர்வீகமான விதைகளை மலட்டு விதைகளாக்குகின்றன என்பதுதான் விவசாயிகளுடைய அச்சம். அதையேதான் உத்தராஞ்சல் மாநிலத்திலே இந்தப் பிரச்சினையை வைத்து, உத்தராஞ்சல் மாநில முதலமைச்சர் அவர்கள், அந்த B.T. கத்தரி என்கிற விதை, எந்தவிதமான B.T. seeds-ம் அந்த மாநிலத்திற்குள்ளேயே வராது என்கிற உறுதியைத் தந்திருக்கிறார்கள். ஆனால், நான் இன்று என்ன கேட்க ஆசைப்படுகிறேன் என்று சொன்னால், இத்தகைய பரிசோதனைகள், கோவைப் பல்கலைக்கழகத்திற்குள்ளே, நல்ல பாதுகாக்கப்பட்ட வயல்வெளிகளில் எந்தவிதமான ஆபத்தும் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை உறுதி செய்த பிறகு, அங்கே அந்தப் பரிசோதனை நடந்தால் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஆனால், எந்தவிதமான தயாரிப்பும் இல்லாமல், எந்தவிதமான விஞ்ஞானபூர்வமான பாதுகாப்பும் இல்லாமல், தமிழகத்திலே யார் நினைத்தாலும், எந்த விஷ வித்துக்களையும் பரிசோதனை செய்யலாம் என்கிற ஒரு நிலை இருப்பது ஒரு மிகப் பெரிய ஆபத்து; அந்த ஆபத்திற்குத் தமிழகத்தைத் திறந்துவிடக் கூடாது, அதற்காக ஒரு சட்டம் இயற்ற வேண்டிய சூழ்நிலை வந்தால்கூட—நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்—ஏனென்று சொன்னால், வரக்கூடிய காலத்திலே இத்தகைய அபாயங்கள் அதிகமாக இருக்கின்றன. Clinical trials in India, both agricultural and for humans and even for animals, அது ஒரு பெரிய dangerous proportion என்று பக்கம் பக்கமாகக் கட்டுரைகளும், செய்திகளும்



வருகின்றன. வளர்ந்து வருகின்ற நாடுகள், வளர்ந்து விட்ட நாடுகள், நம்மை ஒரு பரிசோதனைக் கூடமாக—our people have been used as guinea pigs—பரிசோதனைக்காக உட்படுகின்ற அந்த வெள்ளை எலிகளாக நம் மனிதர்களை நடத்துகிறார்கள். விஷப் பயிர்களைப் பரிசோதிப்பதற்கான கூடங்களாக நம் மண்ணைப் பயன்படுத்துகிறார்கள். அதை நாம் அனுமதிக்கவே முடியாது. எனவே, நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், இந்தப் பரிசோதனையைப் பற்றி நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை, ஆனால், எத்தகைய பரிசோதனையாக இருந்தாலும், மாநில அரசினுடைய அனுமதி பெற்றுத்தான் இந்த விதை நெல் போன்ற பரிசோதனைகளை நடத்த முடியும் என்பதைச் சட்டமாக இயற்றுவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதைப்போல, இது மாநில சுயாட்சியினுடைய, எங்கள் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி, அவர்களுடைய வேண்டுகோள். ஏனென்று சொன்னால், நம் இந்திய நாட்டிலே நாம் ஒன்றுபட்டு இருப்பவர்கள். ஆக, மத்திய அரசாங்கத்தில் இப்போது அப்படி ஒரு சட்டத்தை வைத்திருக்கிறார்கள். அதற்காக மத்திய அரசினுடைய உயிரியல் தொழில்நுட்பத் துறை—அந்த Department-னுடைய அனுமதியை வாங்கினால் போதும் என்று அவர்கள்தான் அனுமதி கொடுக்கிறார்கள், அதைப் பண்ணுகிறார்கள். ஆக, நம்முடைய மாநில அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்றால்தான் செய்ய முடியும் என்று ஒரு சட்டம் இயற்ற வேண்டுமானாலும் இயற்றலாம் என்று இங்கே சொன்னார்கள். அவர் இங்கே பேசியதே மத்திய அரசாங்கத்திற்குத் தெரியும். பத்திரிகைகளிலும் நாளைக்கு எழுதுவார்கள். அந்த அடிப்படையிலே இந்த மாநில அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்றுத்தான் அவர்கள் இதுபோன்ற பரிசோதனைகளை நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டுமென்ற ஒரு நிலை வந்தால் நல்லது. அதைப் பற்றி மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மணி, இந்த matter-தானே? சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு உத்தரவாதம் அளிக்கின்ற செய்தியைச்

சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனாலும்கூட, ஒட்டுமொத்தமாக, தமிழ்நாட்டில் இருக்கின்ற பல்வேறு விவசாயச் சங்கங்கள், தமிழகச் சட்டமன்றத்தில இடம்பெற்றிருக்கின்ற அரசியல் கட்சிகள், இன்னும் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் மத்தியில் இந்த மரபணு மாற்று விதை என்பதைத் தமிழகத்தில் அனுமதிக்கக் கூடாது, இது மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கும் என்ற கருத்து பரவலாக மேலோங்கி இருக்கிறது. சட்டீஸ்கர் மாநிலத்தினுடைய அமைச்சர் அங்கிருக்கின்ற ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்களை யெல்லாம் தீயிட்டுக் கொளுத்தி அழித்திருக்கிறார். உத்தராஞ்சல் மாநிலத்தினுடைய முதலமைச்சர் உறுதி அளித்திருக்கிறார். இப்படிப் பல்வேறு மாநிலங்களில், இந்திய நாடு முழுவதும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசு இதை வலியுறுத்தினாலும்கூட, மத்திய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆய்வு செய்து அனுமதித்தாலும்கூட, தமிழ்நாட்டின் விவசாயிகள் அனுமதியில்லாமல், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமுகமான, ஏகமனதான கருத்தொற்றுமை வராமல், தமிழ்நாட்டில் அனுமதிக்கக் கூடாது என்ற நிலைக்கு நம்முடைய அரசு வர வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறோம். காரணம், நம்முடைய பாரம்பரிய விவசாய முறை மாறிக்கொண்டிருக்கிறது. பசுமைப் புரட்சியின் வாயிலாக நாம் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருந்தாலும்கூட, உணவுப் பொருளின் வாயிலாக வியாதிகள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன என்ற நிலைமை ஆராய்ச்சியின் வாயிலாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு, பாரம்பரிய வேளாண்மை சிதைந்துவிடக் கூடாது. நோய் உருவாவதற்கு, தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்படுவதற்கு, இந்த வேளாண்மை விதைகள் காரணமாக அமைந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் விவசாயிகள் நலனைப் பாதுகாக்க வேண்டும், இந்தத் தமிழகத்தில் அனுமதிக்க தமிழக அரசு முன்வரக் கூடாது என்ற வேண்டுகோளையும் நான் இந்த நேரத்திலே முன்வைத்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த B.T. நெல் வகையில் இப்போது நான் சில விவரங்களைச் சொன்னேன். விஞ்ஞானத்தில் எத்தனையோ புதுமைகள். நாம்கூட இப்போது ஆடுதுறை 27 போன்ற நெல்லைப் புதிதாகக் கண்டுபிடித்ததால்தான் உற்பத்தியை அதிகமாக்கினோம். அதைப்போலத்தான் B.T. பருத்திக்கு எதிர்ப்பு இருந்தது. அந்த B.T. பருத்தி விதையை அவர்களிடம்தான் வாங்க வேண்டுமென்பது போய், இப்போது நம் ஆட்கள் வேறு விதையைத் தயார் பண்ணிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம், விளைச்சல் தருகிறது. அதைப்போல



விஞ்ஞானிகள்தான் அதை முடிவு பண்ண வேண்டும். அவர்கள்தான் பண்ணுகிறார்கள். நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய விஞ்ஞானிகளோ அல்லது இந்திய நாட்டில் இருக்கக்கூடிய விஞ்ஞானிகளோ, இந்திய விவசாயிகளுக்குப் பாதகமாக அல்லது இந்திய மக்களுக்குப் பாதகமாக அப்படி ஒரு பரிந்துரையை அனுப்பமாட்டார்கள் என்றுதான் நம்புகிறோம். அதைப்போலத்தான், இப்போது B.T. நெல் வகையில் உள்ள B.T. புரதம், நெற்பயிரைத் தாக்கும் தண்டுப் புழு நெல்லில் வருகிறது. நெல்லிலே இலை சுருட்டுப் புழு என்று வரும். அது வந்துவிட்டால், நெல் சாவியாகப் போய்விடும். அதனாலே இதைக் கட்டுப்படுத்துகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். இது ஒரு கருத்து. B.T. மரபணு மாற்று விதை விற்கப்பட்ட நெல் செடிகளை உண்ணும் புழுக்களின் குடல் பகுதிகளை B.T. புரதம் அழிப்பதால் புழுக்கள் இறந்து போகின்றன என்ற ஒரு கருத்தை அதிலே சொல்கிறார்கள். விஞ்ஞானிகள் சொல்வதுதான். நாங்கள் ஏற்றுக்கொண்டு சொல்வதாகக் கருதக் கூடாது. இப்புரதம் மனிதர்களுக்கோ, கால்நடைகளுக்கோ எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று சொல்வதும் நம்முடைய விஞ்ஞானிகள்தான்.

*முற்பகல் 11–55*

இந்த B.T. ரக நெல்லை ஈரான் நாட்டில்தான் அதிகமாகப் பயிர் செய்கிறார்கள். ஈரான் நாட்டில் அதிகமாக சாகுபடி செய்வதால், அவர்களுக்கு உணவுப் பிரச்சினையிலே ஓரளவுக்குத் தன்னிறைவு பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக அங்கே சொல்லுகிறார்கள். சீனாவில் பரிசோதனைக் கூடங்களில் பரிசோதிக்கப்பட்டு, விரைவிலே அது சாகுபடிக்கும் அனுமதிக்கப்படவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏனென்றால்—அமெரிக்காவுக்கும், அவர்களுக்கும் இருக்கிற உறவுகளைப் பற்றி உங்களுக்குத் தெரியும்—பன்னாட்டு நிறுவனம் ஆதிக்கம் செலுத்த வந்துவிடுவார்கள், அதை ஒத்துக்கொள்ளக் கூடாது என்று சீனா சொல்கிறது. ஆனால், சீனாவிலே, அதை அமல்படுத்துவதற்கு முன்வந்திருக்கிறார்கள். அதைப்போல, இப்போது இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் பார்க்கும்போது, நமக்கும் ஒரு பயம் இருக்கிறது. அந்தப் பயத்தைப் போக்க வேண்டியது விஞ்ஞானிகள்தான். அவர்கள் போக்குவார்களேயானால், நிச்சயமாக நாம் தடுத்தாலும்கூட விவசாயிகளே ஏற்றுக்கொண்டுவிட்டால், நாம் ஒன்றும் அதில் செய்ய முடியாது, பாதிப்பு இல்லாமல் இருந்தால். ஆனால், இப்போது இருக்கக்கூடிய இந்த முறை ஆராய்ச்சி நிலையிலேயே இருக்கிறதே தவிர, எங்கும் விவசாயிகள் விதை நெல்லை மரபணு நெல் விதையை வாங்கிப் பயிர் செய்யவில்லை. ஆகவே, இதைப் பற்றி யாரும் அச்சப்படத் தேவையில்லை என்பதை மட்டும் அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2006 டிசம்பர் 7

## 3. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடத்திய முதலமைச்சருக்குப் பாராட்டுத் தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளாக, தேர்தல் நடத்தி முறையாக நிர்வாகம் செய்ய முடியாமல் இருந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய 4 ஊராட்சிகளையும் தொடர்ந்து தனித் தொகுதிகளாக நீட்டித்து உத்தரவிட்டு, அங்கு வெற்றிகரமாகத் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை மீட்டெடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை நெஞ்சார, மனமார, ஒருமனதாகப் பாராட்டுகிறோம்.

இந்த மாமன்றத்திலே அறிவித்தபடி, ஊராட்சித் தலைவர்களையும், துணைத் தலைவர்களையும், அந்த ஊராட்சிகளைச் சேர்ந்த தமிழ் மக்களையும் அழைத்து, சென்னையிலே சமத்துவப் பெருவிழா நடத்திய மாண்புமிகு முதல்வரின் சாதனையை, நின்று நிலைத்திருக்கும் நம்முடைய தமிழக மக்களெல்லாம் வரவேற்றிருக்கின்ற இப்படிப்பட்ட நிகழ்வைப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். சாதியை ஒழித்து, சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரின் முனைப்பை நெஞ்சாரப் பாராட்டுவதோடு, சாதியை ஒழிப்பது என்பது ஒரு சாதாரணக் காரியமல்ல; செங்குத்தான பாறை ஒன்றில் தலைகீழாக ஏறுவதைப்போல் கடினமானது என்று பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த மலையைக் கண்டு மலைத்துவிடாமல் நம்முடைய முத்தமிழறிஞர் அவர்கள், துணிந்து ஏறி அந்த உச்சியிலே சமத்துவக் கொடியை ஏற்றியிருக்கிறார்கள். மன்னர்களுக்கெல்லாம் மன்னராக இருந்த கரிகால் பெருவளத்தான்போல், தலைவர்களுக்கெல்லாம் பெருந்தலைவராக இருக்கின்ற நம்முடைய முத்தமிழறிஞர் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு சமூக நீதியைப் பாதுகாத்திருக்கிறார்கள். நாங்கள் இதை எப்படிப் பார்க்கிறோம் என்றால், புரட்சியாளர் அம்பேத்கர் எப்படி கௌதம புத்தரின் வழித்தோன்றலாகத் தொடர்ச்சியாக இருக்கிறாரோ, அப்படி பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் தொடர்ச்சியாக நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி சரித்திரச் சாதனை செய்த பெரியாரைப் போற்றித்தான், தந்தை பெரியார் அவர்களுக்கு, அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் பெரியார் என்ற பட்டத்தை வழங்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க அதே



நாளில், விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக எங்கள் இயக்கப் பொதுச் செயலாளர், என் அருமை அண்ணன் தொல். திருமாவளவன் அவர்கள், சமத்துவப் பெரியார் என்று பட்டம் வழங்கினார்கள். காஷ்மீரிலே தேர்தல் நடக்கிறது. எங்கெங்கெல்லாம் தீவிரவாதம் தலைவிரித்தாடுகிறதோ, அங்கெல்லாம் தேர்தல்களைக் கடந்த 10 ஆண்டுகளாக நம்முடைய அரசுகள் நடத்தின. ஆனால், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல், நாட்டார்மங்கலம் ஆகிய இடங்களில், அந்தத் தேர்தல் ஏன் நடைபெறவில்லை, எதற்காக நடத்தவில்லை என்று தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

நண்பகல் 12-00

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இட்ட ஆணையை ஏற்று இன்று நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இளைய கலைஞர், சமத்துவ நாயகர் அண்ணன் தளபதி (மேசையைத் தட்டும ஒலி) அவர்கள் அந்த மாவட்டங்களிலே சுற்றுப்பயணம் செய்து அங்கு என்னதான் பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது, எதற்காகத் தேர்தல் நடத்த முடியவில்லை என்று, அவர் மருத்துவராக அங்கே கண்டுபிடித்து, தேர்தலை வெற்றிகரமாக நடத்திக் காட்டி இருக்கிறார்கள்.

நேற்றையதினம்கூட சமூக நீதி எழுச்சி மாநாடு நடத்தப்பட்டது. அந்த மாநாட்டிற்கு யாரை அழைப்பது என்று எங்கள் மையக் குழுவிலே நாங்கள் முடிவு செய்யும்போது, சமூக நீதிக்குப் பாதுகாவலராக இருக்கிற, சமூக நீதியை நிலைநாட்டிய நம்முடைய இளைய கலைஞர் தளபதி அவர்களை அழைக்க வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே நேற்று அவருக்கு சமத்துவ நாயகர் என்ற பட்டத்தை நாங்கள் அளித்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பாசறையில் உருவாகி வந்த பெரியாரின் தொடர்ச்சி நம்முடைய முதல்வர் அவர்கள், அதே உணர்வோடு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆலய அறங்காவலர்களாகப் பெண்களை நியமிக்க ஆணையிட்டுப் பெருமை சேர்த்தவர். அவரது சாதனை சரித்திர மைல் கல்லாக இப்பொழுது சமத்துவப் பெருவிழா கண்டிருக்கிறது.

சமத்துவபுரம் படைத்தும், சமத்துவப் பெருவிழா நடத்தியும் தமிழகத்தில் சமத்துவ உணர்வு தழைக்கப் பாடுபடும் நம்முடைய முதல்வர் நெஞ்சில் நிறைந்துள்ள சமத்துவ ஜனநாயக உணர்வைப் பாராட்டி, இங்கே

இந்தப் பேரவை உறுப்பினரான நான் மனதார சமத்துவப் பெரியார் அவர்களைப் பாராட்டுகிறேன், போற்றுகிறேன். இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நம்முடைய கட்சித் தலைவர்கள் எல்லாம் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். நம்முடைய அண்ணன் கண்ணப்பன் உட்பட அனைவரும் சமூக நீதிமேல் பற்று உள்ளவர்கள், சமூக நீதிமேல் நம்பிக்கை உள்ளவர்கள். இந்தியாவிலே எங்கு சமூக நீதிக்குப் பங்கம் ஏற்பட்டாலும், ஜனநாயகக் குரல்வளை நெரிக்கப்பட்டாலும் குரல் கொடுக்கின்ற ஒரே தலைவர் நம்முடைய முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர்களை நெஞ்சாரப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். தமிழகத்தைச் சார்ந்த சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் எல்லாம் பாராட்டுவார்கள் என்று நம்பி அமருகிறேன். வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) அந்த சப்ஜெக்ட் முடிந்துவிட்டது. நீங்கள் வேறு சப்ஜெக்டில் பேசப் போகிறீர்களா? (குறுக்கீடு) சரி, சரி, கொஞ்சம் உட்காருங்கள்.

"கடந்த 10 ஆண்டுகளாக ஜனநாயக முறையில் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க இயலாதிருந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய பஞ்சாயத்துகளுக்கு சமத்துவப் பெரியார், முத்தமிழறிஞர், தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமது சாதுர்யத்தால் அனைத்துத் தரப்பு மக்களின் ஒத்துழைப்போடு தேர்தலை நடத்தி, தலைவர்களையும் தேர்வு செய்து, தாழ்த்தப்பட்டோர் உரிமைகளை நிலைநாட்டி ஜனநாயகம் தழைத்தோங்கச் செய்தார்கள். இவை பொன் எழுத்துக்களால் சட்டப் பேரவை வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டும்" (மேசையைத் தட்டும் ஒலி)

என்னும் மாண்புமிகு திரு. கு. செல்வம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)



## 4. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கைத் தமிழர்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க மத்திய அரசைக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பக்கத்திலே இருக்கிற இலங்கை நாட்டிலே தமிழர்கள் கொடூரத்தனமாக, மிருகத்தனமாகத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, கொன்று குவிக்கப்பட்டு வருவது நாளுக்கு நாள் மிக அதிகமாகி நமக்கெல்லாம் வேதனையையும், மிகப் பெரிய சோதனையையும், அதிர்ச்சியையும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. நம்முடைய இந்தியத் திருநாட்டிற்கு இலங்கை அதிபர் திரு. ராஜபக்சே சமீபத்திலே வந்து சென்றார். வந்து சென்ற நேரத்தில், ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டிலே இருக்கிற அரசியல் கட்சிகள், பல்வேறு அமைப்புகள் எல்லாம் எதிர்ப்புத் தெரிவித்துக் குரல் கொடுத்தன.

பிற்பகல் 12-05

இந்த ஒட்டுமொத்தமான தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கிற வகையில் நம்முடைய உலகத் தமிழினத் தலைவர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கிற கலைஞர் அவர்கள் தொடர்ந்து மத்திய அரசுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும், அங்கேயிருக்கிற தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவதை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம்.

முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகிற முயற்சி, மேலும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதாகவும், அங்கேயிருக்கிற தமிழர்கள் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும், நாங்களகூட மிகுந்த எதிர்பார்ப்போடு நம்பிக்கொண்டிருக்கிறார்கள். நாங்களகூட சமீபத்திலே சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு தமிழ் பன்னிசைப் பெருவிழா நடத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அங்கே சென்றிருந்தோம். 30-க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சியிலே அங்கேயுள்ள இந்தியர் பேரவை, தமிழர் பேரவை, தமிழ் சான்றோர் பேரவை, தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகளெல்லாம் எங்களிடத்திலே சொன்னார்கள். "உலகெங்கும் வாழக்கூடிய

[திரு. ஜி.கே. மணி] [2006 டிசம்பர் 7

தமிழர்களெல்லாம் உலகத் தமிழினத்தினுடைய தலைவராக இருக்கிற, தாய்த் தமிழ்நாட்டின் முதலமைச்சரின் உதவியை நாங்கள் எதிர்நோக்கி நிற்கிறோம், இக்கட்டான இந்த நெருக்கடியான சூழ்நிலையில் தாய்த் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கிற, தமிழினத் தலைவராக இருக்கிற, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மனது வைத்தாலொழிய வேறு யாராலும் செய்து முடிக்க முடியாது, தமிழர்களுக்குப் பாதுகாப்பு வராது என்று நாங்களெல்லாம் நம்புகிறோம், தலைவரிடத்திலே சொல்லுங்கள்" என்ற செய்தியை எங்களிடத்திலே சொல்லி அனுப்பினார்கள். ஆகவே, இங்கே குறிப்பிட விரும்புவது, இந்திய நாட்டில் நடைபெற்ற ஆசிய மேயர்கள் மாநாட்டிற்கு ராஜபக்சே வந்த நேரத்தில் நம்முடைய தாய்த் தமிழ்நாட்டினுடைய ஆறு மாநகராட்சி மேயர்கள் பங்கேற்காமல் புறக்கணித்தது தமிழர்களுக்கெல்லாம் பெருத்த மகிழ்ச்சியை அளித்தது. அது வரவேற்கக்கூடியதுதான். ஆனாலும்கூட, இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு வேண்டுகோள் வைத்ததன் எதிரொலியாக, மத்திய அரசினுடைய உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை ஆலோசகர் நாராயணன் அவர்கள் இங்கே வந்து பேசிச் சென்றார்கள். அவரைத் தொடர்ந்து வெளியுறவுத் துறைச் செயலாளர் திரு. சிவசங்கர மேனனும் இங்கே வந்து பேசிச் சென்றார்கள்.

இவர்கள் வந்து பேசிச் சென்ற பிறகு, ராஜபக்சே வந்து செல்லுகின்ற நேரத்திலே 'இந்து' நாளிதழுக்கு ஒரு சிறப்புப் பேட்டியைக் கொடுக்கிறார். அந்தச் சிறப்புப் பேட்டியிலே அவர் சொல்லியிருப்பது "எங்கள் நாட்டுப் போர் விமானங்களின் விமானிகளுக்கு, பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கு, பாதுகாப்புப் படை வீரர்களுக்கு இந்தியா பயிற்சி கொடுத்துப் பேராதரவு அளித்து வருகிறது, இது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது, இந்தப் பயிற்சி மேலும் தொடரும்" என்ற செய்தியை நம்முடைய நாட்டில் 'இந்து' பத்திரிகைக்கு சிறப்புப் பேட்டியிலே கொடுத்துச் சென்றிருக்கிறார். இது இனவெறி பிடித்த சிங்கள அரசுக்கு, ராஜபக்சேவுக்கு மகிழ்ச்சி அளிக்கலாம். ஆனால், நமக்கு இது மிகப் பெரிய வேதனை அளிக்கிறது, கவலை அளிக்கிறது. இந்திய அரசு கொடுக்கக்கூடிய பயிற்சி அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழர்களுக்கு எவ்வளவு பாதிப்பு அளிக்கிறது? இந்திய அரசு கொடுக்கிற பயிற்சியைப் பெற்ற இலங்கை இராணுவ வீரர்கள், போர்ப் படைத் தளபதிகள், விமான ஓட்டிகள் எல்லாம் இந்தப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டு இந்தியாவிலிருந்து சென்றவுடனே தமிழர்களைக் கொன்று குவிக்கிறார்கள். ஆகவே, தமிழர்களைக் கொன்று குவிப்பதற்காக இந்தியாவிலே பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமா? இங்கே சமீபத்திலே



2006 டிசம்பர் 7] [திரு. ஜி.கே. மணி]

கோவையிலே பயிற்சி கொடுப்பதாக ஒரு செய்தி வந்து, இந்தச் சட்டமன்றத்திலே கிளப்பினோம். முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியினால் அந்தப் பயிற்சி தடை செய்யப்பட்டு, பயிற்சி அளித்தவர்கள் திரும்பப் பெற்றார்கள். அதை நாம் பாராட்டினோம். தமிழ்நாட்டிலே அது நடந்தது. ஆனால், பெங்களூரிலே, பஞ்சாபிலே, ஹரியானாவிலே தொடர்ந்து இப்போது பயிற்சி கொடுத்துக்கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்தவண்ணமாக இருந்துகொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-10

இப்படி நாம் முயற்சி எடுத்துக்கொண்டிருந்தாலும்கூட இலங்கை அரசுக்குப் பாகிஸ்தான் உதவிக்கொண்டிருக்கிறது. இராணுவத் தளவாடங்களை, கருவிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படி பாகிஸ்தான் கொடுப்பது தமிழர்களின் உயிர்ச் சேதத்திற்கு காரணமாக இருக்கிறது. இப்படி அண்டை நாடுகள் உதவி வரக்கூடிய இந்தச் சூழ்நிலையில், சமீபத்திலே ஐக்கிய நாடுகளின் சுனாமி பேரிடர் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடுவதற்காக, தூதுவராக அமெரிக்க நாட்டினுடைய முன்னாள் அதிபர் பில் கிளின்டன் அவர்கள் இங்கே வந்து சென்றார்கள். வந்த நேரத்தில், கடலூரிலே அந்தப் பணிகளையெல்லாம் பார்வையிட்டுவிட்டு, பத்திரிகையாளரிடத்திலே சொல்லிச் சென்று இருக்கிறார். இலங்கை இனப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும். அதைப்போல, போசினியா நாட்டில், வட அயர்லாந்து நாட்டில் ஏற்பட்ட இனச் சிக்கலுக்கு, அண்டை நாடுகளின் உதவியோடு அங்கே நல்ல தீர்வு காணப்பட்டிருக்கிறது. அதைப்போல, இலங்கையிலே ஏற்பட்டிருக்கிற இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று அமெரிக்க நாட்டினுடைய முன்னாள் அதிபர் பில் கிளின்டன் அவர்கள், இங்கே நம்முடைய தாய் மண்ணிலே, தமிழ் மண்ணிலே இந்தச் செய்தியைச் சொல்லிச் சென்று இருக்கிறார்கள். ஆகவே, இப்படியெல்லாம் இருக்கின்ற சூழ்நிலையில், இந்திய நாடு என்பது இந்தப் பிரச்சினையிலே அக்கறைகொள்ளவில்லை என்ற செய்தி நமக்கு வருத்தமாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரிய முயற்சியைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். எவ்வளவுதான் முயற்சியை எடுத்துக்கொண்டு இருந்தாலும்கூட, இந்திய அரசு இதற்குப் போராதரவாக இருக்கிறதா என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

[திரு. ஜி.கே. மணி] [2006 டிசம்பர் 7

ராஜபக்சே இந்தியாவுக்கு வந்து சென்ற பிறகுதான், அங்கே
கொடூரமான முறையிலே தாக்குதல் நடத்தப்படுகிறது. நார்வே தூதுக்
குழுவினர் சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் சென்று வந்து
கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது இந்தியா வந்து சென்றவுடன்,
நார்வே தூதுக் குழுவை அனுமதிக்கமாட்டோம் என்று ராஜபக்சேவே
தடை செய்ததாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, அவர் இங்கே
வந்தவுடன் பாதிப்பு என்பது அதிகமாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே,
இந்தச் சூழ்நிலையில் தாய்த் தமிழ்நாட்டிலே இருக்கிற இந்த
மாமன்றத்தில் இதைப் பற்றிப் பேசாமல், பிற மாநிலத்திலே, வேறு
நாட்டிலே பேச முடியாது. உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள்
கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள், தாய்த் தமிழ்நாடு என்ன செய்யப்
போகிறது என்று. ஆகவே, நான்கூட இப்போது பணிவோடு
கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே,
உங்களுடைய காலத்தில், உங்களுடைய முயற்சியால் இதில் நல்ல தீர்வு
ஏற்படவில்லை என்று சொன்னால், எந்தக் காலத்திலும் இலங்கை
இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியாது. இதை உலக
நாடுகளிலுள்ள தமிழர்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

உங்களுடைய தலைமையில், உங்களுடைய முயற்சியால் நல்ல தீர்வு
காணப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக, இந்திய அரசு காலக் கெடுவை
நிர்ணயிக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக உங்கள் காலத்தில், இந்திய
அரசுக்கு வலியுறுத்தக்கூடிய வகையில் ஒரு காலக்கெடு, 3 மாதம் அல்லது
6 மாதம், இந்தக் காலக்கெடுவிற்குள், இந்திய அரசு இந்தப் பிரச்சினையிலே
தலையிட்டு, ஒரு நல்ல தீர்வினை உருவாக்க வேண்டும் என்று தாங்கள்
முயற்சித்தாலொழிய இந்தப் பிரச்சினை தீர்வுக்கு வராது. ஆகவே, இந்த
மாமன்றத்தின் வாயிலாக ஒரு தீர்மானத்தைக்கூட நிறைவேற்றி
அனுப்பலாம் என்ற வேண்டுகோளையும் நான் முன் வைக்க
விரும்புகிறேன்.

ஒட்டுமொத்தமாக, இலங்கைத் தமிழர் பிரச்சினை, முத்தமிழறிஞர்,
உலகத் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், இந்தப்
பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே,
நல்ல வழியைக் காட்டுங்கள். நல்ல தீர்வினை உண்டாக்குங்கள், இது
உங்களால்தான் முடியும் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக்
கொண்டு வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மீண்டும் மீண்டும்
பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
திரு. சுதர்சனம்.



2006 டிசம்பர் 7]

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
அருமைச் சகோதரர் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மணி
அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது சில
கருத்துகளை இங்கே வெளியிட்டு இருக்கின்றார்கள். இலங்கைத் தமிழர்கள்
பிரச்சினை பற்றி, மத்திய அரசு அக்கறை காட்டவில்லையோ என்ற
அச்சத்தை அவர் எழுப்பி இருக்கின்றார். இலங்கைத் தமிழர் பிரச்சினை
என்பது நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்ற பிரச்சினை.
இலங்கையிலே இருக்கின்ற தமிழர்கள், நம்முடைய சகோதரர்கள்
என்பதிலே யாருக்கும், எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது.
அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதிலும், அவர்களுக்கு
நிரந்தரமாகத் தீர்வு காண வேண்டும் என்பதிலும், இதிலே மத்திய
அரசுக்கு தீர்வு காண வேண்டும் என்ற எண்ணம்தான் இருக்கிறதே
தவிர, வேறு எண்ணம் இல்லை. அங்கே இருக்கின்ற அப்பாவித் தமிழர்கள்
படுகொலை செய்யப்படுவதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பிற்பகல் 12.15

இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே தலையிட்டுத்தான் அமரர் ராஜீவ்
காந்தி அவர்கள் இங்கே படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை
நாம் மறந்துவிட முடியாது. நம்முடைய முதலமைச்சர் அவர்களும்
இங்கே பேசுகின்றபோது இலங்கைப் பிரச்சினையை ராஜீவ் காந்திக்கு
முன்பு, ராஜீவ் காந்திக்குப் பின்பு என்று இரண்டு நிலையாகக் குறிப்பிட்டு,
பல்வேறு இடங்களிலே நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்
மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையில்
மத்திய அரசானது இன்றைக்கு இலங்கையிலே இருக்கின்ற தமிழ்
மக்களுக்கு உதவ வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்
அங்கே உணவுப் பொருட்களையும், பால் பவுடர்களையும், மற்ற
பொருட்களையும் அனுப்பிக்கொண்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற
தமிழர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் மத்திய
அரசுக்கு இருக்கின்ற காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட உணவுப்
பொருட்களை எல்லாம் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். உலக
நாடுகளிலேயிருந்து பல்வேறு பிரச்சினைகள் மத்திய அரசுக்கு
இருக்கின்றன. நாம் அவர்களுக்குப் பயிற்சிகள் கொடுக்கிறோமா,
இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், நம்முடைய மணி அவர்கள்
குறிப்பிட்டதுபோன்று, நாம் உதவாவிட்டாலும்கூட, பக்கத்திலே
இருக்கின்ற நம்முடைய அண்டை நாடான பாகிஸ்தான், அவர்களுக்கு
உதவுவதற்கு மிகத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல,
உலக வரலாற்றிலே இன்றைக்கு இந்தியாவினுடைய வளர்ச்சியைப்
பொறுக்க முடியாமல் இந்தியாவிலே எப்படியாவது பிரச்சினைகளை

உருவாக்க வேண்டுமென்றும், இந்தியாவுக்குள்ளே பிரச்சினைகளை உருவாக்க வேண்டுமென்றும், வெளிநாட்டு சக்திகள் இந்தியாவை சந்தேகத்தோடு பார்த்துக்கொண்டு இருக்கின்றன. இந்த நிலையில் நாம் எப்படி இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு அணுகுவது, இலங்கையிலே இருக்கின்ற தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பை எப்படித் தேடிக் கொடுப்பது, அவர்களுக்கு எந்தெந்த வழிகளில் எல்லாம் உதவுவது என்பதைப் பற்றி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள், அவர்களிடத்திலே இந்தப் பொறுப்பை நாம் விட்டுவிட்டு, இங்கே இருக்கின்ற சில நண்பர்கள் இலங்கையிலே இருக்கின்ற தமிழ் மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பது என்ற பெயரிலே இங்கே இருக்கின்ற பல்வேறுபட்ட நண்பர்கள் பல்வேறு விதமான அறிக்கைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், அங்கேயிருக்கின்ற தமிழ் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று நாம் விரும்பினால் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலும், மத்திய அரசிலே இருக்கின்ற பிரதமர் மன்மோகன் சிங் அவர்களிடத்திலும், அன்னை சோனியா காந்தி அவர்களிடத்திலும் அந்தப் பொறுப்பை விட்டுவிட்டு நாம் நிம்மதியாக இருப்போமேயானால், நிச்சயமாகத் தமிழர்களுக்கு நல்லதொரு விடிவுகாலம் ஏற்படும் என்று சொல்லி, அமர்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து இங்கே கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், short ஆகச் சொல்லுங்கள். Time ஆகிவிட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** சுருக்கமாகச் சொல்கிறேன். அப்பாவித் தமிழர்கள் அங்கே பாதிக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் மாணவ, மாணவிகள் படுகொலைக்கு உள்ளாவதும், இப்படிப் பல்வேறு காரியங்கள் தொடர்ந்து நடைபெறுவதன் விளைவாக, தமிழர்கள் என்ற உணர்வோடு நமது தமிழ் மண்ணிலே அதற்கான உணர்வுகள் தவிர்க்க முடியாத வகையிலே வெளிப்படுத்தப்படுகிற நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன. குறிப்பாக, அங்கே தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிற தமிழர்கள், பாதிக்கப்பட்ட தமிழர்கள் அகதிகளாகப் பல்லாயிரக்கணக்கில் தமிழகத்திற்கு வந்துகொண்டேயிருக்கிறார்கள். தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான அந்தத் தமிழர்களை இங்கே பாதுகாத்துக்கொண்டு, பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறோம். ஆனால், ஒன்றை மத்திய அரசாங்கத்திற்கு நாம் வேண்டுகோளாக



வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று நான் கருதுகிறேன். உலகத்திலே இப்போது ஈராக்கிலே பிரச்சினை வருகிறபொழுது, அதைப் பற்றிக் கண்டிக்கிறோம். அதைப்போலவே, உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிலே ஏற்படுகிற மனிதாபிமானமற்ற செயலைக் கண்டிக்கிறோம். அதைப்போலவே, நமது அண்டை நாடாக இருக்கிற இலங்கையிலே நடைபெறுகிற இந்தப் பிரச்சினையைப் பற்றி நமது மத்திய அரசாங்கம் தலையீடு செய்வதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டிய அவசியம் இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். இதிலே மாண்புமிகு காங்கிரஸ் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இதை ஒரு பிரச்சினையாக, தீவிரத்தன்மையுடைய பிரச்சினையாக மாற்றாமல் இருக்க வேண்டும் என்பதிலே எனக்கும் உடன்பாடான கருத்துத்தான். ஆனால், இதற்குரிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி விரும்புகிறது. ஆனால், அதே நேரத்திலே இப்படிப்பட்ட படுகொலைகள் நடப்பதைத் தடுக்க வேண்டும் என்றால், நமது அண்டை நாடு என்ற முறையில் இந்தியாவினுடைய தலையீடு இருக்குமானால், அதற்கு ஒரு முக்கியத்துவம் ஏற்படும் என்றுதான் மற்றவர்கள் கருதுகிறார்கள், தமிழர்கள் கருதுகிறார்கள். இங்கே தமிழகத்திலும் அப்படிப்பட்ட கருத்து வலுவாக இருக்கிறது. அதை மத்திய அரசு தலையீடு செய்து விரைந்த நடவடிக்கையின்மூலமாகத் தீர்வு காண்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்ற கருத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வலியுறுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், சொல்லியாகிவிட்டது. எல்லாம் C.M. சொல்லப் போகிறார். C.M. பேசப் போகிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன மணி, சொல்லுங்கள்.

பிற்பகல் 12–20

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னதிலே எங்களுக்கு மாறுபாடு இல்லை. அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டார் என்ற அந்தச் செய்தியைச் சொன்னது--நாங்கள் படுகொலைக்கு ஆதரவாகவே பேசவில்லை. உள்ளபடியே அவருடைய படுகொலை குறித்து நாங்கள் வேதனைப்படுகிறோம், வருத்தப்படுகிறோம், அப்படிப்பட்ட ஒரு சம்பவம் தமிழ் மண்ணிலே நிகழ்ந்திருக்கக் கூடாது, அது கண்டிக்கப்பட வேண்டியது, வருத்தப்பட வேண்டியது,

ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டுக்கு மிகப் பெரிய சோகத்தையும், அதிர்ச்சியையும் கொடுத்த சம்பவம். அதற்குள்ளே இப்போது நான் செல்லவில்லை. இருந்தாலும்கூட, அகதிகள் அதிகமாக வந்துகொண்டிருக்கிறார்கள். அனாதை விடுதிகளில் பெண்கள், குழந்தைகள் படுகொலை செய்யப்படுகிறார்கள். நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தாய்த் தமிழ்நாட்டில் இருக்கிற நாம் இதற்குக் குரல் கொடுக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக அண்டை நாடான இந்தியா தலையிட வேண்டும். இதுதான் வேண்டுகோள். பக்கத்து நாடுகள் அவர்களுக்கு ஆதரவு அளித்துக்கொண்டிருக்கின்றன. நார்வே நாடு வருகிறது. தமிழர்கள் வாழக்கூடிய, தாய்த் தமிழ்நாடான, இந்தியாவில் இருக்கிற தாய்த் தமிழ்நாட்டுத் தமிழர்கள், முதலமைச்சர் குரல் கொடுக்காமல் யார் கொடுக்க முடியும்? ஆகவே, மத்திய அரசை வேண்டிக்கொள்கிறோம், நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் வாயிலாக இது நிறைவேற வேண்டும் என்று விரும்புகிறோம். இதுதானே தவிர, இந்தப் பிரச்சினையைப் பெரிதுபடுத்தாமல், விரிசலாகக் கொண்டு செல்லாமல், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் உணர்வு, ஒட்டுமொத்தத் தமிழினத்தினுடைய உணர்வு என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல அரசியல் தீர்வினை உண்டாக்க வேண்டும், ஒரு சுமுகத் தீர்வு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வர வேண்டும் என்ற வேண்டுகோளே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதைச் சொல்லி அமைகிறேன். நன்றி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mr. ஹசன் அலி, என்ன சொல்லப் போகிறீர்கள்? எல்லோரும் விரிவாகப் பேசிவிட்டார்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் சுதர்சனம் பேசிவிட்டார். நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள்? உட்காருங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** நான் ஒரே ஒரு விஷயம் சொல்கிறேன் சார். நான் இராமநாதபுரம் தொகுதியைச் சேர்ந்தவன். இராமநாதபுரத்திலே இப்போது 17,000-ஐத் தாண்டிவிட்டதாலும், அகதிகள் வருகை பிரச்சினையில் அக்கறை உள்ளவன் என்பதாலும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விஷயத்தைச் சொல்லுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** சமீபத்திலே இலங்கையினுடைய அதிபர் டெல்லி வந்திருந்தபோது என்னை சிறப்பு அழைப்பாளராக அழைத்து, என்னை அவரோடு தங்க வைத்து, இரண்டு நாட்கள் அவரோடு



இருந்திருக்கிறேன். ஆகையால், இந்தப் பிரச்சினையில் நான் பேசுவது பொருத்தமாக இருக்கும். ஆகையால், என்னை allow பண்ணுங்கள். தயவுசெய்து கோபித்துக்கொள்ளாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹசன் அலி, விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** நம்முடைய தமிழகத்திலே இருந்து—நான் ஏற்கெனவே கலைஞர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்—ஒரு குழு அமைத்து, கலைஞர் அவர்கள் அமைத்து, கலைஞர் அவர்கள் அனுமதியுடன் அவர்களைச் சந்தித்தால் நம்முடைய கருத்துகளை நாம் அங்கே எடுத்து வைப்பதற்கு ஏதுவாக அமையும். அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இதற்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார், ஒட்டுமொத்தமாகத் தமிழகத்திலே நம்முடைய வெறுப்பை நாம் தெரிவித்திருக்கிறோம் என்று. அதனால் என்ன பிரயோஜனம் தமிழர்களுக்கு? தமிழகத்திற்கு அகதிகளாக வந்திருக்கிறார்களே 16 ஆயிரம் பேர், அவர்களுக்கு எங்களுடைய சொந்தச் செலவில் உணவு, உடை எல்லாம் நாங்கள் கொடுத்திருக்கிறோம். இப்போது கொடுத்துக் கொண்டிருக்கும்போது இந்தப் பிரச்சினையில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, தினசரி ஒரு துப்பாக்கிச் சூடு அங்கே நடந்துகொண்டிருக்கிறது. ஒரு நாள் விட்டு ஒரு நாள் மீனவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம், கச்சத்தீவுக்கும் இராமநாதபுரத்திற்கும் இடையில் நடந்துகொண்டிருக்கிறது. அவர்களை எல்லாம் மதுரை ஆஸ்பத்திரியில் நாங்கள் பார்த்தோம். நம்முடைய தலைவர் அவர்களுக்கு எழுதியிருக்கிறேன், கலைஞர் அவர்களுக்கு எழுதியிருக்கிறேன். உடனடியாக இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், ஒரு வேண்டுகோளைத்தான் நான் வைக்கிறேன். இந்திய அரசாங்கத்திலே இது சரி வராது என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மீண்டும் அந்த வேண்டுகோளை வைக்கிறேன். இந்திய அரசாங்கத்தினுடைய ரோந்துப் படைகளும், இலங்கை அரசாங்கத்தினுடைய ரோந்துப் படைகளும் ஒன்றாக அந்த இடத்திலே ரோந்து செய்வார்களேயானால், இந்தத் துப்பாக்கிச் சூட்டை நிறுத்த முடியும். ஏனென்றால், இப்போது daily இரண்டு பேரும் சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, இலங்கைத் தமிழர் பிரச்சினையில், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், தமிழருடைய பிரச்சினையில் யாரும் பின் சாய்ந்து இருக்கவில்லை. எல்லோரையும்விட முன்னால்தான் நாங்கள் நிற்கிறோமேயொழிய, யாருக்கும் நாங்கள் பின் சாய்ந்து இருக்கவில்லை. மத்திய அரசாங்கமும் யாருக்கும் பின் சாய்ந்து இருக்கவில்லை. ஏனென்றால், அன்னை சோனியா

அவர்களும், மன்மோகன் சிங் அவர்களும் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். இதில் என்ன முடிவுக்கு வர வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையில் கலைஞர் அவர்களுக்கு மறுபடியும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். இந்தப் பிரச்சினை மிகச் சிக்கலான பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் நீங்கள் ஒரு குழு அமைத்து இதைப் பற்றி நீங்கள் பேச வேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*பிற்பகல் 12–25*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மான வடிவில் இந்தப் பேரவையின் உறுப்பினர்களுடைய எண்ணங்களைத் தொகுத்து, மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற கருத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் திரு. மணி அவர்கள் இங்கே வெளியிட்டிருக்கின்றார்கள். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் சுதர்சனம் அவர்களும், இலங்கையில் நடைபெறுகின்ற அட்டூழியங்கள் எதையும் மறைக்காமல், ஆனால், இதையெல்லாம் சமாளிக்கின்ற அல்லது சந்திக்கின்ற அல்லது அகற்றுகின்ற அந்தப் பொறுப்பை மத்தியிலே இருக்கின்ற பிரதமர் அவர்களும், திருமதி சோனியா காந்தி அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்திருக்கின்றார்கள்.

இங்கே ஆற்றிய உரைகள் அனைத்தும், யாரையும் நம்பாமல் ஆற்றப்பட்டவை அல்ல. இந்தப் பிரச்சினை ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் இன்னும் சூடாக, கொதிப்பாக வெளியிடப்பட்டபோது, நான் அதற்குப் பதில் அளித்து ஆற்றிய உரையில் குறிப்பிட்ட எந்த வாசகத்தையும் நீங்கள் மறந்திருக்க முடியாது. அதையேதான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால், அதையே திரும்பத் திரும்ப நினைவுபடுத்தி, பிரச்சினையைத் தட்டிக் கழிக்கவோ அல்லது அங்கே செத்துக்கொண்டிருக்கின்ற தமிழர்களை மேலும் சாகவிடவோ நான் விரும்பமாட்டேன் என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும்.

இலங்கைத் தமிழர்களுடைய, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வு எப்படியெல்லாம் கடந்த சில நாட்களாக வெளிப்படுத்தப்படுகிறது என்பதை நான் கடந்த சில நாட்களுக்கு முன்பு டெல்லிக்குச் சென்றிருந்தபோதுகூட, திருமதி சோனியா காந்தி அவர்களிடத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றேன். இப்போதும், வாய்ப்பு ஏற்பட்டால்





டெல்லியிலே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மணி அவர்களானாலும், மற்றும் அவர்களுடைய தலைவர், பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் தலைவர் டாக்டர் அவர்களானாலும், இதை நான்தான் செய்ய முடியும், தமிழக முதலமைச்சரால்தான் செய்ய முடியும் என்கிறபோது, அவர்கள் முதலமைச்சர் என்கின்ற பதவி இருக்கின்ற காரணத்தினால் முடியும் என்று கருதுகிறார்களா? அல்லது கருணாநிதியாலேயே முடியும் என்று அவர்கள் கருதுகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

கிளின்டன் அவர்கள் இங்கே வந்து பேசியதைக்கூட நம்முடைய மணி அவர்கள்--மணி அவர்கள்தான் என்று நினைக்கின்றேன்--இங்கே குறிப்பிட்டார்கள். கிளின்டன் எப்போது பேசுகிறார்? அமெரிக்க அதிபராக இல்லாதபோது பேசுகிறார். அவர் அமெரிக்க அதிபராக இருந்தாரே, அப்போது அமெரிக்க ஏகாதிபத்தியம் அவரைப் பேசவிட்டதா? அதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, ஒரு பொறுப்பு கிளின்டனுக்கு இருந்தபோது, அதைப் பற்றி அவர் பேசவில்லை. பேசாததற்குக் காரணம், அவருடைய மனதிலே, தயவு தாட்சண்யம் இல்லை, இரக்கம் இல்லை என்று யாரும் கருதக் கூடாது. எல்லாம் இருந்தது. இருந்தாலும், எந்த அளவிலே பயன்படுத்த வேண்டுமென்ற ஒரு நெருக்கடியும் அவருக்கு இருந்த காரணத்தினால், அப்போது பேசவில்லை. இப்போது புஷ் இருக்கிறார். பேசவில்லை. இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்குப் பிறகு, அவர் இந்தியாவுக்கு வந்தால் பேசுவார். ஆனால், அந்த இரண்டு ஆண்டு காலமும் இலங்கைப் பிரச்சினை நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறவன் அல்ல நான். விரைவிலே முடிய வேண்டும் இந்தப் பிரச்சினை என்றுதான் நான் விரும்புகின்றேன்.

இதற்கிடையிலே, தமிழ்நாட்டிலேயுள்ள மக்கள், அவர்கள் மாணவர்களாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும், வழக்கறிஞர்களாக இருந்தாலும், கவிஞர்களாக இருந்தாலும், கலையுலகப் பெருமக்களாக இருந்தாலும், தொழிலாளர்களாக இருந்தாலும், அரசியல்வாதிகளாக இருந்தாலும், அத்தனை பேரும் தங்களுடைய உணர்வுகளை இன்றைக்கு வெளிப்படுத்தி, ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாநோன்புகள், இவையெல்லாம் தமிழகத்தில் தினந்தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 டிசம்பர் 7

*பிற்பகல் 12–30*

அவை மத்தியிலே இருப்பவர்களுக்குத் தெரியாமல் இல்லை. மத்தியிலேயிருந்து வருகின்ற அதிகாரிகள், இலங்கைக்குச் சென்று திரும்பிய அதிகாரிகள், வெளியுறவுத் துறை செயலாளர் போன்றவர்கள் என்னைச் சந்தித்தபொழுதும் அவர்களிடத்திலே இவற்றையெல்லாம் முழுமையாக நான் விளக்கியிருக்கின்றேன். வாய்ப்பு ஏற்படும்பொழுதெல்லாம் டெல்லியிலே உள்ளவர்களைச் சந்தித்தாலோ அல்லது அவர்கள் இங்கே வரும்பொழுது அவர்களைச் சந்திக்க நேர்ந்தாலோ, இதை விளக்கிக்கொண்டு இருக்கின்றேன். இத்தனைக்கும் பிறகு சட்டசபையிலேயே ஒரு தீர்மானம் நிறைவேற்றினால் என்ன என்ற அந்தத் துடிப்பு, நம்முடைய நண்பர் மணி போன்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்கின்றது.

மணி அவர்கள் இதை அணுகுகிற அதே கோணத்திலே நம்முடைய அன்பிற்குரிய சுதர்சனம் அவர்கள் அணுகுவாரா என்றால், இல்லை. உணர்வைப் பொறுத்தவரையிலே அணுகுகிறார்கள். ஆனால், வேறு சில விஷயங்களில், பிரச்சினைகளில் எல்லோரும் ஒரே மாதிரி அணுக முடியாதுதான். அதைப்போல, நம்முடைய கோவிந்தசாமி அவர்கள் அணுக முடியாது. நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் அணுக முடியாது. இவர்கள் அணுகுவதைவிட இன்னும் வேகமாக அணுகக்கூடியவர்கள் நம்முடைய விடுதலைச் சிறுத்தைகள். அவர்கள் அணுகுவார்கள். எனவே, இந்த மாமன்றத்திலே வீற்றிருக்கிற நாமே இதை அணுகுகின்ற முறையில் வேறுபடுகின்றோம். மாறுபடுகின்றோம் என்பதல்ல; வேறுபடுகின்றோம். ஒவ்வொருவருக்கும் இலங்கையிலே இருக்கிற தமிழர்கள் வாழக் கூடாது என்கின்ற மாறுபாடான எண்ணம் கிடையாது. ஆனால், அவர்களை எப்படி வாழ வைப்பது, எப்படிக் காப்பாற்றுவது என்பதிலே வேறுபட்ட எண்ணங்கள் இருக்கின்றன; வேறுபட்ட முறைகள் இருக்கின்றன. எந்த முறையிலே அதைக் கடைப்பிடிக்கலாம் என்பதிலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் ஆர, அமர யோசித்துப் பார்த்துதான் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

ஆளும் கட்சியிலே இருக்கின்றோம் நாங்கள். நாளைக்கே இதை விட்டுவிட்டு வரச் சொல்கிறீர்களா, வருகிறோம். வந்தால், மறுநாள் தமிழ் ஈழம் கிடைத்துவிடும்; வாருங்கள் என்று சொன்னால், நாங்கள் வருவதற்குத் தயாராக இருக்கிறோம். வந்தாலும் கிடைக்காது என்றால் இதை விட்டு என்ன பலன்? இதை விட்டதுதான் பலனாக இருக்கும். சில பேருக்குப் பலனாக இருக்கலாம். தொலைந்தார்கள் பாவிகள் என்று, சில பேருக்குப் பலனாக இருக்கலாம். ஆகவே, எதைச் செய்தால் தமிழ் ஈழம் கிடைக்கும் என்றோ அல்லது அங்கே இருக்கின்ற தமிழ் மக்கள், அவர்கள் வாழ முடியும் என்றோ நாம் கருதிப் பார்க்க வேண்டியிருக்கிறது. இருந்தாலும், நாம் செய்ய வேண்டிய முயற்சிகளை, எடுக்க வேண்டிய முயற்சிகளை எடுத்துத்தான் தீர வேண்டும். அது நம்முடைய உணர்வோடு கலந்தது; உதிரத்தோடு கலந்தது; நம்முடைய உயிர் மூச்சோடு கலந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தமிழர்களுக்காக நாம் பாடுபடத்தான் வேண்டும். ஆகவே, இங்கே நாம் தனியாக ஒரு தீர்மானமாகப் போட்டு, மத்தியிலே இருப்பவர்களுக்கு ஒரு நெருக்கடியை உண்டாக்க வேண்டிய அவசியம் இல்லை; நாமும் நெருக்கடிக்கு ஆளாக வேண்டிய தேவை இல்லை. ஆகவே, ஒரு தீர்மான வாசகமாகவே நான் அதை எழுதிப் படித்துத் தீர்மானம் என நிறைவேற்றுவதைவிட, ஒரு வாசகமாகவே சொல்கிறேன். அதைத் தீர்மானமாக ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.



2006 டிசம்பர் 7] [கலைஞர் மு. கருணாநிதி]

"இலங்கையிலே, தமிழ் மக்களின் உயிர் உடைமைகளுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை மேலும் மோசமான அளவில் தொடர்வதற்காக இந்தச் சட்டப் பேரவை ஆழ்ந்த வேதனையைத் தெரிவிப்பதோடு, இதற்கு ஒரு முடிவினைக் காண, இலங்கைத் தமிழர்கள் அனைத்து உரிமைகளும் பெற்று அமைதியாக வாழ்ந்திட, இந்தியப் பேரரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இப்பேரவை இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது."

என்னும் இந்தத் தீர்மானம் (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் பொதுவான தீர்மானமாக அமையும் என்று கருதி, இதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த subject-க்குப் போயாகிவிட்டது. விடுங்கள். (குறுக்கீடு) மணி, நிறைய Bills இருக்கின்றன. Time நிறையத் தேவைப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள், கோவிந்தசாமி. நிறைய time தேவைப்படுகிறது.

[2006 டிசம்பர் 7

**திரு. சி. கோவிந்தசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **

பிற்பகல் 12–35

## 5. கவன ஈர்ப்பு

### வேட்டைக்காரன்புதூர் மற்றும் சேத்துமடை அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் மற்றும் சேத்துமடை அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமித்து, பள்ளிகளுக்குக் கழிப்பிடம் மற்றும் தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

#### அறிக்கை

பொள்ளாச்சி கல்வி மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட/காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்கள் பின்வருமாறு:–

| | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | காலியாகவுள்ள பணியிடங்கள் |
|---|---|---|
| தலைமை ஆசிரியர் | 1 | – |
| முதுகலை ஆசிரியர்கள் | 5 | 1 |
| பள்ளி உதவி ஆசிரியர்கள் | 5 | 1 |
| தமிழ் ஆசிரியர்கள் | 2 | 1 |
| இடைநிலை ஆசிரியர்கள் | 7 | – |
| சிறப்பு ஆசிரியர்கள் | 3 | 1 |
| உடற்கல்வி ஆசிரியர்கள் | 1 | – |
| மொத்தம் | 24 | 4 |

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது





காலியாகவுள்ள பணியிடங்கள் விரைவில் பூர்த்தி செய்யப்படும்.

இப்பள்ளியில் 615 ஆண்கள், 39 பெண்கள் பயில்கின்றனர். இப்பள்ளியைச் சுற்றித் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. கழிப்பிட வசதியைப் பொறுத்தமட்டில், ஆசிரியர்களுக்கு 2-ம், மாணவர்களுக்கு 2-ம் உள்ளன. இப்பள்ளிக்கு நபார்டு வங்கியின் பகுதி VI திட்டத்தின்கீழ் ரூ.99.80 இலட்சம் செலவில் 24 வகுப்பறைகள், 1 ஆய்வுக் கூடம் மற்றும் 6 கழிப்பிடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் அப்பணிகள் நிறைவேற்றப்படும்.

2. பொள்ளாச்சி கல்வி மாவட்டம், சேத்துமடை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் பின்வருமாறு:–

| | |
|---|---|
| தலைமை ஆசிரியர் | 1 |
| பட்டதாரி ஆசிரியர் | 2 |
| இடைநிலை ஆசிரியர் | 1 |
| உடற்கல்வி ஆசிரியர் | 1 |
| மொத்தம் | 5 |

இடைநிலை ஆசிரியர் பணியிடம் ஒன்றும், உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் ஒன்றும் காலியாக உள்ளன. இவற்றை விரைவில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும். காலியாக உள்ள பட்டதாரி பணியிடம் ஒன்று ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் பெறப்பட்டதும் பூர்த்தி செய்யப்படும்.

இப்பள்ளியில் ஆண்கள் 208, பெண்கள் 176, ஆக மொத்தம் 384 மாணவ, மாணவியர் பயில்கின்றனர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

[திரு. தங்கம் தென்னரசு] [2006 டிசம்பர் 7

இப்பள்ளிக்கு அப்பகுதி வனத் துறையினரைத் தொடர்பு கொண்டு பள்ளியைச் சுற்றிப் பசுமை வேலி அமைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோவை முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இப்பள்ளி ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், இதில் காலியிடம் எதுவும் இல்லாத நிலையில் ஆய்வகம், கழிப்பிடம் எதுவும் கட்ட இயலவில்லை.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை தொகுதிக்கு நேரடியாக வந்து, வேட்டைக்காரன்புதூர், சேத்துமடை பள்ளிகளைப் பார்வையிட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேத்துமடை பள்ளி மிகவும் பழுதடைந்த பள்ளியாக இருக்கிறது. அங்கே வகுப்பறைகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. அங்கே ஒரு கிணறு இருக்கிறது. அது புதருடன் இருக்கிறது. அந்தக் கிணற்றில் எந்த நேரம் வேண்டுமானாலும் குழந்தைகள் விழுகின்ற அபாயம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மேலும் வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளி, அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, முடீஸ், சின்கோ, சோலையாறு அணை, காடம்பாறை, கோட்டூர் அரசு மேல்நிலைப் பள்ளி, கோட்டூர் செல்லமுத்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி, சோமந்துறை உயர்நிலைப் பள்ளி மற்றும் ஊராட்சிகளில் இருக்கின்ற பள்ளிகளுக்கெல்லாம் போதிய வகுப்பறைகளும், போதிய ஆசிரியர்களும், கழிப்பிடங்களும், குடிநீர் வசதிகளும் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகின்றேன். வருகின்ற நிதி ஆண்டில் என்னுடைய வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் வாழ்கின்ற அந்தச் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற பள்ளிகளுக்குப் போதுமான அடிப்படை வசதிகளையும், ஆசிரியர்களையும், கூடுதல் வகுப்பறைகளையும் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் எழுப்பியிருந்த இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தினுடைய அடிப்படையில், கடந்த மாதம் கோவை மண்டல ஆய்வுக் கூட்டத்திற்காக



2006 டிசம்பர் 7] [திரு. தங்கம் தென்னரசு]

நான் கோவை சென்றிருந்தபோது, கடந்த 19 ஆம் தேதி, சேத்துமடை பள்ளி, வேட்டைக்காரன்புதூர் மற்றும் ஆனைமலை பள்ளிகளுக்கு நானே நேரிடையாகச் சென்று அங்கு இருக்கக்கூடிய நிலைமைகளை ஆய்வு செய்தேன். அதன் அடிப்படையிலே, அவர் இங்கே குறிப்பிட்டதைப்போல சேத்துமடை பள்ளியிலே இருக்கக்கூடிய கட்டடம் மிகுந்த பழைமை வாய்ந்த, பழுதடைந்த ஒரு கட்டடமாக இருந்தது.

பிற்பகல் 12-40

உடனடியாக அங்கிருந்தே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தொடர்புகொண்டு, அந்தக் கட்டடத்தை இடிப்பதற்கு அவருடைய அனுமதியினை வேண்டி அவரிடத்திலே பேசினேன், அவரும் மறுநாளே அந்தக் கட்டடத்தை இடிப்பதற்கு ஆணை வழங்கி இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து அந்த இடத்திலே 6 வகுப்பறைகள் கொண்ட ஒரு புதிய கட்டடம் அனைவருக்கும் கல்வி இயக்கத்தினுடைய சார்பாகக் கட்டப்படுவதற்கு 12 இலட்சம் ரூபாய் இப்போது நிதி ஒதுக்கி, அந்தப் பணி, அந்த கிராமக் கல்விக் குழுவிற்கு இப்போது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து, அந்த இடத்திலே அவர் குறிப்பிட்டதைப்போல, பாழடைந்த கிணறு ஒன்றும், அதன் பக்கத்தில் ஒரு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி ஒன்றும் பாதுகாப்பற்ற முறையிலே இருந்தன. அந்த இடத்திற்கு மாணவர்கள் செல்வதைத் தடுக்கும்பொருட்டு உடனடியாக அவர்களுக்கு 75 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்து, அங்கே மாணவர்கள் சென்றுவிடாத வகையிலே தடுப்பு வேலி அமைக்கக்கூடிய அந்தப் பணியும் பொதுப் பணித் துறையிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. வேட்டைக்காரன்புதூர் பள்ளியைப் பொறுத்தமட்டிலே நபார்டு பகுதி 6-வது திட்டத்தின்கீழே ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவிலே அங்கே 24 வகுப்பறைகளும், அதைப்போல ஆய்வகங்களும் கட்டக்கூடிய அந்தப் பணியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். வால்பாறை தொகுதியில், ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தமட்டில், இந்தப் பள்ளியாக இருந்தாலும் சரி, வால்பாறை பகுதியாக இருந்தாலும் சரி, உரிய முக்கியத்துவம் கொடுப்பதற்காக அதிகாரிகளிடத்திலே நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். உங்கள் அனைவருக்குமே தெரியும். மாமன்ற உறுப்பினர்கள் அனைவருமே அறிவார்கள். மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடனே, தமிழகத்திலே இருக்கக்கூடிய 8,500 காலிப் பணியிடங்களில் உடனடியாக ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று அவர்கள் உத்தரவிட்டார்கள். அதுமாத்திரமல்லாமல், 6, 7, 8, 9 ஆகிய வகுப்புகளில் இருக்கக்கூடிய மாணவர்களுக்காக 7,979 புதிய

[திரு. தங்கம் தென்னரசு] [2006 டிசம்பர் 7

ஆசிரியர் பணியிடங்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கி, அதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். இந்தப் பணியிடங்களுக்கு நியமிக்க வேண்டிய ஆசிரியர்கள் அத்தனை பேரும் இப்போது ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு, சான்றிதழ் சரிபார்க்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த மாதம் முடிந்தவுடன், காலியாக இருக்கக்கூடிய அனைத்துப் பணியிடங்களிலும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். நான் இன்னும் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டிலே வால்பாறை ஒன்றியத்திலே இருக்கக்கூடிய தொடக்கப் பள்ளியிலே 14 காலிப் பணியிடங்களும் கடந்த 30 மற்றும் 1 ஆம் தேதி நடந்த கலந்தாய்விலே நிரப்பப்பட்டிருக்கின்றன. எனவே, வால்பாறை தொகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தின் அடிப்படையிலே, வருங்காலங்களிலே பள்ளிகளுக்குரிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும், ஆசிரியர் பணியிடங்களும் உரிய வகையிலே நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியை நான் இங்கே வழங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு மிக்க நன்றி. வணக்கம்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 7 முதல் 11 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.



006 டிசம்பர் 7]

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2006 டிசம்பர் 7

# 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

## (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2006), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/ 2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடு) என்ன சார்? (குறுக்கீடு) என்ன, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, time இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time இருக்கலாம். Subjects-ம் இருக்கின்றன. அவற்றிற்கு நேரம் தேவை இருக்கின்றது.

**திரு. சி. ஞானசேகரன்:** Supplementary Budget, விவாதிக்காமல் எப்படி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

---

@ 6-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2006 டிசம்பர் 7]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, 2006–2007ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இன்று அவையிலே தாக்கல் செய்து, அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றது. இதிலே துணை மதிப்பீடுகள் என்று வருகிறபோது, எதிர்பாராச் செலவினங்கள் என்று 1,157.95 கோடி ரூபாயை நாம் இணைப்பது என்பது பொதுவாக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கொஞ்சம் மாறுபட்ட கூறாகும். எப்பொழுதுமே நாம் எதிர்பார்த்து, இவ்வெல்லாம் செலவு செய்யப்பட வேண்டியவை. எதிர்பாராத இனங்கள் என்கிற வரிசையிலே 1,157 கோடி ரூபாயை இதிலே நாம் கொண்டு வந்து சேர்ப்பது என்பதை நாம் கொஞ்சம் தவிர்த்திருக்க வேண்டும்.

பொதுவாக, Budget — நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்கிறபோது நிதித் துறைச் செயலாளர் அவர்களும், அந்தத் துறையும் மிகவும் கவனமாகக் கருத்தில் கொண்டு, சில பணிகளை அவர்கள் எடுத்து, இதற்காக நிதியொதுக்கீடு செய்கிறார்கள். அப்படிச் செய்கிறபோது கொஞ்சம் கவனத்தோடு செய்து, இவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கரும்பு விலையை உயர்த்துவதற்காக, இப்பொழுது உயர்த்தப்பட்ட மாநில அரசின் பரிந்துரை விலையை விவசாயிகளுக்கு வழங்கும்பொருட்டு, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு ரூபாய் 89.02 கோடி நிதி உதவி இந்தத் துறையிலே நிதியொதுக்கீடு செய்திருக்கிறீர்கள். இதை நாம் முதலிலேகூட எதிர்பார்த்து, நிதிநிலை அறிக்கை வருகிறபோதேகூட — இப்பொழுதே இந்த நிதிகூட போதவில்லை. ஏன் என்றால், ஒரு டன் 1,500 ரூபாய் என்று நிறைய — விவசாயம் செய்பவர்கள் கரும்பை நட்டு, வளர்த்து, அதை வெட்டி ஆலைக்கு அனுப்புகிற வரையில் அவர்களுக்கு 1,500 ரூபாய்க்கு மேல் அந்த உற்பத்திச் செலவே ஆகிறது என்று கூறி அவர்கள் ஒரு டன்னுக்கு 1,500 ரூபாய் வழங்க வேண்டுமென்று அரசுக்கு ஒரு கோரிக்கை வைக்கிறார்கள். இவற்றையெல்லாம் முதலிலேயே, நிதிநிலை அறிக்கையிலாவது தயாரிக்கிறபோதாவதுகூட — அடுத்த நிதிநிலை அறிக்கையிலாவது கொண்டு வருவதற்கு நாம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் திருமணத் திட்டத்தின்கீழ் வழங்குகிற பணமானலும் சரி அல்லது முத்துலட்சுமி ரெட்டி திட்டத்தின்கீழ் கருவுற்ற தாய்மார்களுக்கு மாதம் 1,000 ரூபாய் என்று வழங்கக்கூடிய வகையில் திட்டங்களையெல்லாம் நாம் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். அந்தத் திட்டத்தைப் பார்த்தோம் என்று சொன்னால், இப்போது மாதம் 1,000 ரூபாய் என்று

[திரு. சி. ஞானசேகரன்] [2006 டிசம்பர் 7

ஆறு மாதங்களுக்கு 6,000 ரூபாய் கருவுற்ற தாய்மார்களுக்கு முத்துலட்சுமி ரெட்டி திட்டத்தின்கீழ் அளித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், கருவுற்ற அந்தப் பெண்மணிகளை நாம் Primary Health Centre-க்கு ஒவ்வொரு மாதமும் அழைத்து ஆயிரம், ஆயிரம் ரூபாய்க்கு நாம் cheque கொடுத்துக்கொண்டிருப்பது மிகவும் இடர்ப்பாட்டினைத் தந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலே அரசு, கருவுற்ற தாய்மார்கள் என்று அடையாளம் கண்டு—மாதா மாதம் வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மாதா மாதம் V.H.N.—கிராம சுகாதாரப் பெண்மணிகள் அவர்களை அழைத்துக்கொண்டு வர வேண்டுமென்றும், பிறகு cheque தனித்தனியாகக் கொடுக்கிற காரணத்தினாலே கருவுற்ற பெண்கள், நேற்றுகூட ஓரிடத்திலே, அந்தப் பணத்தை வாங்குவதற்காக வந்து, அங்கேயே நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கலந்துகொண்டிருக்கின்ற கூட்டத்திலேயே ஒரு பெண்ணுக்குப் பிரசவம். அங்கே கதறல் ஏற்பட்டு, பிறகு ஆஸ்பத்திரியில் அவரை அனுமதித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் மாதம் P.H.C.-இலே வாங்குகிறார்கள். அடுத்த மாதங்களுக்கான cheque பூராவும் அவர்கள் வீட்டிலே கொண்டு போய்க் கொடுத்துவிடுகிறோம். முதல் மாதம் வந்து அந்த record-லே கையெழுத்துப் போட்டு, அந்த formalities-க்காக P.H.C.-க்கு வரச் சொல்கிறோம். அடுத்த மாதம் முதல் நேராகக் கொண்டு போய்க் கொடுத்துவிடுகிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். செய்யாறு H.U.D.-லே கண்ணமங்கலத்திலே, பக்கத்திலே இருக்கக்கூடிய இடங்களிலே எல்லாம் பார்த்தீர்கள் என்றால், தச்சமங்கலம்—இந்த மாதிரி இடங்களில், ஒவ்வொரு மாதமும் தனித்தனியாக, என்னிடம்கூட அந்த cheque-ஐக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, bank-ல் account open செய்யச் சொன்னால், அதற்கு 500 ரூபாய் minimum வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த account-ஐ open பண்ணக்கூட அவர்களால் முடியவில்லை. ஏனென்றால், அந்தப் பணத்தைக் கட்டி account open பண்ணச் சொல்லி, நான் State Bank of India-வுக்குச் சொல்ல வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே, துறை இவற்றையெல்லாம் பரிசீலித்து, நேரடியாக 6,000 ரூபாயை அவர்கள் கையிலே ஒரேயடியாகக் கொடுத்துவிட்டீர்கள் என்றால்கூட மிகச் சிறப்பாக இருக்கும். அந்தக் கருவுற்ற பெண்மணிகள் அடிக்கடி அலையக்கூடிய நிலையை நீங்கள் தவிர்க்கலாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து,



2006 டிசம்பர் 7] [திரு. சி. ஞானசேகரன்]

இங்கே அரசினுடைய கவனத்திற்கு சில விஷயங்களை நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஈரோடு, அதேபோல திருப்பூர் போன்ற பகுதிகளிலே சாயப் பட்டறை மற்றும் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுடைய கழிவு நீர், அதேபோல எங்களுடைய மாவட்டத்தில்...

பிற்பகல் 12–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சார், இந்த சப்ஜெக்டிலே பேசுங்கள். நீங்கள் எதற்கு எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** Supplementary Budget–லேதான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எப்படி?

**திரு. சி. ஞானசேகரன்:** அதுதான் மரபு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை. Supplementary Budget–லே. Because we can adduce certain points. அதற்கு நிதி ஒதுக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You are entering into the Pollution Control Board, அதற்குள்ளே போய்க்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) Supplementary, Finance உட்காருங்கள். No. (குறுக்கீடு) இருக்கட்டும் Supplementary. Finance சம்பந்தப்பட்டதற்கு Finance Minister பதில் சொல்லப் போகிறார்கள். அது சம்பந்தப்பட்டதைக் கேளுங்கள். (குறுக்கீடு) You are entering into Pollution Control...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Actually I am within the purview of the... (குறுக்கீடு) No, no. Purview–ஐவிட்டு வெளியே போவதாக தயவுசெய்து நினைக்க வேண்டாம். நீங்கள் பழைய வரலாறுகளையும், மரபையும்கூட எடுத்துப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You are going out of purview. (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கையிலே என்னென்ன வருகின்றனவோ, அவற்றிலேதான் பேச வேண்டும் நீங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை. மானியக் கோரிக்கையிலே. இங்கே அடுத்த முறை நிதிநிலை அறிக்கை என்று வகுக்கிறபோது, திருப்பூர், Pollution control–க்கு 800 கோடி ரூபாய் நீங்கள் ஒதுக்கீடு செய்து, திருப்பூர், ஈரோடு போன்ற பகுதிகளிலே இருக்கக்கூடிய சாயப் பட்டறைத்

[திரு. சி. ஞானசேகரன்] [2006 டிசம்பர் 7

தண்ணீரை எல்லாம் பைப் லைன்மூலம் நாகப்பட்டினம் கடலில் கொண்டு போய் விடுவதற்கும், அதேபோல எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்தத் தோல் தொழிற்சாலைகளுடைய கழிவு நீரைக் கொண்டு போவதற்கு 200 கோடி ரூபாய்—400 கோடி ரூபாயில் ஒரு பைப்லைன்மூலம் நீங்கள் கடலிலே கொண்டு விடுவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணல்—இதற்கு ஒரு தனி வாரியத்தை வைத்து, அதற்கான நிதி ஒதுக்கீடு எல்லாம் பண்ணினீர்கள் என்றால் செம்மையாக அரசுக்கு வருவாய் கிடைக்கும். ஆகவே, மணல் வாரியம் என்ற ஒன்றை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கல்வி. Eve teasing. இன்றுகூட பத்திரிகையைப் பார்த்தோம் என்றால், நிறைய Eve teasings எல்லாம் நடைபெற்றுக்கொண்டு, ஒரு மாணவி, ஜெயஸ்ரீ இறந்திருக்கிறார். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

C.M.D.A.-விலே ஏற்கெனவே நம்முடைய இப்போதைய கல்வி அமைச்சர் முன்பு அமைச்சராக இருந்தபோது, 1996-லே C.M.D.A. சென்னைக்குள்ளே இருக்கக்கூடிய அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட கட்டடங்களை எல்லாம் வரைமுறைப்படுத்துவதற்காக ஒரு கட்டணத்தை வசூலித்து, அதை வரைமுறைப்படுத்தலாம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தின்படி வசூலிக்கப்பட்ட பணத்தை எல்லாம் இப்போது நீதிமன்றம் தலையிட்டு அதை டெபாசிட்டிலே போட்டுவிட்டு 33 ஆயிரம் கட்டடங்களை இடிக்க வேண்டும் என்று ஒரு கருத்தைச் சொல்லி, அதனால் ஒரு பெரிய பரபரப்பு இப்போது சென்னையிலே ஏற்பட்டிருக்கிறது. இதற்கு வேறு ஒரு மாற்றுச் சட்டத்தைக் கொண்டு வந்து இந்தக் கட்டடங்கள் எல்லாம் இடிபடாமல் இருப்பதற்கும் இங்கே இருக்கக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்கும் ஒரு வழிவகையைக் காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, (குறுக்கீடு) இதோ முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற நிறைவேற்றுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையில்—இது துணை நிதிநிலை அறிக்கை. இந்த அறிக்கையிலே எந்தெந்த வகையில் இந்த நிதி ஒதுக்கப்படுகிறதோ அதுவரையில்தான் மாண்புமிகு உறுப்பினர் பேசலாமே தவிர, வழக்கம்போல, எல்லாப்



2006 டிசம்பர் 7] [பேராசிரியர் க. அன்பழகன்]

பிரச்சினைகளையும் இதன்மூலமாகப் பேசி நிறைவேற்றிக்கொள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சிக்கக் கூடாது. (சிரிப்பு) அதேபோல, இப்போது எனக்குக் கிடைத்திருக்கிற விளக்கம் கரும்பு விலையேற்றம் காரணமாக அல்லது அதற்கு உதவுவதற்காக வழங்கப்பட்ட நிதி இருக்கிறதே, அது தவிர மிச்ச நிதியைப் பற்றி இங்கு பிரச்சினை எழுப்பினார்கள். The balance amount will be met by respective Sugar Mills from their own funds or through working capital loan from banks. The amount provided in FSE is based on request from respective Sugar Mills. குறிப்பிட்டதொரு ஆலையினுடைய வேண்டுகோளின் அடிப்படையில் அவர்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற வகையில் அவர்களே அந்த நிர்வாக முறைப்படி அந்தக் கரும்புகளுக்கான விலை உயர்வை வழங்கி அந்தக் கடமையை நிறைவு செய்வார்கள். இப்போது இந்த ஆட்சி புதிதாக வந்ததன் காரணமாகத்தான் பல புதிய பொறுப்புகள், புதிய சுமைகளைத் திடீரென்று ஏற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு, இந்த நிதிநிலை அறிக்கையினுடைய தொகையாக ஆயிரம் கோடிக்குமேல் அதிகமாக வழங்குகிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, வளர்ச்சி என்ற அடிப்படையில், நிதிநிலை அறிக்கை வழங்கப்பட்ட காலத்திற்குப் பின்னர் அடுத்த நிதிநிலை அறிக்கை வருவதற்கிடையில், இடையிடையிலே பல புதிய பொறுப்புகளை ஏற்க வேண்டிய அவசியம் அரசுக்கு வரும். அந்த முறையில் இந்த நிதிநிலை அறிக்கையில் அதிக வாதத்திற்கு இடமில்லை என்ற கருத்தைத் தெரிவித்து, இதை நிறைவேற்றித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி சொன்ன அந்தக் குறிப்பும், நான் அவருக்குப் பதில் சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2006 டிசம்பர் 7

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 12–55

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2006 டிசம்பர் 7]

## (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/ 2006), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2006)❶ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

❶ 6-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 9. அரசினர் தீர்மானம்

### (அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.





***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2006), 2006 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2006), 2006 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2006) மற்றும் 2006 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2006) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)– தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2006), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2006) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 7-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-00

## (ஈ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2006), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2006) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

---

@ 7-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**திரு. டி. சுதர்சனம்:** மூன்று சட்டமுன்வடிவுகள் குறித்தும் சேர்த்துப் பேசிவிடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று சட்டமுன்வடிவுகளையும் சேர்த்து ஒரே வாக்கெடுப்பாக விட்டுவிடலாம் என்று சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) சரி, ரைட். திரு. டி. சுதர்சனம், பேசுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகம் இன்றைக்கு உலகத்திலேயே ஒரு சிறந்த பல்கலைக்கழகமாக விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், 240–க்கும் மேற்பட்ட கல்லூரிகள் அதோடு இணைந்திருக்கின்ற காரணத்தினால், இந்தப் பல்கலைக்கழகத்தைப் பிரித்து, தனித்தனிப் பல்கலைக்கழகமாக, Technical University–ஆக மாற்ற வேண்டுமென்ற ஒரு கோரிக்கை நிதிநிலை அறிக்கையின்போது காங்கிரஸ் கட்சியின் சார்பாக வைக்கப்பட்டது.

அந்த வேண்டுகோளை ஏற்று, இன்றைக்குக் கோவையிலும், திருச்சியிலும், 'அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி,' 'அண்ணா பல்கலைக்கழகம், கோவை' என்று மூன்று பல்கலைக்கழகங்களாக மாற்றியிருக்கின்றீர்கள். உண்மையிலேயே காங்கிரஸ் கட்சி இதை மனப்பூர்வமாக வரவேற்கிறது. அதோடு, இந்தப் பல்கலைக்கழகம் திருச்சியிலும், கோவையிலும் மட்டும் இருந்தால் போதாது. மதுரையிலும் ஒரு பல்கலைக்கழகம் வைக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையினையும் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இந்தப் பல்கலைக்கழகம், இப்போது மூன்று பல்கலைக்கழகங்களாகப் பிரிக்கப்படுகின்றபோது, ஒரே துணை வேந்தர் இருக்கப் போகிறாரா? அல்லது சில காலத்திற்கு ஒரே துணை வேந்தரை மட்டும் வைத்துக்கொண்டு, Special Officer–களை வைத்து, அந்தப் பல்கலைக்கழகங்களைத் தொடங்குகின்ற வரை இந்தத் துணை வேந்தரின் ஆளுகையிலேயே இருக்கப் போகிறதா என்ற ஒரு நிலைப்பாட்டை அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே விளக்க வேண்டும்.

அதேபோன்று, இந்த மூன்று பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன; இந்த மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் ஒரே syllabus வைக்க வேண்டும். சென்னையிலே இருக்கிற அண்ணா பல்கலைக்கழகத்திற்கு ஒரு syllabus–ம், திருச்சியிலே ஒரு syllabus–ம், கோயம்புத்தூரிலே ஒரு syllabus–ம் இருந்தால், அது பயனளிக்காது. மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் ஒரே syllabus வைக்கப்பட வேண்டும்.



அதுமட்டுமல்லாமல், ஒரு துணை வேந்தருக்குக்கீழே அல்லது ஒரு இணை துணை வேந்தரை இந்த இரண்டு பல்கலைக்கழகங்களுக்கும் சிறிது காலத்திற்கு நியமிக்கலாம் என்ற யோசனையையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–05

அண்ணா பல்கலைக்கழகம் இன்றைக்கு ஆராய்ச்சித் துறையிலே மிக வேகமாக வளர்ந்து வருகின்ற ஒரு பல்கலைக்கழகம். அதே நிலையைப் போன்று, தரமான ஆசிரியர்களைத் திருச்சியிலும், கோயம்புத்தூரிலும் நீங்கள் நியமிக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்வு வைக்கின்றபோது, இந்த மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் வினாத்தாள்கள் தயார் செய்கின்றபோது, ஒரே மாதிரியான பாடத் திட்டங்களும், ஒரே மாதிரியான வினாத்தாள்களும் வைத்து, அதில் அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய தரம் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்குப் பல்கலைக்கழகங்கள் ஆங்காங்கே ஒவ்வொன்றாகத் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இரண்டு தினங்களுக்கு முன்னாலே பத்திரிகையிலே பார்ப்போமேயானால், ஒரு பல்கலைக்கழகம்,—நான் பெயரைக் குறிப்பிட-விரும்பவில்லை— +2 fail ஆன மாணவர்கள்கூட திரும்பவும் உயர் கல்வி படிப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்யப் போகிறோம் என்று சொல்கிறார்கள். +2 fail ஆனவர்களை எந்த அடிப்படையிலே அந்தப் பல்கலைக்கழகம் சேர்க்கும் என்று தெரியாமல் பத்திரிகையிலே செய்தி கொடுக்கிறார்கள். +2 fail ஆனவர்களை நாங்கள் மேல்படிப்புகளுக்குச் சேர்த்துக் கொள்ளப் போகிறோம் என்று அறிவித்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலையெல்லாம் இந்த Technical பல்கலைக்கழகத்திலே உருவாகாமல், சீரோடும், சிறப்போடும் இருக்கின்ற இந்த அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய புகழ் மங்காமல், இந்த மூன்று பல்கலைக்கழங்களோடு மதுரையிலும் ஒன்று ஏற்படுத்த நீங்கள் அதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டத்திலே 60–க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. திருவள்ளூர் மாவட்டத்திலே 60–க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. நீங்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தோடு திருவண்ணாமலையைச் சேர்த்திருக்கிறீர்கள், விழுப்புரத்தைச் சேர்த்திருக்கிறீர்கள், வேலூரைச் சேர்த்திருக்கிறீர்கள்.

[திரு. டி. சுதர்சனம்] [2006 டிசம்பர் 7

இதிலே 150-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் வரும். அதிலே விழுப்புரம் மாவட்டம் திருச்சிக்குப் பக்கத்திலே இருக்கிறது. அதேபோன்று, திருவண்ணாமலை மாவட்டம் திருச்சிக்குப் பக்கத்திலே இருக்கிறது. அந்த இரண்டு மாவட்டங்களைத் திருச்சியோடு சேர்த்து, குறைந்தபட்சம் 100 கல்லூரிகளுக்குமேல்—ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் 100 முதல் 120 கல்லூரிகளுக்கு மேல் போகாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, இந்த அண்ணா பல்கலைக்கழக திருத்தச் சட்டமுன்வடிவுகளை வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகளவில் இருக்கின்ற பல்கலைக்கழகங்களில் பிரசித்தி பெற்றதும், இந்திய அளவில் ஏழாவது இடத்திலும், தென்னிந்திய அளவில் I.I.T.-க்குப் பிறகு இரண்டாவது இடத்திலும் இன்றைக்கு சிறப்பு வாய்ந்த பல்கலைக்கழகமாக நம்முடைய அண்ணா பல்கலைக்கழகம் விளங்கிக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட பல்கலைக்கழகத்திலே பயில்கிற மாணவர்கள் இன்றைக்கு உலகத் தரம் வாய்ந்தவர்களாக, உலகிலே பல்வேறு நாடுகளிலே பணிக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த பல்கலைக்கழகத்தை இன்றைக்கு மூன்றாகப் பிரிப்பதன்மூலம், நிர்வாக வசதிக்காகப் பிரிப்பதன்மூலம் இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய தரம் குறைந்துவிடுமோ என்று அஞ்சத் தோன்றுகிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், மூன்று பல்கலைக்கழகங்களாகப் பிரிக்கின்றபொழுது அரசுக்கு எவ்வளவு கூடுதல் நிதிச் சுமை ஏற்படும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு இடத்தைத் தேர்வு செய்வது, பல்கலைக்கழக அமைப்பை உருவாக்குவது, அதற்கான துணை வேந்தர்களை நியமிப்பது, அங்கேயிருக்கிற அலுவலர்களை நியமிப்பது என்று இப்படி அரசிற்குக் கூடுதலாகச் செலவினங்கள் ஏற்படும்.

அதே வேளையிலே, மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் மூன்று பாடத் திட்டங்கள், மூன்று தேர்வு முறைகள் என்று, அவர்களுக்குக் கல்விச் சூழ்நிலைக்கேற்ப இந்தப் பல்கலைக்கழகங்கள் தேர்வுகளை நடத்துவதற்கு வாய்ப்புகள் ஏற்படும். அப்படி ஏற்படுகிறபொழுது சென்னையைத் தவிர்த்து, திருச்சி, கோயம்புத்தூரிலே உருவாக்கப்படுகிற பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கும், இங்கே அண்ணா பல்கலைக்கழகத்திலே பயில்கிற மாணவர்களுக்கும் வித்தியாசங்கள்



2006 டிசம்பர் 7] [திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்]

ஏற்படும். இன்றைக்கு உலகத்திலிருந்து பல்வேறு பன்னாட்டு கம்பெனிகள் தமிழகத்திலேயும், இந்தியாவிலேயும் பல கோடி ரூபாய் முதலீடு செய்து தொழிற்சாலைகளை நடத்தி, இங்கே campus interview மூலம், வளாக நேர்முகத் தேர்வுக்கு வருகிறபொழுது அவர்கள் சென்னையில் இருக்கிற அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து தேர்வு செய்கிறார்களே தவிர, திருச்சிக்கும், கோவைக்கும் சென்று மாணவர்களைத் தேர்வு செய்கிற வாய்ப்பு மிக மிகக் குறைவு என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அதனால் அந்தப் பகுதியில் இருக்கிற கிராமப்புறத்து ஏழையெளிய மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சிறுபான்மைச் சமுதாயத்து மாணவர்களுக்குக் கிடைக்கிற ஒரு சில வேலைவாய்ப்பும் இதனாலே பறிபோய்விடும் என்பதனை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே 240-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றிலே ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 1,05,000 மாணவர்கள் பொறியாளர்களாக வெளியிலே வருகிறார்கள். அப்படி வெளியிலே வருகிற மாணவர்களில் 4 சதவீத அளவிற்கே அவர்கள் வேலைவாய்ப்பிலே பணி நியமனம் பெறுகிறார்கள். ஆக, எஞ்சிய 96 சதவீத மாணவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். இதற்காகக் கடந்த கால ஆட்சியிலே எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களுக்கான வேலைவாய்ப்பு என்பது இன்றைக்குக் கேள்விக்குறியாகவே இருக்கிறது. எனவே, நம்முடைய கலைஞருடைய அரசாவது, பொறியியல் கல்லூரிகளில் படிக்கிற அந்த ஏழையெளிய மாணவர்களுடைய நலன் கருதி அந்த மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகிற விதத்திலே பல்வேறு திட்டங்களை உருவாக்கி, அந்தப் பொறியியல் கல்வி பயின்ற மாணவர்களுடைய தாய், தந்தையர்களின் மனம் குளிர்கின்ற அளவுக்கு ஒரு திட்டத்தை உருவாக்கி அவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

இன்றைக்கு, வசதி வாய்ப்புள்ள மாணவர்கள் சென்னையிலே அண்ணா பல்கலைக்கழகத்திலே படிக்க முனைவார்களே தவிர, திருச்சிக்கோ, கோயம்புத்தூருக்கோ போக மாட்டார்கள். எனவே, இந்தப் பல்கலைக்கழகத்திலே படிக்கிற மாணவர்களுக்குத்தான் கூடுதலான வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, பல்கலைக்கழகத்தைப் பிரிப்பதால் பெயரளவிற்கு மட்டுமே பல்கலைக்கழகம் இருக்குமே தவிர, அது தரம் வாய்ந்ததாகவோ,

தகுதியானதாகவோ வருவதற்குப் பல ஆண்டுகள் ஆகும். எனவேதான், இந்த அண்ணா பல்கலைக்கழகம் தொடர்ந்து நீடிக்க அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே வேளையில், நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தைப் பற்றி அரசின் கவனத்திற்குச் சில செய்திகளைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே அதிக அளவில் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் உருவாகி வருகின்றன. இவை, கல்விச் சேவைக்காக அல்லாமல், கல்வியின் பெயரால், சுரண்டலுக்கும், வியாபாரப் பொருளாக வணிகத்திற்கும் கல்வி பயன்படுத்தப்படுகிறது. இவை, தங்கள் விருப்பப்படி கட்டணத்தை வசூலிப்பது, பாடத் திட்டங்களை அமைத்துக்கொள்வது, வினாத்தாள்கள், தேர்வு முறை, தேர்ச்சி போன்ற எல்லாவற்றையும் அவர்கள் விருப்பத்திற்கேற்ப வைத்துக்கொள்கிறார்கள். அரசு இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அரசுக்குக் கட்டுப்பட, சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுச் செயல்பட உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். நெறிப்படுத்தி, கல்விச் சேவை நோக்கத்திற்காக இயங்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, தகுதியும், பெருமையும் வாய்ந்த அண்ணா பல்கலைக்கழகத்தைப் பிரிப்பது, அரசிற்குப் பொருட்சுமையை அதிகப்படுத்தும். எனவே, இந்த நேரத்தில் இது அவசியம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று, மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகம் விரிவாக்கம் என்பது வரவேற்கத்தக்கது. குறிப்பாக அதிலே சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம், இதிலே முன்னுரை என்பதில், இரண்டாம் பத்தியில் ஒரு கருத்து வருகிறது. "இது, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள திருச்சிராப்பள்ளி, கடலூர், கன்னியாகுமரி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், பெரம்பலூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியிருக்கிற பரப்பிடத்தை அளாவி நிற்கும்" என்று திருச்சிராப்பள்ளியிலுள்ள பல்கலைக்கழகம் சம்பந்தமாக, அண்ணா பல்கலைக்கழகம் சம்பந்தமாக குறிப்புரை இருக்கிறது. இதிலே நான் குறிப்பிட விரும்புவது, கோவையிலும், திருச்சியிலும் அமைவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதே சமயத்தில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் உள்ளடக்கியிருக்கிற பகுதியில் தனியாக





ஒரு அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கையையும் நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்தில், தனித்தனியாக இப்படி இருப்பதன்மூலம், இதனுடைய கல்வித் தரத்தில் ஏதும் ஊனம் ஏற்படுமோ என்கிற ஐயம் ஏற்படாத வகையில், இவற்றை ஒருங்கிணைப்பதற்கு உரிய ஏற்பாட்டினையும் செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவுகளை வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கு ஏற்ப, இந்தப் பல்கலைக்கழகத்தை மூன்றாகப் பிரித்து, சென்னையிலே மையமாகக் கொண்டிருக்கிற சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில், சென்னை மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், விழுப்புரம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 105 கல்லூரிகளும், கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகத்தில், கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், நீலகிரி, தேனி, தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம் ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள 53 கல்லூரிகளும், திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகத்தில், திருச்சிராப்பள்ளி, கடலூர், கன்னியாகுமரி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், பெரம்பலூர், திருவாரூர் ஆகிய 14 மாவட்டங்களிலேயிருந்து 75 கல்லூரிகளும் இணைக்கப்பட்டு, புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன.

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தப் பல்கலைக்கழகங்களுக்கு உடனடியாக Special Officers —தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, இந்த இரண்டு நிர்வாகங்களும் அவர்களுடைய ஆளுமையின்கீழே கொண்டு வரப்படும். இங்கே பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த செந்தமிழ்ச்செல்வன் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, இதில் ஏதோ செலவாகும், இங்கே அதிகத் தொழிற்சாலைகள் உருவாகிற காரணத்தினால், சென்னைக்குத்தான் வர முடியும் என்றெல்லாம் எந்த அடிப்படையிலே சொன்னார் என்று தெரியவில்லை.

பிற்பகல் 1–15

ஏனென்றால், தொழிற்சாலைகளே தெற்கே வர வேண்டும், திருச்சியிலே வர வேண்டும், மதுரையிலே வர வேண்டும் என்று காலையிலேயிருந்து

முதல்வரிடம் வேண்டுகோளை வைக்கிற நாம், பல்கலைக்கழகங்கள் திருச்சிக்கும், கோவைக்கும் செல்வது கூடாது, சென்னையிலேயே இருக்க வேண்டுமென்று சொல்வது எந்த அளவில் பொருத்தம் என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சென்னையிலுள்ள பல்கலைக்கழகத்திலே இப்பொழுது கல்லூரிகளுடைய எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிற காலக்கட்டத்தில்--முதலிலே இருந்த கல்லூரிகளுடைய எண்ணிக்கை குறைவு. கல்லூரிகள் விரிவடைகிறபொழுது இதுபோன்ற மாற்றங்கள் ஏற்படுவது இயற்கை.

தமிழ்நாடு முழுவதும் சென்னைப் பல்கலைக்கழகத்திலேதான் இருந்தது. இப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் எனப் பல்வேறு பல்கலைக்கழகங்கள் உருவாவது என்பது காலத்தின் கட்டாயம். அதுபோன்று, Technical Universities என்று சொல்லுகிறபொழுது, அவற்றையும், ஒரே மையமாக இருந்து, 200, 250-க்கு மேற்பட்ட கல்லூரிகளைப் பார்வையிடுவது என்பது, நிர்வாகத்தின் அடிப்படையிலே முடியாத ஒன்று. ஆகவே, அந்த அடிப்படையிலேதான், இதுபோன்று பிரிக்கப்பட்டு, இந்தக் கல்லூரிகள் பல்வேறு இடங்களிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இது மதுரையிலேயும் வர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். முதல்வரிடம் அது பற்றிக் கலந்து பேசி, அதற்கான ஏற்பாடுகள், விரிவாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய கல்வித் தரம் குறையாத அளவிற்கு, ஒரே மாதிரியான பாடத் திட்டம் போன்றவையெல்லாம் இருக்க வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருந்தாலுங்கூட, அதற்குத்தான் இந்த அரசு, முதலிலேயே Common University Act—பொதுவான பல்கலைக்கழகச் சட்டம் ஒன்றைக் கொண்டு வர வேண்டுமென்ற முடிவினையும் எடுத்து, அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது.

மேலும், இங்கே நேற்று நிறைவேற்றப்பட்ட சட்டத்தைக் குறித்து ஒரு சிறு விளக்கத்தை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், மாணவர்களுக்கும் பல்வேறு இடங்களிலே சில ஐயப்பாடுகளை உருவாக்கி, இன்று பத்திரிகைகளில்கூட அந்தச் செய்திகளெல்லாம் வந்திருக்கின்றன. குறிப்பாக, நேற்று அந்த Normalisation process என்று நாம் சொல்லுகிறபொழுது, நீதிமன்றத்திலே நம்முடைய சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட சட்டம். ஏனென்றால், 2005-லே ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு—அப்பொழுது சட்டமாகக் கொண்டு



வரப்படவில்லை, ஒரு ஆணையாக, Executive Order-ஆகக் கொண்டு வரப்பட்டது. நீதிமன்றத்திலே சென்றபொழுது, அது Executive Order-ஆக இருக்கிற காரணத்தினால், சட்டம் கொண்டு வாருங்கள் என்று 2005-லே அதை மறுத்துவிட்டார்கள். பிறகு 2006-லே சட்டம் கொண்டு வரப்பட்டபொழுது, இது அரசியலமைப்புச் சட்டம் 14-க்கு எதிர்ப்பாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, அந்தச் சட்டம் 14-க்கு எதிர்ப்பாக இல்லை என்பதை நிரூபிப்பதற்காகத்தான், இந்த Normalisation process-ஐக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதிலே சில ஐயப்பாடுகளும் எழுவது நியாயம்தான். CBSE மாணவர்கள் 5,000 பேர், அவர்களுக்கு இதிலே வாய்ப்புக் கிடைக்குமா என்ற ஓர் ஐயப்பாடு ஏற்படுகிறது. ஆனால், அது தவறான ஒன்று. ஏனென்று சொன்னால், அதைப் புள்ளிவிவரத்தோடு நான் இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு State Board-லே கணக்கிலே பெற்ற first mark 100. CBSE-லே அதே 100 தான். Physics-லே 100. CBSE-லே அதே 100 தான். Chemistry-லே 100, CBSE-லே அதே 100 தான். Biology-லே State Board-லே 100, CBSE-லே 99. அதனாலே Normalisation என்பது, பொதுவாக எழுதுகிற அனைவருக்கும் ஒன்று என்று நீதிமன்றம் கேட்டிருப்பதன் அடிப்படையில், நாம் சொல்லியிருக்கிற சட்டத்திலே உட்பிரிவாகக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, ஏதோ CBSE-லே இருப்பவர்களுக்கெல்லாம் அனுகூலமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே கொண்டு வரப்பட்ட சட்டம் அல்ல. ஒரு காலக்கட்டத்திலே, CBSE-லே 100 மார்க் வாங்கி, State Board-லே 90 மார்க் வந்தது என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்பொழுது State Board-லே இருக்கிற மாணவர்களுக்குக்கூட, அந்த equalisation, அந்த normalisation process-லே வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இது பொதுவாக, நீதிமன்றம் சென்ற முறை சுட்டிக்காட்டியிருக்கிற தவறுகளையெல்லாம் நிவர்த்தி செய்து, முதல்வர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் உடனடியாக, வேகமாக முடிவு எடுக்க வேண்டுமென்று எண்ணினார்களே தவிர, உடனடியாக ஒரு hasty decision—He wanted to take a quick decision but not a hasty decision என்ற அடிப்படையிலேதான், ஒரு Committee-ஐ நியமித்து, இதிலே கொடுத்த பல்வேறு நீதித் தீர்ப்புகளையும் ஆராய்ந்து, அந்தச் சட்ட வடிவோடு இதை எடுத்திருக்கிறார்கள்.

மற்றொன்று, மாணவர்களுக்கு இருக்கிற மற்றொரு ஐயப்பாடு—ஏனென்றால், பத்திரிகைகள்கூட எழுதிக்கொண்டிருக்கின்றன—இந்தத்

தேர்வுகள் எல்லாம், ஏதோ நுழைவுத் தேர்வு மிகவும் strict–ஆக நடந்ததைப்போலவும், +2 தேர்வுகள் எல்லாம் கொஞ்சம் அதிகமான, அதிலே ஏதோ முறைகேடுகள் நடக்கும் என்றுகூடச் சொன்னார்கள். நேற்று நானும், அமைச்சர் தென்னரசு அவர்களும் B.T. Assistant சங்கத்தையும், அதேபோல, தலைமை ஆசிரியர்கள் சங்கத்தையும்கூட அழைத்துப் பேசி, அரசுத் துறை அதிகாரிகளையெல்லாம் கலந்து பேசி, இந்த அரசு ஒரு முடிவெடுத்திருக்கிறது. குறிப்பாக ஒரு மாவட்டத்திலிருந்து, பக்கத்து மாவட்டத்திற்கு invigilators—அந்தத் தேர்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்குக் கண்காணிப்பாளர்களாக நியமிப்பது என்ற முடிவையும் எடுத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கிற மற்றொரு பயம், ரொம்ப strict-ஆக exams வைத்தால் எல்லோரும் fail ஆகிவிடுவோமோ என்கிற மன உணர்வு சில இடங்களிலே உருவாகியிருக்கிறது. அதற்கேற்ப, நேற்று அதே கூட்டத்திலேயே கலந்து பேசி, கடந்த காலங்களிலே முதன்முதலிலே H.S.C. உருவாகும்போது, theory–லே 20 மார்க் இருந்து, practical–லே 50 மார்க் இருந்தால்தான்—மினிமம் மார்க் 70 தான். அது மாறவில்லை. அந்தக் குறைந்தபட்ச மதிப்பெண் 70 ஆக இருந்து, எழுத்துத் தேர்விலே 20–ம், நடைமுறைத் தேர்விலே 50–ம் பெற்றிருந்தால்கூட பாஸ் என்று முதலிலே இருந்தது. ஆனால் நடுவிலே, இடைக்காலத்திலே, எழுத்துத் தேர்விலே 40 மதிப்பெண்களும், practical–லே மீதி எவ்வளவு இருந்தாலும் பரவாயில்லை. மினிமம் 70 இருக்க வேண்டும் என்று மாற்றப்பட்டது. இதனால், கிராமப்புறத்து மாணவர்கள் பலர் தேர்ச்சி பெற முடியாமல், இன்னும் இந்த 40, 30 வாங்குகிறவர்களெல்லாம் pass–க்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்கள், M.B.B.S.–க்கோ, Engineering–க்கோ வர வேண்டும் என்கிற எண்ணம் இல்லாத மாணவர்கள்தான். அதனால்தான், நேற்று நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், நானும் கலந்துகொண்டு, அந்தப் பல்வேறு சங்கங்களுடைய பிரதிநிதிகளையெல்லாம் அழைத்துப் பேசி, அதிலேயும்கூட அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த 40 என்பதை 30ஆகக் குறைத்து, எழுத்துத் தேர்விலே 30 மார்க்கும், practical–லே மீதி மார்க்கும் வாங்கினால்கூட, 70 மினிமம் என்பதைக் குறைக்கவில்லை. 30, 40 இருந்தாலும் போதும்.

பிற்பகல் 1–20

அதனால் தேர்ச்சி சதவிகிதம் அதிகரிப்பதற்கு வாய்ப்பு இருக்கும். கல்லூரிகளுக்கு வருகிற கிராமப்புறத்து மாணவர்களுக்கு வாய்ப்பு



அதிகரிக்கும் என்ற எண்ணத்தோடு இந்த அரசும் அந்த முடிவை எடுத்திருக்கிறது. ஆகவே, நுழைவுத் தேர்வைப் பொறுத்தவரையில் நீண்ட விவாதத்திற்குப் பிறகு, ஒரு குழு கொடுத்த அறிக்கைக்குப் பிறகுதான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். வேறு யாரேனும் நீதிமன்றத்திற்குச் சென்றாலும், அதை எதிர்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. ஆகவே, மாணவர்களோ, மற்றவர்களோ இது குறித்து எந்தவிதமான ஐயமும் கொள்ளத் தேவையில்லை. நிச்சயமாக இந்த அரசு உளப்பூர்வமாக இதை நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்து, மாமன்றத்தின்மூலமாக மாணவர்களுக்கும் தெளிவாக்க விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நுழைவுத் தேர்வு சம்பந்தமாக ஒரு விளக்கத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நேற்றும் சொன்னார்கள். நேற்றுகூட நாங்கள் அதை வரவேற்றுப் பேசுகின்ற நேரத்தில், மாணவர்கள் மதிப்பெண் சமப்படுத்துவது பற்றி ஒரு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டோம். தெளிவான விளக்கத்தையும் அளித்தார்கள். இன்றுகூட எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், இந்த சமப்படுத்துவதனால் கிராமப்புற மாணவர்கள், அதிலும் குறிப்பாக மாநில கல்வி பாடத் திட்டத்தில் பயிலக்கூடிய மாணவர்கள் பாதித்துவிடக் கூடாது. குறிப்பாக, மத்திய கல்வி நிறுவனங்களில் பாடத் திட்டத்தில் படிக்கிற C.B.S.E. மாணவர்கள், குறைந்த எண்ணிக்கையில் இருப்பவர்கள் அதிக மதிப்பெண் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். அவர்கள் எல்லாம் நகர்ப்புறத்தில் படிப்பவர்கள். உயர்த்தட்டு மக்கள். அந்த வாய்ப்பு அவர்களுக்கு அதிகமாகப் போய், கிராமப்புற மாணவர்களுக்கு, மாநில அரசு பாடத் திட்டத்திலே படிக்கக்கூடிய ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதிகம் பாதித்துவிடக் கூடாது என்ற வேண்டுகோளையும் முன்வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையில் சமப்படுத்தும் முறையில் ஏழையெளிய மாணவர்களுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளைத் தவிர, வேறு ஒன்றும் அல்ல என்பதை மீண்டும் ஒரு முறை வலியுறுத்தி, பாதிப்பு இல்லாமல் அதை நிறைவேற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கின்றேன்.

[2006 டிசம்பர் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2006 டிசம்பர் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 10. அறிவிப்புகள்

### (அ) திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2006) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (உ) திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசின் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) 2006 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2006), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2006) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 67 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 67 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 7-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1–25

## 10. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

[பேரவைத் தலைவர்] [2006 டிசம்பர் 7

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

### (ஊ) கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசின் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) 2006 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2006), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/ 2006)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 67 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 67 வரை, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 7-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2006 டிசம்பர் 7] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 11. மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க இயலாதிருந்த ஊராட்சிகளுக்குத் தேர்தலை நடத்தி, தலைவர்களைத் தேர்வு செய்தும், உயர் நீதிமன்றத்தில் தமிழில் வழக்காடுவதற்கு வழிவகையும் செய்த முதலமைச்சருக்குப் பேரவைத் தலைவரின் பாராட்டும், நன்றியும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று அவை முடியும் நேரம். பேரவையின் சார்பாக ஒரு முடிவுரை சொல்ல விரும்புகின்றேன்.

கடந்த பத்தாண்டுகளாக ஜனநாயக முறையில் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க இயலாதிருந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய பஞ்சாயத்துகளுக்கு சமத்துவப் பெரியார், முத்தமிழறிஞர், தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், அனைத்துத் தரப்பு மக்களின் ஒத்துழைப்போடு தேர்தலை நடத்தி, தலைவர்களையும் தேர்வு செய்து, தாழ்த்தப்பட்டோர் உரிமைகளை நிலைநாட்டி, ஜனநாயகம் தழைத்தோங்கச் செய்தார்கள்.

இதேபோன்று, நேற்றையதினம் சாமானிய வழக்கறிஞரும் தன் தனித் திறமை வெளிப்பட தனது தாய்மொழி தமிழில் உயர் நீதிமன்றத்தில் வழக்காடுவதற்கு வழிவகை செய்யும் சரித்திரப்புகழ் வாய்ந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நானும் ஒரு வழக்கறிஞன் என்ற முறையில் பாராட்டுதல்களை என் சார்பிலும், உறுப்பினர்கள் சார்பிலும் தெரிவித்துக் கொள்வதோடு இவையனைத்தும் பொன் எழுத்துக்களால் வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டும் என்பதை இந்த நல்ல தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோன்ற நற்பணிகளைத் தொடர்ந்து, இடையறாது, இடைவிடாது, தளராது நாள்தோறும் ஆற்றி வரும் என் குடும்பத் தலைவரை இவ்வேளையிலே வணங்குகிறேன். மேலும், அவை ஆரம்பிக்கும் நேரம் முதல் அவை முடியும் நேரம் வரை அவையில் அமர்ந்து தேவையான விளக்கங்களையும், ஆழமான கருத்துகளையும் அரசின் சார்பில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்ததோடு மட்டுமின்றி, இன்றையதினம் கேள்வி நேரத்தில் சுமார் 31 நிமிடங்கள் உறுப்பினர்களது வினாக்களுக்குப் பதிலுரை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், கடந்த 4 நாட்கள் நடைபெற்ற பேரவைக் கூட்டம் சுமுகமாக நடைபெற உதவிய அமைச்சர்கள், உறுப்பினர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.



## 9. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளாச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

16. பங்களிப்புத் தொகை மதிப்பீடு செய்தல், விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் (அநி.4-2) துறையின் 26-7-2006 ஆம் நாளிட்ட 152 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

[2006 டிசம்பர் 7

[1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமய நிறுவனங்கள் (அசையாச் சொத்தினைக் குத்தகைக்கு விடுதல்) விதிகளுக்கு திருத்தங்களை செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் (அநி.4–2) துறையின் 28–7–2006 ஆம் நாளிட்ட 155 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

18. யாதொரு வணிகர் உயர்வேக டீசல் எண்ணெய் விற்பனைமீது செலுத்தத்தக்க வரிவீதத்தை 25 சதவீதத்திலிருந்து 23.43 சதவீதமாக 12–6–2006 ஆம் நாள் முதல் குறைத்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவு (பி2)த் துறையின் 11–6–2006 ஆம் நாளிட்ட 52 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

19. யாதொரு வணிகர், "நாட்டுப் படகுகள் மற்றும் இயந்திரப் படகுகளில் படகுக்கு வெளியே பொருத்தப் பயன்படுத்தப்படும் மோட்டார்கள் மற்றும் ஏனைய துணைப்பாகங்கள்" 31–12–2004 ஆம் நாளிட்ட வருவாய் (என்.சி.III) துறையின் 581 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நபர்களின் மறுவாழ்விற்காக விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 12–7–2006 ஆம் நாளிட்ட 63 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

20. (i) 1-10-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் II - பிரிவு 1-ல் வெளியிடப்பட்ட வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 15-9-1997 ஆம் நாளிட்ட II(1)/வணிக வரி அறநிலையத் துறை/70/97 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்தும், (ii) 1–10–1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் II - பிரிவு 1-ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 15-9-1997 ஆம் நாளிட்ட II (1) / வணிக வரி அறநிலையத் துறை/71/97 ஆம் எண் அறிவிக்கையில்



2006 டிசம்பர் 7]

மாற்றம் செய்தும் மற்றும் (iii) 1–10–1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் II- பிரிவு 1-ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 15–9–1997 ஆம் நாளிட்ட II (1) / வணிக வரி அறநிலையத் துறை/72/97 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவு (பி2) துறையின் 17–7–2006 ஆம் நாளிட்ட 66 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

21. சென்னை, திருவாளர்கள் புளூ கிராஸ் இந்தியா நிறுவனத்துக்கு TN 07 AE 4667 என்ற பதிவு எண்ணுடைய சிகிச்சை ஊர்தியை விற்பனை செய்வதன்மீது செலுத்தத்தக்க விற்பனை வரி மற்றும் மேல் வரியினை விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவு (பி2) துறையின் 19–7–2006 ஆம் நாளிட்ட 69 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. ஏதேனும் வணிகர், உடைக்கப்பட்ட பயறு வகைகள் மற்றும் பருப்புகள் அவற்றின் மேல் தோல் தூள் ஆகியவை உட்பட பயறு வகைகள் மற்றும் பருப்புகளின் விற்பனைமீது, ஓராண்டில் அவை ஒவ்வொரு இனத்தின் விற்பனைத் தொகை ரூபாய் முந்நூறு கோடிக்கு மிகாமல் விற்பனை செய்வதின்மீது செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தது குறித்தும் (ii) ஏதேனும் வணிகர் சுத்திகரிக்கப்பட்ட பனை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பருத்திக்கொட்டை எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அரிசி தவிட்டு எண்ணெய் ஆகியவை உட்பட, தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், பருத்திக்கொட்டை எண்ணெய், அரிசி தவிட்டு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அனைத்து எண்ணெய்கள் ஆகியவற்றின் விற்பனை தொகை ரூபாய் முன்னூறு கோடிக்கு மிகாமல் செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தும் (iii) வணிக வரித் துறையில் வெளியிடப்பட்ட 29–5–2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம் – II (1)/வணிக வரி / 30 (a-2)/2003 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்தும் (iv) கோயம்புத்தூர் மற்றும் குன்னூரில் உள்ள ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தும் (v) குன்னூரில் உள்ள "டீ சர்வ்" ஏல மையத்தில் செய்யப்படும் மாநிலங்களுக்கு இடையிலான தேயிலை விற்பனை மீது செலுத்தத்தக்க வரிவீதத்தை 'சி' அல்லது 'டி' படிவம் அளிப்பதற்கு

உட்பட்டு, வரியினை குறைத்தும் (vi) கோயம்புத்தூர் மற்றும் குன்னூரில் உள்ள ஏல மையங்களில் மாநிலங்களுக்கிடையிலான தேயிலை விற்பனை மீது செலுத்தத்தக்க வரி வீதத்தை 'சி' அல்லது 'டி' படிவம் அளிப்பதற்கு உட்பட்ட வரியினை குறைத்தும் (vii) குன்னூரில் உள்ள "டீ சர்வ்" ஏல மையம் உட்பட, கோயம்புத்தூர் மற்றும் குன்னூரில் உள்ள ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலை தொடர்பான வரிவிதிக்கத்தக்க விற்பனைத் தொகைமீது செலுத்தப்படும் கூடுதல் விற்பனை வரியினை விலக்களித்தும், (viii) "டீ சர்வ்" ஏல மையம் உட்பட கோயம்புத்தூர் மற்றும் குன்னூரில் உள்ள ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலை விற்பனைமீது செலுத்தத்தக்க வரியின் மீது மேல் வரியினை விலக்களித்தும் (ix) 1959 ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் விவர அட்டவணையில் திருத்தங்கள் செய்தது குறித்தும் மற்றும் (x) செங்கல் தயாரிப்பாளர்கள் வாங்கும் எரி சாம்பல்மீது ஏதேனும் வணிகர் வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 27-7-2006 ஆம் நாளிட்ட 71 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

23. 29-10-2004 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் 2-ல் பிரிவு 1-ல் வெளியிடப்பட்ட வணிக வரித் துறையின் 29-10-2004 ஆம் நாளிட்ட II (1) / வணிக வரிகள்/71(பி) 2004 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றங்களை செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 26-7-2006 ஆம் நாளிட்ட 77 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

24. காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர், இருங்காட்டுக் கோட்டையில் திருவாளர்கள் ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் கார்கள் மற்றும் துணை பாகங்கள்மீது செலுத்தத்தக்க கூடுதல் வரியினை விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 23-8-2006 ஆம் நாளிட்ட 89 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1970 4(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].





25. கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிரந்தர வீடுகள், பள்ளிகள், பால்வாடிகள், அங்கன்வாடிகள் போன்ற கட்டமைப்புகளையும் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியாளர்களால் அதிகாரம் அளிக்கப்பட்ட அரசு சாரா அமைப்புகளுக்கு கட்டுமானப் பொருட்களை விற்பனை செய்வதன்பேரில் ஒவ்வொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியிலிருந்து வரையறுக்கப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு உட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 23-8-2006 ஆம் நாளிட்ட 90 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

26. யாதொரு வணிகர், நாகப்பட்டினத்தில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையை மீண்டும் கட்டுவதற்காக திருவாளர்கள் சாந்தி மோகன் சாரிடபிள் டிரஸ்ட், சென்னை நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிதழை தாக்கல் செய்வதற்குட்பட்டு, விற்பனை செய்யப்படும் அறிவிக்கையின் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்த வேண்டிய வரியினை விலக்களித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 23-8-2006 ஆம் நாளிட்ட 91 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. மங்களூர், ரீபைனரி பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் அல்லது 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் மறு விற்பனைக்காக யாதொரு உள்ளூர் பகுதிக்குள் கொண்டுவரும்போது அந்நிறுவனம் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (சி2) துறையின் 5-9-2006 ஆம் நாளிட்ட 98 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான நுழைவு வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

28. வணிக வரி மற்றும் பதிவுத் துறையில் வெளியிடப்பட்ட 22-7-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-2 பிரிவு 1-ல் வெளியிடப்பட்ட-II(1) வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறை / 29(b-1)/2006 ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்தும் (ii) கருப்புக்கட்டித் தூள் மற்றும் நாட்டுச் சர்க்கரை உட்பட,

கருப்புக்கட்டி, வெல்லம் ஆகிய பொருட்களின் விற்பனை மீதான மொத்த வியாபாரத் தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் முன்னூறு கோடிக்கு மிகாமல் இருக்கும் ஏதேனும் வணிகர் செலுத்த வேண்டிய வரியினை விலக்களித்தது குறித்தும் (iii) மாநிலத்தில் கடைசி கொள்முதல் முனையில், ஏற்கெனவே வரி விதிக்கப்பட்டுள்ள பழைய அல்லது பயன்படுததப்பட்ட கண்ணாடி புட்டிக்களின் விற்பனைமீது ஏதேனும் வணிகர் வரி ஏதும் செலுத்தத் தேவையில்லை என்றும் (vi) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் விவர அட்டவணையில் திருத்தங்களைச் செய்தது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 6-9-2006 ஆம் நாளிட்ட 100 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

29. உலக வங்கி இந்த அறிவிக்கையின் எண்ணையும் அதன் பணியாளர் அல்லது பிரதிநிதியின் பெயரையும் அவர்கள் உணவகத்தில் தங்கி இருக்கும் கால அளவையும் குறிப்பிட்டு, அங்கு தங்கியிருப்பது குறித்த சான்றிதழ் ஒன்றை அந்த உணவகத்திற்கு அளிக்க வேண்டும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு தமிழ்நாட்டிலுள்ள உணவகம் ஒன்றில் செய்து கொடுக்கப்படும் ஆடம்பர வசதிகள்மீது உலக வங்கியின் பணியாளர் அல்லது பிரதிநிதிகள் செலுத்த வேண்டிய வரியினை விலக்களித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (சி2) துறை 20-9-2006 ஆம் நாளிட்ட 112 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

30. 9-2-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்-II பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II-(2)/CTRE/428/94 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (சி2) துறையின் 7-11-2006 ஆம் நாளிட்ட 138 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளுக்குள் மோட்டார் வண்டிகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

31. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மது வகைகள் (மொத்த விற்பனை வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (VIII) துறையின்



20-5-2004 ஆம் நாளிட்ட 188 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

32. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மது வகைகள் (மொத்த விற்பனை வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை (VIII) துறையின் 21-7-2004 ஆம் நாளிட்ட 309 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

33. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை (VIII) துறையின் 31-8-2004 ஆம் நாளிட்ட 317 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

34. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மது வகைகள் (மொத்த விற்பனை வழங்கல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (VIII) துறையின் 25-10-2006 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

35. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு (கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (VIII) துறையின் 3-8-2006 ஆம் நாளிட்ட 52 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

36. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒயின் (தயாரிப்பு) விதிகள் இயற்றியது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (III) துறையின் 9-11-2006 ஆம் நாளிட்ட 79 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2006 டிசம்பர் 7

37. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்).

38. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

39. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

40. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

41. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சார சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 105 மற்றும் 104 (4) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

42. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 323 (2)–ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

43. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 323(2)–ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

44. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)



2006 டிசம்பர் 7]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

8. ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள திருவாளர்கள் ஜீவா சேவாலயா தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (சி1) துறையின் 29-9-2006 ஆம் நாளிட்ட 118 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

9. 2006–2007 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

10. 2006–2007 ஆம் ஆண்டிற்கான "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகள் குறித்த அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

11. 2006–2007 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

12. 1997–1998 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

13. 1997–1998 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் குறித்த அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

14. 1997–1998 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

15. பொது கணக்குக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2006–2007)

16. பொது கணக்குக் குழுவின் எட்டாவது அறிக்கை. (2006–2007)

17. பொது கணக்குக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2006–2007)

18. பொது கணக்குக் குழுவின் பத்தாவது அறிக்கை. (2006–2007)

19. பொது கணக்குக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2006–2007)

20. 2006–2007 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ், ஆங்கிலம்)

21. உடுக்குறியிடாத வினாக்கள்-9வி[illegible] (முத[illegible]வது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் [illegible]0 வரை)

227441
சென்னை-600 009

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.